# கல்கி

KALKI 7-1-79

75 காசு







CHAITRA-G-38 REV III-TAM

சென்ற நூற்றாண்டில் சொர்க்க லோகத்தில் ஒரு கமிட்டி மீட்டிங் நடைபெற்றது.

''பாரத நாடு தன் புராதனப் பெருமைகளையெல்லாம் இழந்து, தன்னம்பிக்கை இழந்து அன்னிய ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடக்கிறதே. இதற்கு ஒரு விமோசனம் கிடையாதா?''

''விமோசனம் நிச்சயம் உண்டு. ஆனால் அதற்குத் தேவலோக வாசிகளான நாம் ஒரு தியாகம் செய்ய வேண்டும்.''

''அது எப்படி? நாம் எதைத் தியாகம் செய்வது? இந்தச் சொர்க்க லோகத்தில் தியாகம் செய்ய என்ன இருக்கிறது?''

நாம் செய்த புண்ணியத்தை யெல்லாம் தியாகம் செய்து பாரத புண்ணிய பூமிக்குத் தரலாமே.''

# அறிவொளியால் இருள் அகற்றியவர்

''அது சரி! அதை எப்படித் தருவது? ''புண்ணியமே பாரத நாட்டுக்குப் போ! என்றால் போய்விடுமா?''

''அதற்கு ஒருவழி இருக்கிறது. பாரத நாட்டின் மேம்பாட்டிலும் விடுதலையிலும் அக்கறை கொண்ட நாம் பூவுலகின் பல பாகங்களிலும் போய்ப் பிறந்து அயராது உழைக்க வேண்டும். சொர்க்க வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டும்.

''உலகத்துக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கப் போகின்ற இந்தியா தேசத்துக்கு உழைப்பது தியாகமா? அதுவே இன்பம்.''

இவ்வாறு ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

''இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார் - அந்த
இழிவும் ஒரு பெருமையென்று எண்ணி வாழ்ந்தோம்.''

என்று கவியுள்ளம் குமுறிய காலத்தில் அறிவொளியால் இருளகற்ற பல பெரியார்கள் உலகில் பிறந்தார்கள்.

வரிசையாகக் கொண்டாடப்பட்டு வரும் நூற்றாண்டு விழாக்களைப் பார்க்கும்போது மேற்கூறிய கற்பனை சாத்தியமே என்று தோன்றுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நம் நாட்டில் பலப்பல பெரியார்கள் தோன்றினார்கள். அரசியல், ஆன்மீகம், இலக்கியம், கலைகள், பண்பாடு முதலிய எல்லாத் துறைகளிலும் ஒரு புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தார்கள். ஒரு சிலர் அந்நிய நாட்டில் பிறந்தும் இந்தியாவைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்தார்கள். பாரத நாட்டுக்குத் தொண்டு புரியத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தார்கள். இந்திய மண்ணில் பிறந்தவர்களைவிடச் சிறந்த இந்தியர்களாக எண்ணத்தாலும் செயலாலும் வாழ்ந்தனர். இந்தியக் கலைகளையும், இந்திய நாட்டு ஆன்மீகத் தத்துவங்களையும் உலகமெங்கும் எடுத்துரைத்தார்கள்.

இவற்றில் மிக முக்கியமான பணி கல்வித் துறை மறுமலர்ச்சியேயாகும். மெக்காலே வகுத்த கல்வித் திட்டத்தின் கீழ் நமது நாட்டு மக்கள் அரசாங்க உத்தியோகம்



அருண்டேலும் ஸ்ரீமதி ருக்மிணி தேவியும் மாண்டிசோரி அம்மையாரின் பிறந்தநாள் வைபவத்தின்போது.



பார்க்கவும், குமாஸ்தா வேலை செய்யவுமே திறமை பெற்றார்கள். அரசியல் யந்திரத்தின் ஓர் அங்கமாக அவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

'ஆங்கிலக் கல்விமுறை பாரத நாட்டுக்கு ஒத்து வராது. தேசியக் கல்விமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும். தேசம் சுதந்திரமடைகிற காலத்தில் அதற்குத் தயாராக இருக்கக் கூடிய உயர்மக்களை உருவாக்க வேண்டும்' என்ற தீர்க்க தரிசனத்துடன் பலர் செயல்பட்டார்கள்.

பாரத நாட்டின் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த கல்விமுறைத் திட்டங்களை நாடெங்கும் பரவச் செய்வதற்காக அன்னி பெஸண்ட் அம்மையார் அவர்கள் பல ஊர்களில் புதிய பள்ளிகளையும் கலாசாலைகளையும் நிறுவினார்.

இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து கல்வித்துறையில் ஒரு விழிப்புணர்ச்சி ஊட்டியவர் டாக்டர் அருண்டேல் .

பம்பாயில் ஒரு பள்ளிக்கூடம் துவக்க வேண்டும் என்று பெஸண்ட் அம்மையார் கூறினார். ''எவ்வளவு நாள் அவகாசம் தருவீர்கள்?'' என்று கேட்டார் டாக்டர் அருண்டேல். ''ஒரு மாதம்'' என்று பதில் வந்தது. அதன்படியே ஒருமாத காலத்தில் ஒரு பள்ளியைத் துவக்கிச் சாதனை புரிந்து காட்டினார். இன்று அந்தப் பள்ளி நியூ ஈரா ஸ்கூல் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

மயிலாப்பூர் வேடி சிவஸ்வாமி ஐயர் பள்ளிக்கூடத்துக்கும் மிகப்பல உதவிகள் செய்திருக்கிறார். இன்று ரிஷி வாலி ஸ்கூல் என்று வழங்கும் பள்ளி சென்னை கிண்டியில் டாக்டர் அருண்டேல் அவர்களால் தொடங்கப்பட்டது. அவரது முயற்சியால் தொடங்கப்பட்ட வேறு பல நிறுவனங்களும் உண்டு.

சென்னையில் பெஸண்ட் அம்மையார் தியஸாபிகல் பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தியதோடு குழந்தைக் கல்வி முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய மாண்டிஸோரி அம்மையாரை இங்கு வரவழைத்துக் குழந்தைக் கல்வியிலும் ஒரு சாதனை புரிந்தார்.

'உலகத்துக்கே பாரதநாடு வழிகாட்டியாக விளங்கும். அதற்கு வேண்டிய ஆத்மீக சக்தியும் ஆன்மீக உணர்வும் இந்திய மண்ணுக்கு இருக்கிறது' என்று உறுதியாக நம்பினார் டாக்டர் அருண்டேல். தியஸாபிகல் தத்துவங்கள் கூட இந்துமத சாரத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன என்று கூறியிருக்கிறார். நடைஉடை பாவனைகளில் மட்டுமல்லாமல் சிந்தனையிலும் இந்தியராக வாழ்ந்தவர் அவர்.

ஒருசமயம் பழநிக்குச் சென்றபோது முருகப் பெருமான் சந்நிதியில் அசைவற்று வெகுநேரம் நின்று விட்டாராம். பிறகு ஒரு சமயம் சிதம்பரம் சென்றபோது திருமதி ருக்மிணி தேவியவர்களும் பிறரும் கோவிலைச் சுற்றிப் பார்க்க அவரையும் அழைத்துச் சென்றார்கள். நடராஜ மூர்த்தியின் சந்நிதிக்கு வந்ததும் ''எனக்கு வேண்டியது இங்கே கிடைத்து விட்டது'' என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகராமல் நின்று விட்டார். மற்றவர்கள் ஆலயம் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு வரும் வரையில் நடராஜ மூர்த்தியின் சந்நிதியில் அசைவற்ற மோனநிலையில் நின்று கொண்டிருந்தார் டாக்டர் அருண்டேல். நடராஜ மூர்த்தியின் வடிவம் அவரை அப்படியே ஆட்கொண்டு விட்டது.

ஸ்ரீமதி ருக்மிணி தேவியவர்கள் பரத நாட்டியம் பயில ஆரம்பித்தபோது அதற்கு முழு மனத்துடன் ஊக்கமும் ஆதரவும் அளித்தார். எனவே கலையுலகில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படவும் அவர் மறைமுகமாகக் காரணமாக இருந்தார் என்று கூறுவது மிகையாகாது.

டாக்டர் அருண்டேல் இசைப்புலமை மிக்கவர். பியானோ வாத்தியம் வாசிப்பார். ஆனால் கர்நாடக ஸங்கீதம் அவருக்கு விளங்கியதில்லை. கச்சேரிகளுக்கு ருக்மிணி தேவியுடன் இவரும் சென்றாலும் புரிந்து கொண்டு ரசித்ததில்லை.

''நீங்கள் டைகர் வரதாச்சாரியார் பாடுவதைக் கேட்க வேண்டும்'' என்று ஒருநாள் ருக்மிணி தேவியவர்கள் கூறினார். டாக்டர் அருண்டேலுக்கு உடல்நிலை சரியாக இல்லாத சமயம் அது. டாக்டர் அருண்டேல் பாட்டு கேட்க விரும்புவதாகத் திரு. வரதாச்சாரியாருக்குச் சொல்லியனுப்பினார் திருமதி ருக்மிணிதேவி. டைகர் உடனே வந்துவிட்டார். இரண்டுமணிக்கு வரும்படி சொல்லியனுப்பியிருந்த போதிலும் பகல் பன்னிரண்டு மணிக்கே வந்துவிட்டார் டைகர். ''நான் கொஞ்சநேரம் தூங்கிவிட்டுப் பிறகு பாடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் படுத்துத் தூங்கி விட்டார்

இரண்டு மணிக்கு எழுந்து காப்பி சாப்பிட்டு விட்டு, டாக்டர் அருண்டேல் இருந்த அறைக்குச் சென்றார். உடனே உட்கார்ந்து பாட ஆரம்பித்து விட்டார். முதலில் ராகம் பிறகு தானம் பல்லவி என்று கச்சேரி பாணியில் பாடினார். கண்களை மூடிக்கொண்டு அமைதியாகக் கேட்டார் டாக்டர் அருண்டேல். சற்றுநேரம் சென்றபின் மூடியிருந்த அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. டைகர் அவர்கள் பாடி முடித்ததும் ''இன்றைக்குத்தான் நான் இந்தியாவின் ஆத்மாவைக் கண்டேன்'' என்று உள்ள நெகிழ்ச்சியுடன் கூறினார்.

“மனித சமுதாயத்தின்
காலங்களில் பக்தில்
இன்பமுக்கு காரணம், மிக உயர்ந்த
அறிவாளிகளின் மிக அற்புதமான
அறைகளே!” — எமர்ஸன்
— 'WISDOM' DEC '78
— சம்பத்குமார்

## “உட்கார்ந்தால் உரையாடலாம்”

திரு. ம. மு. விஸ்வநாதன், திரு ''மகரம்'', நான், ஆகிய மூவரும் ஒரு காரணமாக ராஜாஜியைச் சந்திக்கச் சென்றோம்.

உடனடியாக உள்ளே வரும்படி அன்புடன் அழைத்தார் ராஜாஜி. அமரும்படி கூறினார். ஆனால் எங்களுக்கு அந்த மேஜையின் முன்னால் உட்காரத் தயக்கமாகவும் கூச்சமாகவும் இருந்தது. ''நீங்கள் மூவரும் உட்காருவதாக இருந்தால் இன்னும் சிறிது நேரம் உங்களுடன் பேசுகிறேன். உட்கார வில்லையென்றால் உடனடியாகப் போக விடலாம்'' எனக் கூறினார்!

பின்னர் நாங்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததை இந்தப் பிறவியில் என்னால் மறக்க முடியாது!

—ச. முத்துராமலிங்கம்.



இங்கிலாந்து தேசப் புதல்வராகப் பிறந்தும் இந்தியா தேசத்துக்காகப் பரிந்து பேசியதால் ஆங்கிலேயர் அவரைத் தேசபக்தி இல்லாதவர் என்று இடித்துரைத்தார்கள்,

''தேசபக்தி என்னவென்று நான் மிக நன்றாக உணர்ந்திருப்பதால்தான் இந்தியர்களின் தேசபக்தியை மதிக்கிறேன்'' என்று பதில் கூறினார் டாக்டர் அருண்டேல்.

அவர் கடைசியாகச் செய்த காரியம்– 'இந்தியாவுக்கு உடனே சுதந்திரம் கொடுங்களேன்'ன்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தந்தி கொடுத்ததுதான்.

அருண்டேல் அன்பே உருவானவர் என்று பலரும் கூறுகிறார்கள். அவருடைய அன்புள்ளம், பெரியவர், சிறியவர், பட்சிகள், மிருகங்கள், ஜடப் பொருள்கள் அனைத்தின் உள்ளேயும் ஊடுருவி நிற்கின்ற தத்துவத்தைப் பாகுபாடின்றி நேசித்தது. யாரைப் பார்த்தாலும் இவரால் என்ன காரியம் சாதிக்கலாம் என்று எண்ணும் உலகத்தில் இவருக்கு நாம் என்ன உதவி செய்யலாம் என்று தேடித்தேடி உதவுகின்ற பண்பாளராக வாழ்ந்தவர் அவர்.

ஒருசமயம் ஆறுவயதுச் சிறுமியைப் பார்த்து ''நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார். உடனே அவருடைய அன்பில் திளைத்திருந்த அக்குழந்தை ''நான் உங்கள் ஆபீஸில் உதவி செய்யப் போகிறேன்'' என்று பதில் சொன்னாள். அதைக் கேட்டு அவர் சிரிக்கவில்லை. ''நாளைக்காலை ஒன்பது மணிக்கு என் ஆபீஸுக்கு வந்துவிடு'' என்று அச்சிறுமியின் எண்ணத்துக்கு மதிப்புக் கொடுத்துக் கூறிவிட்டுச் சென்றார். காலை சரியாக 9மணிக்கு அச்சிறுமி டாக்டர் அருண்டேலுக்கு உதவி செய்யப் போகிறோம் என்ற பெருமிதத்துடன் அவர் ஆபீஸுக்குக் குதித்துக் கொண்டு சென்றாள். மாடிப்படியில் காத்திருந்தார் அவர். குழந்தை வந்ததும் அவளை அழைத்துக் கொண்டுபோய்த் தம்முடைய காரியதரிசியிடம் ''இன்று முதல் இவள் நமது ஆபீஸில் வேலை செய்யப் போகிறாள். அவளுக்கு உரிய வேலையை ஒதுக்கிக் கொடுத்துவிடு'' என்று கூறிச் சென்றார்.


காரியாலயத்தில் அனைவருமே சற்றுத் திகைத்தார்கள். அச்சிறுமிக்கு என்ன வேலை தருவது என்று யோசனை செய்தார்கள். கடைசியில் ஒரு வேலையும் தந்தார்கள். டாக்டர் அருண்டேலுடைய அறிக்கைகள், பேச்சுக்கள், கட்டுரைகள் அவரைப் பற்றிய செய்திகள் முதலியன பத்திரிகைகளில் பிரசுரமாகும். அந்தச் செய்திகளைக் கத்தரித்துச் சேர்ப்பது வழக்கம். அந்த வேலை சிறுமிக்கு ஒதுக்கப்பட்டது. டாக்டர் அருண்டேல் சம்பந்தமான வேலையாகவே இருந்தபடியால் சிறுமிக்கு மிகவும் உற்சாகம். அன்றன்று வரும் செய்திகளை அழகாகக் கத்தரித்துப் பெரிய ஆல்பத்தில் ஒட்டி வைப்பாள். அவருக்காக வேலை செய்கிறோம் என்ற எண்ணம் அச்சிறுமிக்கு அளவிலாத உவகையளித்தது.

இவ்வாறு குழந்தைகளின் எண்ணத்துக்குப் பெருமதிப்பு அளித்தவர் அவர். அடையாற்றில் வளர்ந்து வந்த குழந்தைகள் சிலர் ''பெரியவா எல்லாரும் மீட்டிங் போட்டுப் பேசறாளே. நாம் மட்டும் ஏன் மீட்டிங் போட்டுப் பேசக்கூடாது?'' என்று ஒருசமயம் பேசிக் கொண்டார்கள். இதைக் கேள்விப்பட்ட டாக்டர் அருண்டேல் அவர்களை உடனே அழைத்து ஒரு சங்கம் நிறுவும்படி யோசனை சொல்லி அதற்கு ஒரு பெயரும் சூட்டினார். குழந்தைகளுக்கு அசாத்திய சந்தோஷம்.

இப்படிக் குழந்தைகளோடு குழந்தையாக மனம் ஒன்றியிருப்பவராயினும் பெரியோருக்காக எத்தனையோ நூல்களை எழுதிக்குவித்திருக்கிறார். அந்த நூல்களைப் பார்த்தாலே, அதிசயமாக இருக்கிறது. கல்வித்துறை நூல்கள் அனைத்தும் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியவை. ஆன்மீகத் துறையில் அவர் எழுதியுள்ள நூல்களோ நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. மகரிஷிகள் தொகுத்த விஷயங்களையெல்லாம் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறார். இந்துமதத் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் ஓர் ஆங்கிலேயர் இவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருப்பது ஓர் அதிசயம் என்றால், அதை விளக்கி இந்தியருக்கே புரியும் வண்ணம் நூல்கள் எழுதியிருப்பது அதைவிட அதிசயம்.

இந்த ஆண்டு கலாக்ஷேத்திரக் கலைவிழா, டாக்டர் அருண்டேலின் நூற்றாண்டு விழாவில் ஓர் அம்சமாகவும், அவருடைய நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் திருவான்மியூரில் நடைபெறுகிறது. வழக்கமான நாட்டிய நாடகங்கள், கச்சேரிகளுடன் இந்த ஆண்டுப் பரிசாக ''புத்த சரித்திரம்'' நாட்டிய நாடகமாக அரங்கேறுகிறது. அன்பே உருவாக வாழ்ந்தவரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் போது அஹிம்சா பரமோ தர்ம: என்று வாழ்ந்தவரின் சரிதத்தை எடுத்துக் கொண்டது சாலப் பொருத்தமே.

1979ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாகவும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. உலகமெங்கும் குழந்தைகளைக் கொண்டாடும் வருடத்தில் டாக்டர் அருண்டேலுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதும் பொருத்தமாக அமைந்துவிட்டது.


பாவம்..
நீங்க எதுக்கு
தனியா நடக்குறீங்க?
ஒற்றுமையா போவோமே!
எம். ஜி. ஆர். வாழ்க!
கை



கல்கி

1979 ஜனவரி 7
காளயுக்தி மார்கழி 23

மலர்: 37 இதழ்: 23

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

# எழுச்சிமிக்க திருச்சி மகாநாடு

திருச்சியில் தி.மு.க.வின் இந்தி எதிர்ப்பு மாநில மகாநாடு நடைபெற்ற அதே தினத்தில் சென்னையில் ராஜாஜி சிலையைத் திறந்து வைத்த திரு. எம். ஜி. ஆர். ''தமிழகம் ஹிந்தித் திணிப்பை ஒருநாளும் சகிக்காது'' என்று திட்டவட்டமாக அறிவித்தார். இதற்கு ஒரு படி மேலே போய்த் திருச்சி மகாநாட்டினைத் தாம் வரவேற்பதாகவும் ஆட்சிமொழி விஷயத்தில் ஒத்த கருத்துடைய எந்த அரசியல் கட்சியுடனும் அ.இ.அ.தி.மு.க. ஒத்துழைக்கத் தயங்காது என்றும் தெரிவித்தார். இவ்வாறு முதல்வர் திருச்சி மகாநாட்டினை வரவேற்றுப் பேசியது அவரது பெருந்தன்மையை உணர்த்துவதோடு மகாநாட்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. இது ஒரு புறம்.

மற்றொருபுறத்தில், அடாத மழையிலும் கட்டுப்பாட்டுடன் நடந்த அணி வகுப்பும் சகதியிலே கூட சகோதரிகளும் தாய்மார்களும் அமர்ந்து கொண்டதும் ஒரு லட்சத்து இருபத்தோராயிரம் ரூபாய் நுழைவுக்கட்டணமாகவே வசூலானதும் கலைஞருக்கு இருக்கும் செல்வாக்கை உணர்த்துவதோடு இந்தித் திணிப்பிலே தமிழருக்கு இருக்கும் வெறுப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

மகாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிக நீண்டது. அதன் சாரமான பகுதிகளை மட்டும் பார்ப்போம்:

''ஒரு வட்டார மொழியான ஹிந்தியை அனைத்து இந்திய ஆட்சி மொழியாக்குவதன் மூலம் ஹிந்தி பேசுவோரை முதல்தரப் பிரஜைகளாகவும் மற்ற அனைவரையும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் மாற்றுகிற அநீதி உள்ளது. எனவே தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டினைக் கருதி எட்டாவது அட்டவணையில் உள்ள தேசிய மொழிகள் யாவும் யூனியன் ஆட்சி மொழிகளாக ஏற்கப்படவேண்டும். இதற்கேற்ப அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சிமொழிப் பிரிவு உடனடியாகத் திருத்தப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகளாக உள்ள தேசிய மொழிகள் யாவும் மத்திய ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்துகிற காலம் வரும் வரை எந்த ஒரு மொழிக்கும் தனி ஆதிக்க அந்தஸ்து தராமல் முன்னர் நடைமுறையில் இருந்ததுபோல் ஆங்கிலம் ஒன்று மட்டுமே ஆட்சிமொழியாக நிலவ வேண்டும். இந்தியை மட்டும் வளர்க்க முயல்வதையும் திணிப்பதையும் கைவிட வேண்டும்.''

இதைத் தொடர்ந்து இந்தித் திணிப்பு எந்த அளவுக்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வளர்ந்துள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டி எச்சரிக்கிறது திருச்சித் தீர்மானம்:

'' 'நிலைமைகள் அப்படியே ஒருநிலையில் இருக்கமுடியாது. மத்திய அரசில் இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவது அதிகரிக்கத்தான் செய்யும்' என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் அண்மையில் கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து மறைமுகமாகவும் நேரடியாகவும் இந்தியைத் திணிக்கும் பணி தீவிரம் அடைந்துள்ளது. மத்திய அரசு அலுவலகங்கள், அரசுடைமையான வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் முதலியவற்றில் ஹிந்தியைத் திணிப்பது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிதித்துறையில் ஒருபிரிவு முழுவதும் இந்தியிலேயே நிர்வகிக்கப்படுவதாக இந்த ஆண்டு அறிக்கை கூறுகிறது. பல துறைகளில் இந்தியில் குறிப்பு எழுதுவது பெருகி வருகிறது. இந்தி அறியாத அரசு அலுவலர்களுக்குக்

சட்டாயமாக இந்தி கற்பிக்க ஒரு பெரும் குழுவினராகத் தனி அலுவலர் நிய மிக்கப்பட்டுள்ளனர். இவையெல்லாம் இந்தி ஆதிக்கம் உருவாகி விட்டதையே உணர்த்து கின்றன.''

'இந்தி திணிக்கப்பட மாட்டாது' என்று தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் உறுதி மொழிகள் ஓர் ஏமாற்று வித்தையே என்பது இப்போது சந்தேகத்துக்கு இடமில்லாமல் புரிந்துபோய் விட்டது. இந்தியாவின் ஒற்று மையே தீங்கு விளைவிக்கும் போக்கு இது என் றில் சிறிதளவும் சந்தேகமில்லை.

'ஹிந்தி திணிப்பை எதிர்க்கும் விஷயத்தில் எந்த கட்சியுடனும் ஒத்துழைக்கத் தயார்' என்று திரு எம். ஜி. ஆர். கூறியுள்ளதை நிரூபிக்கத் திருச்சி மகாநாடே ஒரு வாய்ப்பும் அளிக்கிறது. '1968ல் அறிஞர் அண்ணா தமிழக சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றியது போல், அதன் அடிப்படை யில், மத்திய அரசு உடனடியாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று வலி யுறுத்தும் ஒரு தீர்மானத்தை மீண்டும் நிறை வேற்றித் தில்லிக்கு அனுப்பவேண்டும்' என்று தமிழக அரசைத் திருச்சி மகாநாடு கோரி யுள்ளது. இதைச் செய்வது, மிகவும் சக்தி வாய்ந்த முறையில் தமிழகம் ஹிந்தித் திணிப் புக்குத் தன் எதிர்ப்பைக் காண்பித்துக் கொண்டதாகும்.

அடுத்து, 'பாரதத்தின் ஒருமைப்பாட்டில் கவலை கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள் ளும் தி.மு.க. ஹிந்தித் திணிப்பை எதிர்த்துத் துக்க தினம் அனுஷ்டிக்க தேசிய தினமாகிய ஜனவரி 26ந்தேதியைத் தேர்ந்தெடுப்பா னேன்?' என்ற கேள்வி எழும்.

தேசிய எண்ணங்களுக்கும் ஒருமைப்பாட் டுக்கும் ஊறுவிளைக்கும் விதமாக ஹிந்தி வெறி யர்களின் போக்கு அமைந்திருப்பதை வன்மை யான முறையில் எடுத்துக் காட்டத்தான் குடியரசுத் தினத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார் களேயன்றி இதற்கு நேர்மாறான ஓர் அர்த் தத்தில் அல்ல. இதனை மேலும் உறுதிப் படுத் துவதே போல் தி.மு.க தலைவர்கள் அன்றைய நிகழ்ச்சிகளில் மேலும் ஓரிரு அம்சங்களைச் சேர்க்கலாம். கறுப்புக் கொடி, கறுப்புச் சட்டை, கறுப்புத்துண்டு ஆகியவற்றுடன் ஊர்வலம் வருவதுடன் நில்லாது, ஒருவேளை உபவாசம் இருந்து சிலமணி நேரங்களை மௌனமான ஆன்மப் பரிசோதனைக்கு ஒதுக்க லாம். (பிரார்த்தனை பற்றி அவர்களிடம் பேசிப் பயனில்லையே!)

எந்த விதமாகப் பார்த்தாலும் சரி, தமிழன் தன் தன்மானத்தைக் காத்துக் கொண்டு அதே நேரத்தில் பாரதத்தின் ஒருமைப் பாட்டையும் காக்க ஒரு பெரிய சாத்துவீகப் போராட்டத்துக்குத் தயாராக வேண்டும் போலவே தோன்றுகிறது.

---



## இதயம் பேசுகிறது முதல் ஆண்டுவிழா



'இதயம் பேசுகிறது' முதலாண்டு நிறைவு விழா டிசம்பர் 27ம்தேதி சென்னை ஏ. வி. எம். ராஜேஸ்வரி மண்டபத்தில் சிறப்பாக நடந்தது.

தம் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் அமரர் வாசன்தான் என்று நன்றிப்பெருக்கோடு வரவேற்பு உரையில் குறிப்பிட்ட மணியன், தம் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் ஆனந்தவிகடன் சின்னத் துக்கு மாலையிட்டார்.

இதயம் பேசுகிறது நடத்திய போட்டிகளின் முடி வுகள் அறிவிக்கப்பட்டன. பரிசு பெற்றவர்களுக்கு முதல்வர் எம். ஜி. ஆர். தங்கப்பதக்கங்கள் வழங் கினார். முதல் பரிசுகள் பெற்றோர்:

(1) அமரர் வாசன் சிறுகதைப் போட்டி - டி.முத்து ஸ்வாமி தான் (2) அமரர் தேவன் நகைச்சுவைச் சிறு கதைப்போட்டி - அறந்தை ராஜு: பி. எஸ். நர சிம்மன். (3) அமரர் ராஜு நகைச்சுவைச் சித்திரப் போட்டி - ஆர். நடராஜன் (நடனம்) (4) அமரர் மாலி கார்ட்டூன் போட்டி: பீட்டர் (5) அமரர் கொத்த மங்கலம் சுப்பு கவிதைப்போட்டி - ப. கிருஷ்ணன்.

படத்தில் எம். ஜி. ஆர். அவர்களுக்குத் திரு. மணியன் மாலை அணிவிப்பதையும் அரங்கில் முதல் வர் பேசும்போது அருகே கண்ணதாசனும் திரு ஏ. வி. மெய்யப்பனும் அமர்ந்திருப்பதையும் காண லாம்.

தகவல்: ''ரிஷி.''

போட்டோ: உத்ரா.



# ஜெயகாந்தன்

எழுதும் புதிய சமூகத் தொடர்

# பாட்டிமார்களும் பேத்திமார்களும்

சித்திரம்:

**கல்கி** இதழில் **விரைவில் ஆரம்பம்.**



# ஆசியப் போட்டிகளில் ஆறாவது இடம்

''என் தந்தை ராமசாமியும் ஓட்ட வீரர்'' என்று பெருமிதத்துடன் கூறும் ஞான சேகரன் பாங்காக்கில் தங்கப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் சூடியவர். தங்கப்பதக்கம் இருநூறு மீட்டருக்கு. வெள்ளிப் பதக்கம் நூறு மீட்டர் பந்தயத்தில் பெற்றது.

காரைக்குடிக்கு அருகிலுள்ள பாலையூரில் பிறந்த அவர் தொடர்ந்து சொல்கிறார்: ''நான் விசாலாட்சி கலாசாலாவில் படிக்கும் போதுதான் தமிழக ஓட்டப்போட்டிகளில் முதன் முதலில் வென்று பரிசு பெற்றேன். அதனால் என் விளையாட்டுத் திறமைக்கு அஸ்தி வாரமிட்ட என் பள்ளியை மறக்க இயலாது. நான் பாங்காக்கில் வெற்றி பெற்றதும் இந்தப்பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் தந்தி அடித்துப் பாராட்டியபோது என் இதயம் மகிழ்ச்சியால் பூரித்தது!''

''நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்திலேயே புகழ்பெற்ற நீங்கள் அதில் தங்கப்பதக்கத்தை நழுவ விட்டு விட்டீர்களே ஏன்?''

''இந்தியாவில் நான் நானூறு மீட்டர் ஓடி ஓடிப் பழக்கமாகி விட்டதால் நூறுமீட்டர் ஓட்டப் பந்தயத்தில் அதிகக் கவனம் செலுத்த வில்லை. பாங்காக் நூறுமீட்டர் பந்தயத்தில் ஆரம்ப கட்டத்தில் விழிப்போடு இயங்கி யிருந்தால் பரிசு கிட்டியிருக்கும்!''

''பாங்காக்கில் உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஏதாவது உண்டா?''

''ஓ! இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் நான் பெற்ற தங்கப் பதக்கமே இந்தியாவுக்குக் கிடைத்த கடைசித் தங்கப் பதக்கம். அதைச் சாதித்துத் தந்ததில் எனக்கு எல்லையற்ற ஆனந்தம்! அதோடு இந்திய ஓட்ட வீரர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றது பெருமைக்குரிய செயல்! ஆசியப் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்ற இந்தியர்கள் அனைவருக்கும் பாங்காக்கில் தங்கியுள்ள இந்தியர்கள் அழகான கடிகாரங்களை அணிவித்து மகிழ்ந்தனர்.''



✕ எண்ணூறு மீட்டரில் தங்கப்பதக்கம் சூடிய ஸ்ரீராம் சிங்

தங்கப் பதக்கம் சூடிய சுரேஷ்பாபு







இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயம் நடக்கிறது. இந்தியாவைச் சேர்ந்த ஞானசேகரன் தங்கப் பதக்கம் சூடினார்.

நீண்ட தூரம் தாண்டலில் ஏஞ்சல்மேரி வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இந்தியக்குழுவின் தலைவர் திரு சிவந்தி ஆதித்தன்.

ஞானசேகரன் குடும்பத்துக்கு இந்திய ரயில்வே மந்திரி மதுதாண்டவாடே இரண்டாயிரம் ரூபாய் வழங்கிக் கௌரவித்திருக்கிறார். ரயில்வேயில் பணியாற்றும் இவருக்கு ரயில்வே இலாகாவும் பதவி உயர்வு கொடுத்துக் கௌரவித்திருக்கிறது.

இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முன்பு மில்காசிங் செய்த சாதனையை ஞானசேகரன் 21.4 செகண்டில் புரிந்து தங்கப் பதக்கம் சூடியிருக்கிறார்!

**பா**ங்காக் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் சூடிய ஏஞ்சல் மேரியிடம், ''நீங்கள் பதக்கம் பெற்ற போது உங்கள் நினைவோட்டம் எப்படியிருந்தது?'' என்று கேட்டேன்.

''ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்வதற்கு முன்னால் நான் எப்படியாவது ஒரு பதக்கம் பெற்றுத்தான் திரும்புவேன் என்று பிரதிக்ஞை செய்துகொண்டு வந்திருந்தேன். அந்தப் பிரதிக்ஞை நிறைவேறிய போது, நான் அளவற்ற ஆனந்தத்தை அடைந்தேன்.''

பாட்டியாலாவில் நடைபெற்ற முன் பரிசோதனை ஆட்டங்களில் 3849 பாயிண்ட்டுகள் எடுத்தால் அவர்களுக்குத் தேர்வு உண்டு. ஏஞ்சல்மேரி அதைவிட 9 பாயிண்ட்டுகள் அதிகம் எடுத்துப் பாங்காக் செல்லும் தகுதி பெற்றார்.

''பாங்காக் பயணம் எனக்கு மிகுந்த 'திரில்' தந்தது. 'பெண்டாத்லான்' போட்டியில் எனது சாதனை எனக்கே ஏமாற்றம்தான்! ஆனால் அகலம் தாண்டலில் 6.05 மீட்டர் தூரம் தாண்டியதை என்னாலேயே நம்ப முடியவில்லை!''

''உங்களுக்கு வியப்பளித்த நிகழ்ச்சி ஏதாவது உண்டா?''

''கடைசிப் போட்டியான 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஐந்தாவதாகக் கிளம்பிய நான் இரண்டாவது இடத்தைப் பெற்றது யாரும் எதிர்பார்க்காத நிகழ்ச்சி. கடைசியில் முப்பது மீட்டர் இடைவெளியில் நான் இரண்டாவது இடம் பெற்றேன்.''

**சை**க்கிள் பந்தயத்தில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தேசிய சாம்பியன் கே. எம். கோபால் சென்றிருந்தார்.

185 கிலோமீட்டர் சைக்கிள் பந்தயத்தில் இவர் முப்பது கிலோமீட்டர் தூரத்தைக் கடக்கும்போது சைக்கிள் டயர் வெடித்து விட்டது. இவரது வெற்றிக்கான வாய்ப்பும் அப்போதே 'வெடித்து' விட்டது.

தென்னிந்திய ரயில்வே லக்ஷ்மணன் பார்வையாளராக இந்தப் பாங்காக் ஆசிய விளை

யாட்டுப் போட்டிகளுக்குச் சென்றிருந்தார். அவர் பாங்காக் போட்டிகளைப்பற்றிச் சொல்கிறார்:

''ஆரம்பவிழா கண்ணுக்கு விருந்து. பாங்காக் ஸ்டேடியம் ஜனத்திரளால் நிரம்பி வழிந்தது. தாய்லாந்து ராணுவப் படையைச் சேர்ந்த பாராசூட் வீரர்கள் பாராசூட்டில் வந்து குதித்து, வரிசையாக நின்று மன்னருக்கு வணக்கம் செலுத்திய காட்சி அற்புதம். ஆசிரியர் கல்லூரியைச் சார்ந்த 1008 கலைஞர்களின் நாடோடி நடனம், 800 நிபுணர்களின் உடல் பயிற்சிகள் தொடர்ந்தன. இந்தியக் கோஷ்டிக்கு மராத்தான் ஓட்டக்காரர் சிவநாத் சிங் இந்தியக் கொடியை ஏந்தி அணி வகுப்பின் முன்னணியில் வந்தார்.

''பாங்காக்கில் நடைபெற்ற ஆசியப் போட்டிகள் திறம்பட நிர்வகிக்கப்பட்டன. நாம் 1982ம் ஆண்டில் நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளோம். அவர்களைப் போல் சிறப்பாக நடத்த முடியுமா என்று தயக்கமாக இருக்கிறது!''

எட்டாவது ஆசியப் போட்டிகளில் ஹாக்கிப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் சூடிய பிலிப் வருகிறார்.

''நீங்கள் தங்கப் பதக்கம் கொணருவீர்கள் என்று எதிர்பார்த்தோம். நடக்கவில்லையே?'' என்று விளையாட்டு ரஸிகர் அங்கலாய்த்தார்.

''நாங்கள் பாகிஸ்தானோடு கஷ்டப்பட்டுத் தான் ஆடினோம். ஒரு கோல் போட்டது நிராகரிக்கப்பட்டுவிட்டது. எங்களுக்கு வெற்றி பெற 'சான்ஸ்' இருந்தும் மூன்று தடவை கிடைத்த நல்ல தருணங்களை நாங்கள் நழுவ விட்டு விட்டோம்! எங்களுடன் அதிர்ஷ்டம் ஒத்துழைக்கவில்லை என்றுதான் சொல்வேன்! எங்கள் ஹாக்கிக் குழுவின் ஆட்டத் திறமையில் பழுதில்லை. பாகிஸ்தான் ஆட்டக் குழுவினரும் பிரமாதமாகச் சோபித்து விடவில்லை. வெள்ளிப் பதக்கம் பெற்ற திருப்தியோடு தாயகம் திரும்பியிருக்கிறோம்!'' என்று கூறுகிறார் ஹாக்கி வீரர் பிலிப்.

ஹைஜம்ப், போல்வால்ட் ஆகிய வற்றுக்கு இந்தியாவில் மண்ணைப் பரப்பி விளையாட்டுக் கலைஞர்களை விழச் சொல்கிறார்கள். பாங்காக்கில் நாலு அடி உயரத்துக்கு 'ரப்பர் குஷன்' அமைத்திருந்தது. அனைவரையும் கவர்ந்தது. நம் நாட்டிலும் இந்தப் புதிய முறையைக் கையாளலாம் என்கிறார் லக்ஷ்மணன்.

''பாங்காக் எட்டாவது ஆசியப் போட்டிகளில் இந்தியா ஆறுவது இடத்தைப் பெற்றிருக்கிறது. 11 தங்கப் பதக்கங்கள் 11 வெள்ளிப் பதக்கங்கள், 7 வெண்கலப் பதக்கங்கள் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளன. ஹரிசந்த் இரண்டு தங்கப் பதக்கங்களைச் சூடியது தனிப்பெருமை. இந்திய விளையாட்டுக் குழுவுக்குத் தலைமை வகித்து (Chief De Mission) வெற்றிவாகைக்கு உற்சாகமூட்டியவர் சிவந்தி ஆதித்தன்.

''இந்தியக் குழுவில் பங்கு பற்றிய அத்தனை விளையாட்டுக் காரர்களுமே முழுமூச்சுடன் இந்தியாவின் பெருமையை உயர்த்தப் பாடுபட்டார்கள்'' என்று சொல்கிறார் திரு சிவந்தி ஆதித்தன்.

— பேட்டி: குன்றுமணி


சுவாமியே சரணம் ஐயப்பா! சோட்டானிக்கரை அம்மா சரணம்!!

**சபரிமலே யாத்திரைசெல்லும் அய்யப்பன்மார்கள் கவனிக்கவும்!!!**

**தங்களது சபரிமலே யாத்திரையில் சோட்டானிக்கரைக்கு விஜயம் செய்யத் தவறாதீர்கள்**


**20-12-1978 முதல் 15-1-1979 வரை**



**சோட்டானிக்கரை**

**ஸ்ரீ பகவதிக்கு**

**கோடி அர்ச்சனை**



தீராத வினைகளைத் தீர்த்து வைக்கும் பேசும் தெய்வமான ஸ்ரீ பகவதி தேவியின் அருளாசி பெற்று உய்ய, நீங்களும் கோடி அர்ச்சனையில் பங்கு கொள்ளுங்கள்.

**டிக்கட்டுகள்: ரூ. 1/-, 5/-, 10/-, 25/- & 101/-,**
**ஒருநாள் முழு அர்ச்சனைக்கு ரூ. 2001/-**

கோடி அர்ச்சனை டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:

**தேவோஸ்வம் ஆபீஸர்,**
சோட்டானிக்கரை,
P. O. சோட்டானிக்கரை,
-682312, கேரளா

**ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,**
(777 உணவுப் பொருள் தயாரிப்பாளர்கள்)
193, தம்பு செட்டி தெரு,
சென்னை-600001
(போன்: 20401 & 20402)

படவிமரிசனம்

# ப்ரியா



பத்திரிகையில் வாராவாரம் விறுவிறுப்போடு, வாசகர்களின் ஆவலைத் தூண்டும் படி தொடர்ந்த ப்ரியாவுக்கும் திரைப்படமாக மாறி இருக்கும் ப்ரியாவுக்கும் நிறைய வித்தியாசமுண்டு. பத்திரிகையில் ப்ரியா காதலனை அடையப் போனது லண்டனுக்கு — படத்தில் வரும் ப்ரியா போவது சிங்கப்பூருக்கு. மூலக்கதையில் துப்பறியும் கணேஷ், ஸ்காட்லண்ட் யார்ட் ஆகியோரின் அறிவுத் திறனுக்கு வேலை கொடுத்திருந்தார் சுஜாதா. படக்கதையில் உடல் வலிமையைப் பிரதானமாக்கி 'குங்ஃபூ' சண்டைக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டார்கள் பஞ்சு அருணாசலமும், எஸ். பி. முத்துராமனும்.

மூலக்கதையைப் படிக்கும்போது வாசகர்களை — தன் அபாரமான வர்ணனையினால் இங்கிலாந்திலுள்ள கிராமங்களின் புல்வெளிகளில் பவனி வரச் செய்தார் சுஜாதா.

படக்கதையிலே டைரக்டர் முத்துராமன் திரைப்பட ரசிகர்களை, சிங்கப்பூருக்கும், ஹாங்காங்குக்கும் கோலாலம்பூருக்கும் — அங்கிருக்கும் ஒவ்வொரு முக்கியமான காண வேண்டிய பகுதிகளுக்கெல்லாம் காமிரா மூலம் அழைத்துப் போகிறார்.

மூலக்கதையிலிருந்து மாறுபட்டு வக்கீல் கணேஷுக்குக் கல்யாணமே செய்து வைத்து விடுகிறார் டைரக்டர். அது மட்டுமா? கால்ஷீட் தராத நடிகனுக்குப்பதிலாக வேஷம் போட்டுக் கொண்டு கனவுக் காட்சியில் ராஜகுமாரன் உடையில் காதல் டூயட்டுப் பாடி நடிக்கவும் செய்கிறார் துப்பறியும் கணேஷ்.

ஆக, மூலக்கதையை மறந்துவிட்டு எஸ்.பி.டி. பிலிம்ஸின் ப்ரியாவை மட்டுமே பார்த்தால் படம் பிரமாதம்! டைட்டிலில் நெகடிவில் (வண்ணத்தில்) ஆக்ஷன் காட்சிகளாகக் காட்டி ஆரம்பித்திருப்பதே படம் நல்ல விறுவிறுப்போடு இருக்கப் போகிறது என்பதை உணர்த்தி விடுகிறது.

எண்டர் தி டிராகன் வந்தாலும் வந்தது — எந்தப் படத்திலும் சண்டைக் காட்சிகள், குங்ஃபூ உதைகள், கராத்தே அடிகள் சர்வ சாதாரணமாகி விட்டன. ப்ரியாவோ சிங்கப்பூருக்கே போயிருக்கிறாள். கும்மாவிட முடியுமா? சிங்கப்பூர் காதலியின் கரம் பற்ற கணேஷுக்கு குங்ஃபூ பயிற்சி. அதில் சண்டை, ஜமாயித்திருக்கிறார் ரஜனி. மோதலில் மட்டுமல்ல, காதலிலும்தான். ரஜனிக்கு ப்ரியா படம் நல்ல வாய்ப்பு.

ஸ்ரீதேவிதான் ப்ரியாவாக வருகிறார். நல்ல ஓட்டம்! ஆரம்பத்தில் நாட்டுப் புறத்துப் பெண்ணாக நடிப்பது ரொம்ப இயற்கை.

டைரக்டர் பாத்திரத்தில் வருகிறார் தேங்காய். பேச்சும் நடிப்பும் ஏ ஒன்! பாராட்டும் படி செய்திருக்கிறார்.

ப்ரியாவின் மாமனாக வருபவரின் காட்டுக் கத்தல், பொருந்தாத ஒரு சவ ஊர்வலம் இதெல்லாம் திருஷ்டி பரிகாரங்கள்.

ரம்யமான கலரில், ஸ்டீரியோஃபோனிக் ஒலிமுறையில் படப்பிடிப்பும் காட்சிகள் அமைப்பும் அற்புதமாக இருக்கின்றன. 'கார் சேஸிங்' காட்சிகள் வெளிநாட்டவர்களுக்கு இணையாக உள்ளன. சிங்கப்பூர், ஹாங்காங், கோலாலம்பூர் ஆகிய இடங்களுக்குப் போய்ப் படமெடுத்ததை முழுதாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். டால்ஃபின், கிளி ஆகியவைகளின் சர்க்கஸ் காட்சிகள் 'அப்ளாஸ்' பெறும். அதோடு பணவசூலையும் தரும்.

டைரக்டர் முத்துராமனுக்கு ஒரு குறையுண்டு. தம் படங்கள் எதுவும் நூறுநாட்கள் ஓடவில்லையே என்று. அதை 'ப்ரியா' தீர்த்து வைப்பாளா?

**— கௌசிகன்**

# பயணியர் விடுதியிலே..

`அன்னம்'

ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த அந்த 'டிராவலர்ஸ் பங்களா'வில் தங்கியிருந்தான் சந்திரன். ஒரு கம்பெனியின் பிரதிநிதியாகத் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டிருந்த அவன் உண்மையில் ஒரு நாகரிகத் திருடன். அவனுடைய 'ஏரியா' — பாரதம் முழுவதும். பெங்களூரில் தேட்டை போட்ட நகைகளின் பெரும்பகுதியை ரகசியமாக ஓரிடத்தில் விற்று ரொக்கமாகப் பெரிய தொகையைப் பெற்று வந்திருந்தான். மறுநாள் இன்னொரு கோஷ்டி பாக்கி நகைகளை வாங்கிக் கொள்வதாகச் சொல்லி இருந்ததால் இரவு இங்கு தங்கும்படி நேர்ந்துவிட்டது.

இரண்டே அறைகள் இருந்த அந்தப் பங்களாவில் மற்றோர் அறை காலியாக இருந்தது. வேறு வேலையில்லாத சந்திரன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக் கொண்டிருந்தான். பக்கத்தில் சினிமாத் தியேட்டர் இருந்தாலாவது போய் வரலாம். திடீரென்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. தேசிய நெடுஞ்சாலையில் இருந்த அந்தப் பங்களா எந்த இரவும் காலியாக இருந்ததாக அவன் கையெழுத்திட்ட பதிவுப் புஸ்தகம் காட்டவில்லை. இந்த 'வாட்ச்மேனை' ஏதாவது சாக்கு சொல்லி வெளியே அனுப்பி வைத்துவிட்டால், தங்கும் பிரயாணிகளிடமிருந்து ஏதாவது தட்டிப் பறிக்கலாம். பக்கத்தில் உள்ள நகரத்துக்கு வரும் வியாபாரிகள் இரவு மட்டும் தங்க வரலாமே! இரண்டு மூன்று வாரங்களாகத் 'தொழில்' செய்யாத கையில் நமைச்சல் பரவத்தொடங்கியிருந்தது.

''வாட்ச்மேன்'' இருந்த குடிசைப்பக்கம் போய் அவனை அழைத்தான். கூப்பிட்ட குரலுக்கு வந்தவன் இளைஞன். வயது முப்பது இருக்கும். வந்தவன் முகத்தில் அலுப்புத் தெரிந்தது. இந்த இரவில் எந்தக் கடைக்கு எதற்காக விரட்டப் போகிறானோ என்ற எரிச்சல்.

''என்ன 'வாட்ச்மேன்!' தனியாக இருக்கிறீங்களே', ...போர்' அடிக்கல்லியா?'' என்று கேட்டான் சந்திரன்.

''என்னங்க செய்யறது?... பொழைப்பு இதாப்போச்சு... அலட்டிக்கிட்டா முடியுங்களா?'' என்று உண்மையில் அவன் அலட்டிக் கொண்டான்.

''ஒரு சினிமா... ஒரு நாடகம்... எதற்குமே போக முடியாதே!''...

''நீங்க ஒண்ணு... எங்க ஆயா காயலாக் கிடக்குது... இப்பவோ, அப்பவோவா இருக்குதுன்னு ஆள் மேலே ஆளா வருது... நகர முடியல்லே... இன்ஜினீயர் ஐயா பதில் ஆள் புடிச்சு அனுப்பறதுக்குள்ளே நான் தவிச்சுப் போயிட்டேன்... நான் போய்ச் சேரறதுக்குள்ளே ஆயா போய்ச் சேர்ந்திட்டுது.''

''அட பாவமே!... என்றால் தனியாக ஒரு நாள்கூட இருக்க முடியாது... பைத்தியமே பிடித்துவிடும்...''

''எனக்கும் முதல்லே அப்படித்தானுங்க இருந்தது... ஆனால் போகப் போகச் சரியா யிட்டுதுங்க...''

சந்திரன் தன் பையிலிருந்து சிகரெட் பாக்கெட் ஒன்றை உருவினான். திறந்து அதில் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான் ''பாக்''கெட்டை அப்படியே ''வாட்ச்மென்''னிடம் நீட்டினான்.

''வேண்டாமுங்க!'' என்று சொல்லிய படியே வாட்ச்மேன் ஒரு சிகரெட்டை எடுத்தும் பற்ற வைத்துக்கொண்டு வலித்துப் பார்த்தான். ஆகாசத்தில் மிதப்பது போல் இருந்தது.

''உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. நீ வேண்டுமானால் இன்று டவுனுக்குப் போய் ஒரு சினிமா பார்த்து விட்டு வா. ... உனக்குப் பதிலாக நான் கவனித்துக் கொள்கிறேன்...''

''இன்ஜினீயர் வந்தால்?''

''இந்த இரவில் அவர் எங்கே வரப் போகிறார்? வரமாட்டார்.. அப்படியே வந்தாலும் உனக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

சந்திரன் தன் மணிபர்ஸைத் திறந்து ஒரு ஐந்து ரூபாயை நீட்டினான். 'வாட்ச்மேன்' கண்களுக்கு அந்த நோட்டுப் பெரிய பொக்கிஷமாகத் தெரிந்தது. சினிமா என்ன சினிமா?

---

## கேப்டனைப் பற்றி...

ஆர். பி. மெஹ்ரா: காப்டனுக் காவஸ்கர் பொறுப்பு வகித்தால் அவரது பாட்டிங் திறமை குறையலாம் என்று பல நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆனால் பிராட்மனைப் போல் காப்டன் காவஸ்கரும் மிளிர்வார்.

அஜீத் வாடேகர்: நான் எப்பொழுதுமே பாட்ஸ்மேன்தான் காப்டனுக வேண்டும் என்று விரும்புபவன். காவஸ்கர் சாய்ஸ் ஏ ஒன்!

பட்டோடி நவாப்: ஒரு பௌலர் காப்டனுக இருந்து நிர்வகிப்பது சிரமம். இந்தப் புதிய பொறுப்பினால் காவஸ்கரின் பாட்டிங் தரம் குன்றி விடாது.

அப்பாஸ் அலிபெய்க்: கனிஸ் கிரிக்கெட்டுக்கே தம் முழு மனத்தையும் ஈடுபடுத்தியவர். இவரை விட ஏகாக்ர சித்த ஆட்டக்காரர், கவஸ்கரைக் காணுவது அரிது. (ஸ்போர்ட்ஸ் ஓர்ல்ட்)



ஐந்து ரூபாய்க்கு ஸ்வர்க்கத்தையே காட்டக்கூடிய இடம் அவனுக்குத் தெரியும். நோட்டைத் தன் பையில் திணித்துக்கொண்டு லாட்ஜ் ரிஜிஸ்தரைச் சந்திரன் கையில் கொடுத்துவிட்டு ''சீட்டி'' அடித்தபடி 'வாட்ச்மேன்' வெளியே போனான்.

சந்திரன் தன் அறையை இழுத்து மூடினான். மிகச்சாதாரணமான ஒரு சட்டையைப் போட்டுக் கொண்டு, ஒரு துண்டைத் தன் தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டு பங்களாவின் வாசலில் காத்திருந்தான்.

சந்திரனுக்கு அவன் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை உண்டு. இதுவரை அவன் எதிலும் தோற்றதில்லை. அவன் மதிப்பிட்டதும் பிசகியதில்லை.

'வாட்ச்மேன்' திரும்பும்போது இரவு இரண்டு மணி ஆகிவிடும். அதற்குள் யாராவது வராமலா போகிறார்கள்? வந்து தங்குபவர் மறுநாள் காலை விழித்துப் பார்ப்பதற்குள் சந்திரன் எவ்வளவோ தூரம் போயிருப்பான்.

இரவு மணி ஒன்பதும் அடித்து விட்டது. சந்திரனுக்குத் தூக்கம் தூக்கமாக வந்தது. இனி யார் வரப் போகிறார்கள்?.... உட்புறமாகத் தாளிட்டுப் படுக்க வேண்டியதுதான்.

''வாட்ச்மேன்! வாட்ச்மேன்!'' இனிமையான பெண் குரல் கேட்டது.

''இதோ வந்து விட்டேன் அம்மா!'' எனக் கூறியபடி பாய்ந்து வெளியே போனான் சந்திரன்.

அங்கே கறுப்பு நிறக்கார் ஒன்று நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து தளதளவென்று ஒருபெண் பளபளவென்று உடை தரித்து இறங்கினாள். அவள் ஒப்பனையிலிருந்தே சந்திரன் அவள் ஒரு பசையுள்ள பெண் எனப்புரிந்து கொண்டான். கையில் வைத்திருந்த சிறு பெட்டியை அவள் கீழே வைக்கவில்லை... அதில் என்ன இருக்கும்? நகைகள்? பணம்? சந்திரன் போட்ட கணக்கு மனக்கணக்கு திருப்திகரமாக அமைந்தது.

காக்கி உடை அணிந்த டிரைவர் பக்கத்தில் பணிவுடன் நின்றான்.

''ரூம் இருக்கா வாட்ச்மேன்''! — வந்தவள் கேட்டாள்.

''இருக்குதுங்க அம்மா!'' — என்று காத்திருந்த சந்திரன்-சொன்னான்.

வாட்ச்மேன் கொடுத்துப் போயிருந்த சாவியைக் கொண்டு பக்கத்து அறைக் கதவைத் திறந்தான். விளக்குகளைப் பொருத்தினான். டிரைவர் ஒரு சிறு பெட்டியையும் கூடையையும் எடுத்து உள்ளே கொண்டு வைத்தான். பதிய வேண்டிய புஸ்தகத்தைச் சந்திரன் பணிவுடன் நீட்டினான்.

தன் 'ஜாக்கெட்டில்' செருகியிருந்த பேனாவை அவள் எடுத்தாள். சந்திரன் கண் கொட்டாமல் பார்த்தபடி நின்றான். ''மிஸ் ரஞ்சனா — சினிமா ஆர்டிஸ்ட், 82—, ஸ்வப்னா நகர் முதல் கிராஸ் தெரு, சென்னை-94'' என எழுதித் திருப்பிக் கொடுத்தாள். படித்துப் பார்த்த சந்திரன், 'நட்சத்திரம் அல்லவா?... ஜொலிக்கிறது...'' என நினைத்துக் கொண்டான்.

''பக்கத்து ரூமிலே யார் மேன் இருக்காங்க?'' எனக் கேட்டாள் வந்தவள்.

''யாரோ சின்னப்புள்ளை ... மெட்ராஸிலேருந்து வந்திருக்குதுங்க...'' என்றான் சந்திரன்.

மிஸ் ரஞ்சனா தன் கைப்பையைத் திறந்து ஒரு பத்து ரூபாய்த் தாளை நீட்டினாள்.

''ஊருக்குள்ளே போய் இரண்டு செட் டிபனு காப்பியோ வாங்கிவா!... நீயும் சாப்பிட்டுக்க... பசி வயிற்றைக் கொல்லுது!'' என்று சந்திரனிடம் கூறியவள் டிரைவரிடம் திரும்பினாள். ''இந்தாப்பா டிரைவர்... நாளைக்கு ஒருமணிக்கு வாஹினியில் 'ஷூட்டிங்' இருக்குது... காரிலே ஏதோ சத்தம் வருது... பார்த்து வை! அப்புறம் தலையைச் சொறிஞ்சுக்கிட்டு நிப்பே... சீட்டைக் கிழித்து விடுவேன்...''

கையில் டிபன் காரியருடன் சீட்டி அடித்தபடி தன் அறையை விட்டுப் புறப்பட்டான் சந்திரன். ''சாப்பாடா கொண்டு வரச் சொல்கிறாய்?... நாளைக்காலை உன் நாஸ்தாவுக்குப் பிறகு யாரிடமாவது பிச்சைதான் கேட்க வேண்டும்! அத்தனையும் துடைத்து எடுத்துக் கொண்டு போக மாட்டேன்!'' என நினைத்தபடி அவன் நடந்தான். ஞாபகமாகத் தன் அறையைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டான்.

அந்த நேரத்தில் ஊரில் எங்கும் சாப்பாடு கிடைக்கவில்லை. தோசைக்கடை ஒன்றுதான் திறந்திருந்தது. மிட்டாய்க்கடை ஒன்று மூடப்படும் நேரம். நாலைந்து பொட்டலங்கள் வாங்கிக்கொண்டு சந்திரன் திரும்பினான்.

அவன் மீண்டும் விடுதியில் நுழையும்போது கார் ஏதும் அங்கு இல்லை. டிரைவர் காரைச் சரி பார்த்துவர எடுத்துப் போயிருப்பான் என நினைத்தான்.

கிட்ட நெருங்கியவனுக்கு விடுதியின் இரு அறைகளும் திறந்து கிடப்பது தெரிந்தது. கையிலிருந்த பொட்டலங்களையும் டிபன் காரியரையும் அப்படியேவைத்துவிட்டு விரைந்தான். இரண்டு அறைகளிலும் ஒரு சாமான் கூட இல்லை. துப்புரவாகத் துடைத்து விட்டுப் போயிருந்தார்கள். சந்திரன் உடுத்தியிருந்த உடையும் அந்தப் பெண் கொடுத்த பத்து ரூபாயில் மீதி சில்லறையும் தவிர வேறு ஏதும் இல்லை.

தலைசுற்ற அப்படியே உட்கார்ந்தான் சந்திரன். வல்லவனுக்கு வல்லவன் என்று கேட்டிருக்கிறான். இப்போது வல்லவளைப் பார்த்தே விட்டான்!

# கிண்டல் கிட்டா!



face to face

# “யதார்த்தம் மட்டுமே இலக்கியம் அல்ல!”





**குங்குமம் பத்திரிகை தனது ஓராண்டுப் பணியை முடித்து இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அதன் ஆசிரியர் திரு சாவி அவர்களுடன், வாசகி ஸ்ரீமதி பானுமதி பாஸ்கரனின் இந்த உரையாடலைப் பிரசுரிப்பதுடன் பத்திரிகைக்கும் அதன் ஆசிரியருக்கும் நமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

பானுமதி: நமஸ்காரம் சார்... இம்மாதிரி தமிழ்ப் பத்திரிகையுலகம் பற்றியும், நாவல், சிறுகதை இலக்கியம் பற்றியும் என்னோடு விவாதிக்க இசைவு தந்ததற்கு என் நன்றியைத் தெரிவிக்கக்கறேன்...

சாவி: அதனாலென்னம்மா... நிறைய வேலைகள் இருக்கிறதினாலே இந்த உரையாடலுக்கு நேரம் இருக்குமோன்னு யோசனை பண்ணினேன். It is all right.... சுருக்கமா டிஸ்கஷனை முடிச்சுடலாம்.

பானுமதி: வேதநாயகம் பிள்ளை எழுதிய முதல் தமிழ் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' வெளியாகி இந்த வருஷத்தோடு நூறாண்டுகள் ஆகின்றன. இந்த நூறு வருஷத்திலே தமிழ் நாவல்கள் அடைந்துள்ள வளர்ச்சி பற்றியும்... நாவலாசிரியர்கள் பற்றியும் உங்கள் அபிப்பிராயத்தைக் கூறுங்களேன்...

சாவி: ஆரம்ப காலத்து தமிழ் நாவல்களைப் பற்றி எனக்கு அவ்வளவாத் தெரியாது. வை.மு. கோதைநாயகி, வடுவூர் துரைசாமி அய்யங்கார் ஆகியவர்கள் நாவல்கள் எழுத ஆரம்பிச்ச அப்புறம்தான் தமிழ் நாவல்கள் மக்களிடையே பரவ ஆரம்பித்தன. இதற்கப்புறம் சரத்சந்திரர், காண்டேகர் போன்ற பிரபல பிறமொழி எழுத்தாளர்களின் நாவல்கள் த. நா. குமாரசாமி, கா. ஸ்ரீ. ஸ்ரீ. போன்றவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டு வரவேற்பைப் பெற்றன. தமிழ் நாவல்களுக்குச் சரியான அந்தஸ்தும், மதிப்பும் கிடைக்க ஆரம்பித்தது 'கல்கி'யின் படைப்புக்கள் வெளிவர ஆரம்பித்த பிறகுதான்! இத்துறைக்கு 'கல்கி' செய்துள்ள சேவை என்றைக்கும் அழிவில்லாதது.

பானுமதி: கல்கிக்குப் பிறகு அந்த அளவுக்கு எழுதும் திறமைவாய்ந்த எழுத்தாளர்கள் தோன்றவில்லையே... இதற்கு என்ன காரணம் கூறுகிறீர்கள்?

சாவி: கல்கி அளவுக்கு இல்லா விட்டாலும் கூட திரு தேவன், திரு அகிலன், திருமதி லக்ஷ்மி போன்ற புகழ் தமிழ் நாவல் இலக்

ிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதே மாதிரிதான் திருஜெயகாந்தனும்... தமிழ் எழுத்து இலக்கியத்தில் அவர் ஒரு புரட்சியே செய்தார் என்றால்கூட அது மிகையில்லை!

பானுமதி: ஆனால், ஜெயகாந்தனின் எழுத்துக்களில்கூட ஆரம்பகாலத்தில் இருந்த சிறப்பு தற்போது இல்லையே!

சாவி: உங்களுடைய இந்தக் கருத்தை நானும் ஒப்புக் கொள்கிறேன்... அதற்கான காரணத்தைப் பற்றி இப்போது நாம் விவாதிக்க வேண்டாமே...


பானுமதி: ஜெயகாந்தனுக்குப் பிறகு கடந்த பத்து வருஷங்களில் சிறப்பாக எழுதக்கூடிய அளவுக்கு எந்த எழுத்தாளரும் உயரவில்லையே!

சாவி: சுஜாதாவைச் சொல்லலாமே!

பானுமதி: சுஜாதா நன்றாக எழுதுகிறார்... ஆனால் அவரது நாவல்களில் ஆங்கில நாவல்களின் வாடை வீசுகிறதே...

சாவி: ...இருந்தாலும்! கதை சொல்வதில் ஓர் புதிய அணுகுமுறையையும், எழுத்தில் தனக்கென ஒரு நவீன பாணியையும் கையாண்டு வாசகர்களிடையே தற்போது மிகவும் பரபரப்பான வரவேற்பை அவர் பெற்றுள்ளாரே...

பானுமதி: நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் அவரது படைப்புக்கள் படிப்பவர்களின் மனத்தில் ஆழ்ந்து படிந்து நீண்ட நாட்கள் தங்கி இருக்கும்படியான Impact ஐ தோற்றுவிப்பதாகத் தெரியவில்லையே!



சாவி: அப்படி இப்போதே சொல்லிவிட முடியாது... காலம்தான் பதில் சொல்ல முடியும்...

பானுமதி: கடந்த பத்து வருடங்களில் வெளியான நாவல்களில் மிகப் பெரும் பகுதி ஆழமும், அழுத்தமும் இல்லாமல் மேலெழுந்தவாரியான படைப்புக்களாகவே இருக்கின்றனவே... இதற்கான பொறுப்பு யாரைச் சார்ந்தது?

சாவி: அழுத்தமான, சிறந்த படைப்புக்களைப் படைக்கக்கூடிய எழுத்தாளர்கள் இப்போதும் இருக்கிறார்கள் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்... ஆனால் அவர்கள் நீண்டநாள் பிரகாசிக்கும்படியாக இருக்கும் விதத்தில் எழுதுவதில்லை...

பானுமதி: வாசகர்கள் சார்பில் என்னால் நிச்சயம் ஒன்றைச் சொல்ல முடியும்... சிறந்த இலக்கியப் படைப்புக்களை மிகவும் விரும்பிப் படிக்கக்கூடிய அளவுக்கு மனப்பக்குவம் உள்ள வாசகர்கள் நிறையபேர் தற்போதும் இருக்கிறார்கள். அப்படியிருக்க நீங்கள் சொல்லும் அந்த எழுத்தாளர்கள் அத்தகைய படைப்புக்களை ஏன் சிருஷ்டிக்கக் கூடாது?

சாவி: நீங்கள் இவ்வளவு தூரம் விடாப்பிடியாக இருப்பதால் வெளிப்படையாகக் கூறுகிறேன். தமிழ் நாவல் இலக்கியமோ, சிறுகதை இலக்கியமோ சிறப்பான அளவுக்குச் சமீப காலத்தில் வளர்ச்சி அடையாததற்குப் பத்திரிகை ஆசிரியர்கள்தான் முக்கிய காரணம்... ஒப்புக் கொள்கிறேன்...

பானுமதி: நீங்களே ஒரு பத்திரிகை ஆசிரியர் ஆயிற்றே... இதற்கு ஏதேனும் உங்களால் இயன்றவரை செய்யக் கூடாதா?

சாவி: பத்திரிகை நடத்துவது இலக்கிய வளர்ச்சிக்கு இல்லாமல் வியாபார நோக்கில் என்கிற சூழ்நிலை தற்போது தமிழ்ப் பத்திரிகையுலகில் பரவியுள்ளது... சீக்கிரமாக விலை போகக்கூடிய எழுத்துக்களைப் பத்திரிகை ஆசிரியர்களும் நாடிப் போகின்றனர்... அதனால் பத்திரிகைகளில் சீக்கிரம் விலையாகக்கூடிய விதத்திலான எழுத்துக்களை எழுத்தாளர்களும் எழுதுகின்றனர்...

பானுமதி: இது மிகவும் வருந்தத்தக்க விஷயம் இல்லையா?

சாவி: வருந்தத்தக்க விஷயம் தான்... என்ன செய்வது? சிறந்த இலக்கியப் படைப்புக்களை மட்டும் வெளியிட்டால் பத்திரிகையின் விற்பனை ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் தாண்டுவதில்லையே!

பானுமதி: இதே நிலை நீடித்தால் மலையாளம், வங்காளம் ஆகிய மொழிகளில் உள்ளது போன்ற முன்னேற்றம் இல்லாமல் எழுத்து இலக்கிய வளர்ச்சியில் நாம் மிகவும் பின் தங்கி விடுவோமே!

சாவி: இந்நிலை நீடித்தால் தமிழில் சிறந்தஇலக்கியப் படைப்புக்கள் எதிர்காலத்தில் தோன்றுவதில் தேக்கநிலை ஏற்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்... அதேசமயம் வங்காளம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் தற்போதைய நிலை முன்பு போல் சிறப்பாக இல்லை என்று என்னால்கூற முடியும்... 'செக்ஸ்' அடிப்படையிலான சாதாரணமான படைப்புக்கள்தான் மலையாளத்தில் தற்போது ஏராளமாக வருகின்றன...

பானுமதி: தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளிலும் தற்போது 'செக்ஸ்'ஸுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது... இதனால் இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் தவறான பாதிப்புக்கள் உண்டாகாதா!

சாவி: 'செக்ஸ்'ஸும் வாழ்க்கையில் ஒரு முக்கியமான அடிப்படை அம்சம்தானே!.. ஆனால் அதற்குத் தேவைக்கு அதிகமாக முக்கியத்துவம் அளிப்பது தவிர்க்கப்பட வேண்டியதுதான்...

பானுமதி: உங்களது பத்திரிகையிலேயே அம்மாதிரிக் கதைகள் நிறைய வருகின்றனவே!

சாவி: இதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. முன்பு நான் 'தினமணிக்கதிரில்' ஆசிரியராக இருந்தபோது எப்படி வெளியிட்டேன் என்பதைப்பற்றி இப்போது கேட்காதீர்கள். அப்போதைய சூழ்நிலையும், வியாபார எதிர்நோக்கும், நான் செயலாற்ற வேண்டி இருந்த எதிர்பார்ப்பும் வேறு... தற்போதைய எனது நிலைபற்றிக் கூறுகிறேன். தற்போது மாறுபட்ட கோணங்கள் உள்ள கதைகளையும் ஒரு குறிப்பிட்ட தரத்திற்குத் தாழாத கதைகளையும் தான் தேர்ந்தெடுத்துப் பிரசுரிக்கிறோம். 'இந்தக் கதையைத் தன் மகள் படிக்கக் கூடாது' என்று எந்தத் தாய்க்கும் நினைப்புத் தோன்றாத மாதிரியான கதைகளைத்தான் தேர்ந்தெடுக்கிறோம்...

பானுமதி: ஒரு கதையில் எத்தனையோ வலுவான காட்சிகள் இருக்கும்போது அவற்றையெல்லாம் விடுத்துப் பாலுணர்வைத் தூண்டும்படியாகப் பெண்களின் உடலமைப்பைப் பலவித கோணங்களில் வெளிப்படுத்தக்கூடிய படங்களையே கதைக்குப் படமாகப் பெரும்பாலான பத்திரிகைகளும் வெளியிடுகின்றனவே... குறிப்பாக இம்மாதிரிப் படங்களில் அதிக எண்ணிக்கையை ஓவியர் திரு ஜெயராஜ் வரைகிறார்... இவைகளைத் தவிர்க்கக் கூடாதா?

சாவி: திரு ஜெயராஜ் அவர்களின் படங்கள் கவர்ச்சியாக உள்ளன என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவற்றில் ஆபாசம் கிடையாது. இதற்குக் காரணம் சரியான proportionல் உடலமைப்பு இருக்கும்படி அவர் வரைவதுதான். மிகைப்படுத்தும் போதுதான் ஆபாசம் தலைகாட்டும்... நீங்கள் சொல்வதுபோல் கதைகளில் வரும் வலுவான காட்சிக்குப் படம் போடலாம்.. பிரபல ஓவியர்களுக்குக் கதையை நிதானமாகப் படித்துத் தகுந்த காட்சியைத் தேர்ந்தெடுத்துப் படம் போட நேரமும் இருப்பதில்லை... பத்திரிகை ஆசிரியர்களும் அவர்களுக்குப் போதிய நேரம் கொடுப்பதில்லை!

பானுமதி: அதற்காக 'செக்ஸ்' அடிப்படையான படம்தான் போடவேண்டும் என்று நியதியா என்ன?

சாவி: இதற்கும் நான் முன் சொன்ன பதில்தான். வியாபார நோக்குதான் அடிப்படையாக அமைகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளாக நிச்சயம் இன்னொரு மனிதன் இருக்கிறான். 'சே... என்ன இவ்வளவு மட்டமாகப் படம் போட்டிருக்கிறான்' என்று வெளிக்காகத் திட்டும்போது உள்ளுக்குள்ளாக, 'ஆஹா... என்னமாய்ப் படம் போட்டிருக்கிறான்!' என்று ரசிப்பவர்கள் ஏராளம். கதையைப் படிக்கத் தூண்ட, அதன் மூலமாய்ப் பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க இம்மாதிரிப் படங்கள் வியாபார நோக்கில் அவசியமாக ஆகிவிட்டன... கோயில் சிற்பங்களைக் கலைக் கண்ணோடு ஏற்றுக் கொள்வது போன்ற பக்குவத்தை இவைகளைக் காணும்போதும் வரவழைத்துக் கொள்ள வேண்டும்; தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் ஒன்றை வலியுறுத்திக் கூறுகிறேன். படம் எப்படி இருந்தாலும் லட்சியம் செய்யாமல் நாங்களும் பிரசுரித்து விடுவதில்லை. கவர்ச்சி அவசியம்தான்... அதற்கென்று அருவருப்பைத் தரும் விதத்தில் அமைந்து விடக்கூடாது என்பன போன்ற நியதிகளை நாங்களும் கடைப்பிடிக்கிறோம்...

பானுமதி: சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் குறைந்து கட்டுரைகள் பேட்டிகள் துணுக்குகள் ஆகியவற்றிற்குத் தமிழ்ப் பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனவே. இதேமாதிரி சினிமா, அரசியல் ஆகியவையும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன!

சாவி: பத்திரிகைகளை அதிகம் காசுகொடுத்துப் படிப்பவர்கள் பொதுவாக 25 வயதுக்கு உட்பட்டவர்கள் தான்... என்னைப் பொறுத்தமட்டில் இந்த நினைப்பை மனத்தில் கொண்டுதான் பத்திரிகையின் அம்சங்களைத் தேர்ந்தெடுக்கிறேன்... நீங்கள் சொன்ன மாதிரி சினிமாப் பகுதிகள், பேட்டிகள், துணுக்குகள் ஆகியவை இந்த நோக்கில்தான் இடம் பெறுகின்றன.

பானுமதி: இதே ரீதியில் 'ஸ்போர்ட்ஸ்' சம்பந்தமாக நிறைய வெளியிடலாமே!

சாவி: 'ஸ்போர்ட்ஸ்' சம்பந்தமாக அதிகமாகச் செய்திகள் கட்டுரைகள் வெளியிடத் தமிழில் சரியான 'சொற்கள்' கிடையாது. ...இதுதான் காரணம்.

பானுமதி: 'நியூ வேவ்' பாணி என்று கூறப்படும் எழுத்துக்கள் பற்றி...

சாவி: அது மாதிரி எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை.

பானுமதி: யதார்த்தமான கதைகளை வெளியிட்டு இலக்கிய வளர்ச்சிக்கு உதவப் பத்திரிகை ஆசிரியர்கள் தயங்குகிறார்கள் என்று குறை கூறப்படுவது பற்றி...

சாவி: யதார்த்தமான கதைகளை நானும் அவ்வப்போது பிரசுரிக்கிறேன்... யதார்த்தமாக எழுதுவதாக நினைத்துக் கொண்டு யதார்த்தமில்லாமல் எழுதுபவர்களுக்கு நான் பதிலளிக்கத் தேவையில்லை. யதார்த்தமாக எழுதுவதுதான் இலக்கியம் என்பதையும் என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. யதார்த்தமான எழுத்து எழுத்திலக்கியத்தின் ஒரு பகுதிதானே தவிர அதுவே முழுமையானதல்ல!

பானுமதி: இன்னும் எவ்வளவோ கேட்க வேண்டும் என்று வந்தேன்... உங்களுக்கு நிறைய வேலைகள் இருப்பதாக முன்பே சொன்னதால் இதற்குமேலும் உங்களது நேரத்தை எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை... வரட்டுமா?

சாவி: தேங்க் யூ... போய் வாருங்கள்.

உரையாடல் ஏற்பாடு: நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி

# வட்டமேஜை

● திரு 'செம்பியன்' எழுதிய 'நடுங்க வாருங்கள் ஜெகத்தோரே' என்ற விளக்கத்தால், 24–12–1978 'கல்கி' இதழில் வாசகர்களுக்கு இரண்டரைப் பக்கங்கள் வீணாகி விட்டன.

நகைச்சுவையை ரசிக்கத் தெரியாதவர்களிடம் வாதப் பிரதிவாதங்களைப் பரிமாறிக் கொள்ளுவது வீண்வேலை.

மதுரவாயல் எஸ். ஏ. பழனிவேல்

● 'நடுங்க வாருங்கள் ஜெகத்தோரே!' என்ற செம்பியன் கட்டுரையைப் படித்தேன். எல்லாம் சரிதான், ஆனால் 'செம்பியன் கருத்துக்கள் நம் கருத்துக்கள் அல்ல. அவை அவரது சொந்தக் கருத்துக்கள் — ஆசிரியர்' என்பதை ஏன் விட்டுவிட்டீர்கள்!

வடுகவிருட்சியூர் ஆர். அமுதா

● 'இதயம்' மணியனும், கல்கி ராஜேந்திரனும் முன்கூட்டியே திட்டமிட்டுவிட்டு, வாசகர்களைத் திரும்பத் திரும்ப இப்படி நன்றாக அறுக்க ஆரம்பித்து விட்டார்களோ என்றும் எண்ண வேண்டியுள்ளதே.

சின்னதாராபுரம் எஸ். பூவேந்த அரசு

● கி. ராஜேந்திரன் அவர்கள் எழுதும் புதிய — புரட்சிகரமான நாவல் ஆரம்பமாகப் போவதாக விளம்பரம் வந்து கொண்டிருக்கிறது. அவரது எழுத்தில் — சொல்லும் கருத்தில்தான் புரட்சியை எதிர்பார்க்கிறோம். மற்றபடி, ஏனைய பத்திரிகைகளைப் போல் 'சதைப் புரட்சி' நாவலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

மதுரை—11 சக்திநாயனார்

● இதுவரை கல்கியில் வெளிவந்த திரைப்பட நடிக நடிகையரின் கட்டுரைகளில் மகுடம் போல் விளங்குவது சிவாஜி கணேசனின் பேட்டிக் கட்டுரை. கட்டுரையைப் படித்ததும் எனது நண்பர் சொன்னது ஞாபகம் வந்தது. திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கோமதி சங்கர தீட்சிதர் வ. உ. சி. யோடு நெருங்கிப் பழகியவர். தீட்சிதர் அவர்கள் சினிமாப் படம் பார்ப்பதே கிடையாது. கப்பலோட்டிய தமிழன் வெளிவந்ததும் நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் தீட்சிதர் நண்பர்களுடன் படத்தைப் பார்க்கச் சென்றிருக்கிறார். தம்மையும் அறியாமல் ''அடே! வ. உ. சி. மாதிரியே இருக்கே'' என்று உணர்ச்சிப் பெருக்கில் உரக்கக் கத்தினாராம்.

சென்னை—5 சங்கர சுப்பிரமணியம்

● 'கடம்' பற்றிய கட்டுரை கண்டேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள 'கடம் சுந்தரமய்யரின் பேரன்' நான்.

தாத்தா வாசித்த அந்தக் 'கடம்' இன்னும் எங்கள் வீட்டில் இருக்கிறது. கிட்டத்தட்ட 2½ அல்லது 3 அடி உயரம். எளிதில் தூக்கக் கூட முடியாது. அதை என் தாத்தா, உயரத்தில் போட்டு, அது சுழன்று கொண்டேவந்து அவர் வயிற்றோடு புதைந்து கொள்ளுமாம் — அப்பா சொல்வார்! அவ்வளவு பெரிய 'பானை' இப்போது எந்த வித்வானிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வளவு அழகான கட்டுரை வெளியிட்டிருக்கிறீர்கள். ஆனால் 'கடம்' என்ற ஒன்று பக்கவாத்தியமாக இன்னும் சில காலம்கூட இருக்காது போலிருக்கிறதே! அதைப்பற்றி விநாயக்ராம் ஒன்றுமே குறிப்பிடவில்லையே! சங்கீத உலகிலும் 'இன்ஃப்ளுயன்ஸ்' செய்யத் தெரிந்தவர்களால்தான் எதிர் நீச்சல் போட முடிகிறது என்பது எனது எண்ணம்.

அவிநாசி பில்லூர் எஸ். சுந்தரராமன்

● 'சொன்னது நீதானா?' விமரிசனத்தின் கடைசி வரியைப் படித்துவிட்டு எனக்குச் சிரிப்பு அடங்கக் கால்மணி நேரம் பிடித்தது. ஐயா, கௌசிகன் அவர்களே தொடரட்டும். உமது விமரிசனப்பணி!

புதுவை—5 மு. பாஸ்கரன்

● இந்த வாரக் கதைகள் அனைத்தும் வெகு அருமை! இத்தகைய தரமிக்க கதைகளைக் கல்கியிலன்றி, வேறு எங்கே காண முடியும்?

சென்னை—41 எஸ், ராதாகிருஷ்ணன்

● வலதுகைப் பந்தாளரின் புகைப்படத்தைப் போட்டுவிட்டு 'கார்ஸன் காவ்ரி' என்று சொல்லுகிறீர்கள். எப்படி நம்புவது?

சென்னை—4 நா. சீதா

மேற்படி புகைப்படம் காவ்ரியுடையதுதான். துரதிர்ஷ்டவசமாக அச்சகத்தில் ஆஃப்செட் நெகடிவ் புரண்டு போய்விட்டிருக்கிறது. தவறு நேர்ந்ததற்கு வருந்துகிறோம். - ஆர்.

● 'தமிழ் நாடக வரலாறு' என்ற நூல் எழுதத் தொடங்கியுள்ளேன்.

தமிழ் நாடகத்தைப் பற்றிய முறையான வரலாறு இதுவரை எழுதப்படவில்லை என்னும் குறையை நீக்குவதற்கு இம்முயற்சி.

இன்றைய நாடக உலகில் அனைவரையும் சந்திக்க இருக்கிறேன். மறைந்த நாடகப் பெரியோர்களின் உறவினர்கள், நண்பர்கள் போன்ற அனைவருடனும் தொடர்பு கொள்ள விரும்புகிறேன். புகைப்படங்கள், பத்திரிகைச் செய்திகள், நூல்கள் இருந்தாலும் அனுப்பி வைத்தால் உதவியாக இருக்கும்.

வி. கோபாலகிருஷ்ணன்

ஸி-398, 46வது தெரு, 9வது அவென்யூ, சென்னை-600083

● கடந்த நான்கு வருடங்களுக்கு மேல் பழைய மாம்பலத்தில் கிளை நூலகம் செயல்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. பழைய மாம்பல வாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். மற்றும் கிளை நூலக வேலை நேரத்தைக் காலை 8–12; மாலை 5–9 என மாற்றினால் வேலைக்குச் செல்பவர்களுக்கு மிக சௌகரியமாக இருக்கும்.

சென்னை—33 ம. கிருஷ்ணசாமி

# மும்முனைகள்

## கி.ராஜேந்திரன்



### அத்தியாயம் 3

**"பா**க்கியம்! பாத்ரூமிலே ஹீட்டர் ஸ்விட்சைப் போட்டு வை! வாசலில் பக்கெட்டில் தண்ணீர் எடுத்து வை'' என்று கூறி விட்டுப் புறப்பட்டார் வைத்தியலிங்கம். ''சத்யா! டிரைவர் இருக்கானு வீட்டுக்குப் போயாச்சா, பாரு! இல்லேன்னு நீதான் காரை எடுக்கணும்'' என்றார்.

''என்னப்பா ஆச்சு? ஒண்ணுமே சொல்லாமே கிளம்பறீங்க?'' என்றான் சுலோசனா.

''ரொம்ப வருத்தமான சமாசாரம்மா! நம்ம கம்பெனியிலே ரொம்ப நாளா வேலை பார்த்து வந்தவரும், தொழிலாளர் யூனியன் தலைவருமான வைரவன் இறந்து போய்விட்டார்! கொஞ்ச நாட்களாகவே உடம்பு சரியில்லாமத்தான் இருந்தது. டாக்டர் மேனனிடம் ஒரு ஸ்பெஷல் கேஸா கவனிக்கச் சொல்லி யிருந்தேன். 'எல்லா நோயாளிங்களுமே எனக்கு ஸ்பெஷல்தான். உமக்காக வைரவனை எக்ஸ்ட்ரா ஸ்பெஷலா கவனிக்கறேன்' என்று மேனன் வாக்களித்தார். குணமாகி வருவதாகத்தான் சொன்னார். திடீர்னு ஒரு திருப்பம், ஏன், எப்படி ஏற்பட்டதோ, புரியலே.''

''தீபம் அணையறதுக்கு முன் சுடர் ஒளி அதிகரிக்கும்பாங்களே, அப்படித்தான் போலிருக்கு'' என்றாள் பாக்கியம்.

வைத்தியலிங்கம் இரும்பு பீரோவைத் திறந்தார். இது போன்ற அவசர சந்தர்ப்பம் எதற்காவது தேவைப்படும் என்பதற்காகவே கவரில் போட்டுத் தனியே வைத்திருக்கும்

ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு வாசலுக்கு நடந்தார். அதற்குள் சத்யா காரை போர்ட்டிகோவுக்குக் கொண்டு வந்திருந்தான்.

கலா அவசரம் அவசரமாகத் தோட்டத்து மலர்கள் சிலவற்றைப் பறித்துச் சிறு செண்டு தயாரித்திருந்தாள். ''அப்பா! இந்த நேரத்தில் கடைகள் திறந்திருக்காது; மாலை கிடைக்காது: இதைக் கொண்டு போறீங்களா?'' என்றாள்.

''ஆகட்டும்மா'' என்று கூறி வாங்கிக் கொண்டார் வைத்தியலிங்கம்.

சத்யாவும் அவரும் வீடு திரும்பும்போது இரவு வெகு நேரமாகி விட்டது. கலாசனு தூங்கி விட்டிருந்தாள். பாக்கியம்தான் கவலையோடு காத்திருந்தாள். ''என்னங்க, வைரவன் வீட்டிலே ரொம்பச் சங்கடப் படறாங்களா?'' என்று கேட்டாள்.

''வருத்தப்படாம இருப்பாங்களா? ஒரே புலம்பல்தான். 'உங்க வருத்தத்தை என்னால் குறைக்க முடியாதும்மா. அதை ஆண்டவனால் கூடக் குறைக்க முடியாது. ஆனா உங்களுக்கு இந்தத் துயரத்தைத் தாங்கத் தைரியத்தை யாவது தரணும்னு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்தேன்.''

''பணத்தைக் கொடுத்தீங்களா?''

''கொடுத்தேன். 'இது போன்ற சமயங்களில் பணத்தைப் பற்றிப் பேசறதே அநாகரிகம்னு தோணுது. ஆனால் அந்த அநாகரிகத்தைச் செய்வது அவசியமாயும் இருக்கு' என்று சொல்லிக் கொடுத்து விட்டு வந்தேன்.''

இருவரும் குளித்துவிட்டு வந்து சாப்பிட உட்கார்ந்தனர். பாக்கியம் மேஜைமேல் ஆவி பறக்கும் இட்டிலி — சாம்பாரும் சட்னி தயிர் முதலானவையும் வைத்திருந்தாள். பரிமாறிக் கொண்டே, ''ரொம்பக் கவலையா இருக்கீங்க போலிருக்கே'' என்றாள்.

''கவலைதான் பாக்கியம், உனக்கு இதைப் புரிஞ்சுக்கற சக்தி இருக்கோ இல்லையோ, எனக்குத் தெரியலே'' என்ற வைத்தியலிங்கம் தொடர்ந்தார்: ''வைரவன் உண்மையிலேயே ஒரு கோஹினூர் வைரம் போன்ற அபூர்வ மனுஷன். அவர் அகவினி எண்டர்பிரைஸஸுக்கு வந்து சேர்ந்ததும் தொழிலாளர் தலைவராக விளங்கியதும் என் பாக்கியம் என்று நினைக்கிறேன். அவர் தலைவராகவும் அருள்ராஜ் காரியதரிசியாகவும் இருந்து தொழிலாளர் நலனைக் கவனித்துக் கொண்டார்கள்; தொழிலகத்தின் நலனையும் மனத்தில் கொண்டு செயல்பட்டார்கள். ஒரு சிரமமும் இல்லாம நிர்வாக இயந்திரம் ஸ்மூத்தா ஓடிக்கிட்டு இருந்தது. இனி எதிர்காலம் எப்படி இருக்கும்னு யோசித்தால் கவலையாகத்தான் இருக்கு.''

''எல்லாம் நல்லபடியே நடக்கும். உங்களுடைய உத்தமமான மனசுக்கு ஆண்டவன் ஒரு குறையோ சோதனையோ வைக்கமாட்டான். சத்யாவும் பாஸ் பண்ணியாச்சு; உங்களுக்கு உதவியா இருக்கப் போறான். கவலையே படாதீங்க'' என்று பாக்கியம் கூறி, தயிர் பரிமாறினாள்.



''சத்யாவை நினைக்கத்தான் நான் அதிகமா கவலைப்படறேன் பாக்கியம். என் காலம் வரை எல்லாம் சிரமம் இல்லாம நடந்து போச்சு. இப்போ இவனிடம் பொறுப்பை ஒப்படைச்சுட்டுப் படிப்படியா நான் ஒதுங்கிக்கலாம்னு நினைக்கறச்சே பிரச்னைகள் உருவாகும்போல் தோணறது. சத்யாவோட அதிர்ஷ்டம் எப்படியோ'' என்றார் வைத்தியலிங்கம்.

அன்றிரவு தந்தை, மகன் இருவருக்குமே தூக்கம் பிடிக்கவில்லை. தந்தை கம்பெனியின் எதிர்காலம் சத்யாவின் எதிர்காலம் ஆகியவை பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். சத்யாவோ வைரவனின் வெண்துணி போர்த்திய உடலை, உயிர்க்களையற்ற முகத்தைத் தன் நினைவிலிருந்து அப்புறப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். இதற்கு முன்பாக அவனுக்கு ஒரு பிரேதத்தைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை. தெருவோடு காரில் போகும்போது ஏதாவது சவ ஊர்வலம் எதிர்ப்பட்டால் கூடத் தலையைத் திருப்பிக் கொண்டு விடுவான். இப்போது, 'காரைப் பூட்டிக்கொண்டு என் பின்னேடு வா' என்று அப்பா எதற்காகச் சொன்னார்? நான் பாட்டுக்குக் காரிலேயே இவர் துக்கம் விசாரித்துவிட்டு வரும்வரை காத்திருந்திருப்பேனே' என்று எண்ணிக் கோபமடைந்தான்.

'அன்று மாலைப் பொழுது எவ்வளவு ஆனந்தமாக உயிர்த்துடிப்பு மிக்கதாகக் கழிந்தது? மாலை முடிந்து இரவுக்குள் அன்றைய தினம் இப்படி சோகமாக, பயங்கரமாக மாறி விட வேண்டுமா?'

அவன் சிரமப்பட்டுப் பிரமீளாவின் எழிலுருவத்தைத் தன் எதிரே கொண்டு வந்து நிறுத்தினான். அவளுடன் மானசீகமாகக் காதல் மொழி பேசத் தொடங்கினான். ஆயினும் இடையிடையே வைரவனின் பிரேதக்களை நிரம்பிய முகம் மிதந்து வந்து பிங்கிலியை மறைப்பதை அவனால் தடுக்க முடியவில்லை.

எழுந்து விளக்கைப் போட்டுவிட்டு வந்து மறுபடியும் படுத்துக் கொண்டான்!

## அத்தியாயம்-4

அகிலின் என்டர்பிரைஸஸ் நிறுவனத்துக்கு மறுநாள் விடுமுறை அறிவிக்கப்பட்டது. வைரவனின் இறுதிச் சடங்குகளெல்லாம் ஒரு குறைவுமில்லாமல் நடக்குமாறு வைத்தியலிங்கம் கவனித்துக் கொண்டார்.

அதற்கு மறுநாள் அவர் காரியாலயத்தில் வழக்கமான நேரத்தில் நுழைந்து தமது அறையில் மேஜைமுன் அமர்ந்தார். அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களுள் ஒன்றின் கயிற்றை அவிழ்த்துப் பிரித்து அவர் கையெழுத்துக்காக எதிரே வைத்தான் ஒரு பியூன்.

கையெழுத்துப் போட்டபடியே, ''சத்யா வந்தாச்சா?'' என்றுக் கேட்டார் வைத்தியலிங்கம்.

''இன்னும் இல்லீங்க'' என்ற பதில் கிடைத்ததும், ''அவன் வந்ததும் முதல் காரியமாக என்னை வந்து பார்க்கச் சொல்லு'' என்றார். அதே நேரத்தில், ஒப்பு நோக்கு கையில், புதிதான வெள்ளை பேண்டும் பழசாகிப் போன கறுப்புக் கோட்டும் டை அணியாத சட்டையுமாக அருள்ராஜ் உள்ளே நுழைவதை அவர் கண்கள் கவனித்து விட்டன. உடனே, ''நீ போகலாம். ஃபைல்களைக் கவனித்து இன்னும் அரை மணி, முக்கால் மணியில் அனுப்பி வைக்கிறேன்'' என்று பியூனை அனுப்பி வைத்தார் வைத்தியலிங்கம்.

அவன் தலைமறைந்ததும் அருள்ராஜ் பக்கம் திரும்பி, ''ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று கேட்டார். பேனாவை மூடி வைத்து விட்டுக் கரங்களைக் கோத்து மேஜை மீது வைத்துக் கொண்டார்.

''முகஸ்துதிக்காகச் சொல்லலே, நேற்றும் முந்தாநாள் இரவும் நீங்க வைரவன் விஷயத்துலே



நடந்துக்கிட்ட விதம் ரொம்பப் பெருந் தன்மையானது. எல்லோரும் பாராட்டறாங்க'' என்றார் அருள்ராஜ்.

''உட்காரேன் அருள்'' என்றார் வைத்திய லிங்கம். ''என்னை இத்தனை காலத்துக்குப் பிறகு முகஸ்துதி பண்ணி நீ என்ன தலையில் கட்டிக் கொண்டு போகப் போறே? எனக்குத் தெரியாதா அதெல்லாம்! மேலும் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறாங்க, என்ன பேசிக்கிறாங்கங்கறது பற்றி உண்மையான விவரங்களை நான் தெரிஞ்சுக்கத்தானே வேணும்? இல்லாத போனால் எப்படி இவ்வளவு பெரிசா வளர்ந்துட்ட கம்பெனியை நிர்வாகம் பண்ணறது? கசப்போ இனிப்போ உண்மை நிலவரங்களை உன்னைத் தவிர, எனக்கு வேறே யார் சொல்வார்கள்?''

''அப்புறம்... அப்புறம்'' என்று தயங்கி ஆரம்பித்தார் அருள்ராஜ். நரை விழத் தொடங்கியிருந்த கேசத்தைக் கோதிவிட்டபடியே ''ஒரு பர்ஸனல் மேட்டர், சின்ன விஷயம்தான். என் மகன் தீபக் பால் இங்கேயே வேலை செய்யலாம்னு நீங்க சொன்னீங்களாம்'' என்றார்.

''ஆமாம். இரண்டு நாட்கள் முன்னாடி என்னை வந்து சந்திச்சான். 'அலெம்பிக் கெமிகல்ஸ்லே ஒரு பொஸிஷன் காலியா இருக்கு. என்னைச் சிபாரிசு பண்ணுங்க'ன்னு கேட்டான். நான் தான் சொன்னேன், 'இங்கேயே ஒரு உத்தியோகம் போட்டுத்தரேன்டா, வந்துடு. பம்பாய் பரோடான்னு அலைய வேண்டாம்'னேன். அதுக்கென்ன இப்போது?''

''அது... அது... வேண்டாம் சார்!''

''ஏன் அலெம்பிக்கிலே நிறைய சம்பளம் தராங்களா? எவ்வளவு தராங்க?''

''ஐயோ, அதுக்கில்லே ஸார்! அவங்க ஆயிரம் ரூபாய் கொடுத்தாக்கூட நீங்க உங்க கையாலே தருகிற நூறு ரூபாய்க்குச் சமமாகாது. தீபக்கைப் படிக்க வைச்சதே நீங்க தானே? நன்றி மறக்கலாமா? பணம் ஒண்ணு தானா பிரதானம், வாழ்க்கையிலே?''

''பின்னே ஸ்டேட்டஸுக்குப் பார்க்கறீங்களா? ஸாராபாய் போலெல்லாம் லட்சக் கணக்கில் முதல் போட்டு ஆரம்பிச்சதில்லே நம்முடைய அகலினி என்டர்பிரைஸஸ். ஆனா சிறுக ஆரம்பிச்சாலும் படிப்படியா நன்னா வளர்ந்துக்கிட்டு வரது உனக்கே தெரியும். உன் பையனுடைய கௌரவத்துக்கு ஒரு குறையும் வராது.''

''உங்களுக்குக் கீழே வேலை செய்வதைவிடத் தேவ பதவியைக்கூட அவன் பெரிசா நினைக்க மாட்டான் ஸார். நான் அதற்காகச் சொல்ல வரவில்லே.''

''பின்னே?''

''எனக்கு உங்க மேலே இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்திக்கிட்டு என் மகனை நான் இங்கே வேலைக்கு வைச்சுட்டதாக மற்றவங்க ஏதாவது தப்பா நினைச்சுப்பாங்க ஸார்! அதனால்தான் யோசிக்கிறேன்.''

''என்ன அசட்டுத்தனமா பேசறே? 'வேலைக்கு ஆள் எடுக்கிறதுன்னா, ஏற்கெனவே வேலையில் இருக்கிறவங்களோட உறவினர்களுக்குத்தான் முதல் உரிமை தரப்பட வேண்டும்' என்றுகூட வற்புறுத்துகிற காலம் இது!''

''இருக்கலாம் ஸார்! ஆனால் எனக்கு என்னமோ அது சரின்னு தோணலே. ஏற்கெனவே நான் இங்கே வேலையில் இருக்கிறேன் என்கிற ஒரே காரணத்துக்காக என் மகனையும் இங்கே வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று நான் போராடுவது என்ன நியாயம்? என் மகனுக்கே தகுதியிருந்து வேறு பலருடன் போட்டியிட்டு அவன் இங்கே ஒரு ஸ்தானத்தைப் பெறுவதுதான் தர்மம்.''

''அருள்! உன் மகனுக்குத் தகுதி இருக்கிறது. அது எனக்குத் தெரியும். அதுபோக நீ தர்மம் பேசி என்னை ஒரு தர்ம சங்கடத்தில் சிக்க வைத்து விடாதே.!''

''ஏன் ஸார்? நான் என்ன பண்ணினேன்?''

''பின்னே? நீ இப்படி தர்ம நியாயம் பேசினால் நான் என்னுடைய பிள்ளைக்கு இந்த ஸ்தாபனத்திலே எப்படி வேலை போட்டுக் கொடுக்கிறதாம்?''

''அட கடவுளே! என் மகனையும் உங்க பிள்ளையையும் நீங்க ஒரே மாதிரியா பாவித்துப் பேசலாமா ஸார்? அது வேற விஷயம் இது வேறே சமாசாரம்.''

''அதெப்படி இது வேறே சமாசாரம் ஆகும்? நான் இந்த நிறுவனத்துக்கு ஆரம்ப நாளிலேருந்து முதலாளின்னா நீயும் இந்த நிறுவனத்தில் ஆரம்ப நாளிலேயிருந்து விசுவாசமுள்ள ஊழியனா இருந்திருக்கே. ஆக உன் மகனுக்கு இங்கே வேலை போட்டுத் தருவது ஃபேவரிடிஸம்னா முதலாளி தன் மகனுக்கு வேலை போட்டுத் தருவது மட்டும் ஃபேவரிடிஸம் ஆகாதா?''

''ஸார்! என் வாயை அடைச்சுட்டீங்க. என்றாலும் சத்யா இங்கே வேலைக்கு வரப் போவதாகச் சொன்னீங்களே ரொம்ப சந்தோஷம் ஸார்! ஆமாம், இருபது வருஷங்களுக்கு மேல் உழைச்சு இந்தக் கம்பெனியை நன்னா வளர்த்துட்டீங்க. இனிமே சத்யா கொஞ்சம் கொஞ்சமாப் பொறுப்பை எடுத்துக்கிட்டு உங்களுக்குச் சிறிது சிறிதாக ஓய்வு தர வேண்டும்தான்.''

''அருள்! அவனுக்கு எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் வேலை பழக்கித் தருகிற பொறுப்பை உன்னிடம் விடுகிறேன்.''


''அந்தப் பொறுப்பைச் சந்தோஷமாக ஏற்கிறேன் ஸார்! ஏ டு இஸட் எல்லாம் கற்றுத் தரேன்.''

''வேண்டாம்! ஏ டு எம் கற்றுக் கொடு, போதும். அவனுக்கு கெமிஸ்ட்ரி என்றாலே அலர்ஜி. மான்யுபாக்சரிங் ஸைடுக்கு அவன் போக வேண்டாம். மானேஜ்மெண்ட் பற்றி எல்லாம் கற்றுக் கொடு போதும்!''

''சரி ஸார்!'' என்ற அருள்ராஜ் உரையாடல் முடிந்து விட்டதாகக் கருதி எழுந்தார். ''இன்னும் ஒரு நிமிஷம்'' என்று அவரைத் தடுத்து நிறுத்தினார் வைத்திய லிங்கம். பின்னர் தொடர்ந்தார்:

''உன் தீர்மானத்தைக் கொஞ்சம் புனராலோசனை பண்ணு. உன் மகன் கெமிக்கல் இன்ஜினீயர் இல்லையா? ஐ நோ ஹி இஸ் எ ஜெம்! உன் பிள்ளையாச்சே வேறே எப்படி இருப்பான்? அவன் மருந்துகள் தயாரிப்புப் பகுதியையும் சத்யா நிர்வாகப் பொறுப்பையும் கவனித்துக் கொண்டால் அப்புறம்

# நான் எனது பென்ஷனை தாமதமின்றி பெறுகிறேன்



# நீங்கள் எப்படி?

ஐ.ஓ.பி, என்னுடைய பென்ஷன் தொகையை ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று என் கணக்கில் சேர்த்துவிடுகிறது—எவ்விதக் கட்டணமும் இல்லாமலே.

உங்கள் பென்ஷனை கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு பிரிவின் கீழ் பெறுகிறீர்களா?

- மத்திய அரசின் சிவில் பென்ஷன்
- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பென்ஷன்
- பாதுகாப்புத்துறை (Defence) பென்ஷன்
- ரெயில்வே பென்ஷன்

எமது வங்கியில் கணக்கு ஒன்றை துவக்குங்கள். உங்கள் பென்ஷனை வசூலித்து உங்கள் கணக்கில் சேர்த்து விடுவோம். மாதந்தோறும் முதல் தேதியன்று—தவறாமல். இச்சேவைக்கு கட்டணம் எதுவுமில்லை.

இந்த சேவை சென்னை, பங்களூர், பம்பாய், கல்கத்தா, தில்லி, ஹைதராபாத், லக்னோ நகரங்களிலுள்ள எமது கிளைகளிலும் மற்றும், தமிழ்நாடு, பாண்டிச்சேரி, பஞ்சாப், ஒரிசா* மாநிலங்களிலுள்ள எமது கிளைகள் அனைத்திலும் கிடைக்கும்.

*ஒரிசா, பஞ்சாப் மாநிலங்களிலும் மற்றும் கல்கத்தா நகரத்திலும், அந்தந்த மாநில அரசின் பென்ஷனையும் இதே முறையில் பெறலாம்.

ஐ.ஓ.பிக்கு வருக—உங்களுக்கேற்ற அரிய சேமிப்புத் திட்டங்களைப் பெறுக.


**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்**

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

Sista's-IOB 56.78 Tam

மும் முகம் எங்கள் மோகம்

ஒட்டி நின்ற நாம் இருவர்...
உறவுக்கொரு கடல், ஒன்றுபட்ட உணர்வு.
கட்டழகர் அவர் நெஞ்சம் கடலாழம்,
சட்டையோ கடல் நீலம்... அதற்கு
ஒட்டி இசைந்திடுதே என் உடுப்பு;
தொட்டணைக்குதடி அலைக்கரங்கள்.



என்றும் அவர்கள் ஆடை.... இயற்கையாக மபத்லால்.

MAFATLAL GROUP

மபத்லால் துணிவகைகள்:
சூட்டிங் • ஷர்ட்டிங் • சேலைகள்
• டிரெஸ் மெட்டீரியல்ஸ் • ஷர்ட்

everest/463/MS-tm

எனக்கு அகளினி எண்டர்பிரைஸஸின் எதிர்காலம் பற்றிக் கவலையே இல்லே!''

''நான் பேசிப் பார்க்கிறேன் ஸார். ஆனால் அவன் ஒப்புக்கொள்வான் என்று தோணலே.''

''பிராமிஸ் மீ யூ வில் டிரை யுவர் பெஸ்ட்.''

''கண்டிப்பா ஸார்! ஐ பிராமிஸ்'' என்று கூறிவிட்டு அருள்ராஜ் அகன்றார்.

அவர் சென்றதும் வைத்தியலிங்கத்தின் கவனம் மறுபடியும் ஃபைல்களில் சென்றது.

கால் மணி நேரம் சென்றிருக்கும். அவரது ஆழ்ந்த கவனம் கலைப்புண்டது. சத்யா அறைக்கதவைத் திறந்து கொண்டு பூட்ஸ் ஒலி எழுப்ப நடந்து வந்து அவரெதிரே ஒரு நாற்காலியில் காலமேல் கால் போட்டுக் கொண்டு ஹாய்யாகச் சாய்ந்தபடி அமர்ந்தான். ''என்னப்பா! நான் வந்ததும் உங்களைப் பார்க்கணும்னு சொன்னீர்களாமே, என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''கெட் அப்!'' என்றார் வைத்தியலிங்கம் அமைதியாக. சத்யா ஒன்றும் புரியாமல் விழித்தான். ''கெட்அப்! யூ மானர்ஸ்லெஸ் ஃபெல்லோ!'' என்று வைத்தியலிங்கம் கூறிய போது அவர் குரல் உயர்ந்தது. மீண்டும் ஒரு முறை ''கெட்அப் ஐ ஸே!'' என்றபோது குரல் அதட்டலாகவே ஒலித்தது.

சத்யா மருண்டுபோய் எழுந்து நின்றான். ''என்னப்பா இது? உங்களுக்கு என்ன வந்துட்டுது? பள்ளிக்கூட வாத்தியார் மாதிரி எங்கிட்ட நடந்துக்கிறீங்க?'' என்றான்.

''ஆபீஸிலே என்னை அப்பான்னு கூப்பிடாதே! 'ஸார்'ன்னு சொல்லு! ஐ ஆம் யுவர் பாஸ் ஹியர்! வேலைக்கு வர முதல்நாளே முக்கால் மணிநேரம் லேட்டா வந்திருக்கே!''

''என்னப்பா இது? இதையெல்லாம் போய்ப் பிரமாதப்படுத்திக் கிட்டிருக்கீங்க?'' என்றான் சத்யா குழைவாக.

வைத்தியலிங்கம் கோபம் பொங்க எழுந்து நின்றார். ''ஷட் அப்! ஐ வாண்ட் டிஸிப்ளின் இன் திஸ் ஆஃபீஸ். அண்ட் தட் இஸ் மை ஆர்டர்!'' என்று இரைந்தார்.

சத்யா அவனையும் அறியாமல் துள்ளி எழுந்து நின்றான்: ''எஸ் ஸார்!'' என்று ராணுவவீரன் போல் சல்யூட் செய்தான். அதேகணத்தில் அவன் மனத்தில் ஒரு கசப்பு உணர்ச்சியும் பரவியது. விரைவில் அது கோபமாக மாற, அறையை விட்டு வெளியேறிய போது பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டிருந்தான்.

தன்னை முதலாளியாக எண்ணிக் கொண்டு அகளினி எண்டர்பிரைஸஸ் கட்டிடத்துக்குள் நுழைந்தவன், அருள்ராஜ் மேற்பார்வையில் அவர் சொல்கிற காரியங்களைத்தான் தான் செய்ய வேண்டுமென்பதை உணர்ந்தபோது ஏமாற்றத்துக்குள்ளானான். அதுசில விநாடிகளிலேயே வெறுப்பாக மாறியது.

ஐந்தரை மணிவரை எப்படியோ காலத்தை ஓட்டியவன், 'இனி வீட்டுக்குப் போவதா? அல்லது பிரவீணாவைச் சந்திக்கச் செல்வதா?' என்று ஓரிரு விநாடிகள் யோசித்தான். அதன் முடிவில், 'இரண்டு இடங்களுக்கும் போக வேண்டாம், நண்பன் ஆனந்துடன் சற்று நேரம் ஆனந்தமாகப் பேசிக் கொண்டிருந்தால் போதும்' என்று தீர்மானித்தான்.

தனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களுக்கும் அதன் விளைவான கோப தாபங்களுக்கும் ஒரு மாற்றுத் தேடி நுங்கம்பாக்கத்தில் ஆனந்தினுடைய பாச்சிலர் ஃபிளாட்டில் அவன் காலிங் பெல்லை அழுத்தியபோது, ''ஹூ இஸ் தட்?'' என்று ஆனந்தின் குரல் உள்ளேயிருந்து ஒலித்தது.

''நான்தான் சத்யா'' என்று இவன் பதில் கொடுத்தான்.

கதவு திறந்து கொண்டது. அதனைத் திறந்தது ஆனந்த் அல்ல. மாலை மயங்கு முன்னரே மினி நைட் கவுனுக்குள் புகுந்து கொண்டு விட்ட ஒரு பெண்மணி.

(தொடரும்)




# பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

## பிரைவேட் லிமிடெட்

"வீணு விகார்" — 17-A, ஃபிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்- 400022. டெலிபோன்: 471455
தந்தி: "GROWRICH" தபால் பெட்டி 6759

சந்தாதாரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
எங்கள் புதுவருட வாழ்த்துக்கள்

**எங்கள் சேவையின் 33வது ஆண்டின் தொடக்க நாளாகிய இன்று உங்கள் நம்பிக்கைக்கும் ஆதரவிற்கும் நன்றி**

மஹராஷ்ட்ரா சிட் பண்டு விதிகளின்படி (Act LV of 1974) கீழ்க்கண்ட புதிய குருப்புகளை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத்தொகை | மாதங்கள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| A | 200/- | 5,000/- | 25 |
| R | 100/- | 2,500/- | 25 |
| J | 500/- | 20,000/- | 40 |
| K | 250/- | 10,000/- | 40 |
| L | 125/- | 5,000/- | 40 |
| N | 50/- | 2,000/- | 40 |

**ஒரு விளக்கம்**

தடை பரிசு சீட்டுகளுக்கே சிட்பண்டுக்கு அல்ல.
எங்களால் நடத்தப்படும் பரிசு குலுக்கல்
தடை செய்யப்பட்டவற்றிலிருந்து மாறுபட்டது.

வேலை நேரம்:
காலை 8 முதல் 10-30 வரை.
மாலை 4 முதல் 7-30 வரை.
வார விடுமுறை: திங்கட்கிழமை.

**33 YEARS**

எங்கள் சேவை
உங்களுக்குத் தேவை

ஸ்தாபிதம்: 1947

# ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

## 22

விடுதலை பெற்றபின் விடுத்த முதல் அறிக்கையில் ஆங்கிலேயருக்கும் ஆங்கிலேய ஆட்சிக்கும் இடையில் நிரம்ப வித்தியாசங்கள் இருப்பதை மகாத்மா இந்தியர்களுக்கு நினைவூட்டினார்:

''இரண்டுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள நம்மில் பலர் தவறி விட்டோம் என்று எனக்குத் தெரியும். அப்படித் தவறிய அளவில் நமது லட்சியத்துக்கு ஊறு விளைவித்திருக்கிறோம்.''1

பார்க்கப் போனால் ஸி. ஆர். பதினெட்டு மாதங்களுக்கு முன்பு சொன்னதைத்தான் இப்போது மீண்டும் மகாத்மா வலியுறுத்தியிருந்தார். ''வெறுப்பும் கோபமுமே நிலவுகிறது. உண்மையான அகிம்சை அல்ல'' என்று ஸி. ஆர். முன்பு கூறியிருந்தார்.

• • •

சேலம் வளர் நகர்ப் பகுதியில் இருந்த வீட்டுக்கு இரு உபாத்தியாயர்கள் வந்து பதினாறு வயதான நரசிம்மனுக்கும் பதினொரு வயதான லக்ஷ்மிக்கும் டியூஷன் சொல்



லிக்கொடுத்தார்கள். முடிந்த போது ஸி. ஆரும் படிப்புச் சொல்லித் தருவதில் உதவினார்.

1922லிருந்து கிருஷ்ணசாமி, டி. பிரகாசம் ஆரம்பித்து நடத்திய சென்னை தினசரி சுயராஜ்யாவில் பணி புரிந்து வந்தார். அரசுக் கல்லூரிகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு அரசு சம்பந்தப்படாத பம்பாய் தேசிய மருத்துவக் கல்லூரிப் பயிற்சி அளித்து வந்தது. அதில் ராமசாமிக்கு இடம் கிடைத்திருந்தது. ஜூஹூவில் ராமசாமியுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு மகாத்மா ஸி. ஆருக்கு ஒரு சுவாரஸ்யமான கடிதம் எழுதினார்.

''இப்போது காலை மணி 3:30. இரவு பன்னிரண்டு மணிக்குப்பிறகு நான் தூங்கவேயில்லை. நீங்கள் அதற்கு ஒரு காரணம்!

''நேற்றிரவு உங்கள் மகனுடன் பேசிக் கொண்டிருந்தேன். நீங்கள் அவனுக்கும், அவன் உங்களுக்கும் கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதுகிறீர்களா தமிழிலா என்று யதேச்சையாகக் கேட்டேன். அவன் ஆங்கிலத்தில்தான் எழுதுவதாகச் சொன்னபோது அந்தச்செய்தி என்னைத் தூக்கிவாரிப் போட்டு விட்டது.

''உங்களிடம் நான் மாபெரும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். உங்களிடம் உள்ள ஒரு விசனிக்கத்தக்க குறை இது என எனக்குத் தோன்றுகிறது: ஏன் இப்படி? உப்பே தன் சுவையை இழந்து விடுமானால்...? தமிழ்நாட்டின் மிகச்சிறந்த புதல்வர்களே அவளைக் கைவிடுவார்களேயானால் பெருவாரியான தமிழ் மக்கள் என்ன செய்வது? பொது ஜனங்களிடையே ஊழியம் புரிய வேண்டிய ராமசாமியின் எதிர்காலம் என்ன ஆவது? இது சம்பந்தமாக எனக்கு விளக்கம் தரவும் அல்லது இனி இந்த இளைஞனுடன் உங்களது சிறிய தமிழிலேயே கடிதத் தொடர்பு கொள்வதாக எனக்குச் சத்தியம் செய்து தரவும்; ஆழ்ந்த அன்புடன், எம். கே. காந்தி.''2

இவ்வாறு ஸி. ஆரைக் கண்டித்த பிறகு மகாத்மா ராமசாமியிடம் தம் அப்பாவுக்குத் தமிழிலேயே எழுதுமாறு பணித்தார். அக்கடிதத்துடன் காந்தியிடமிருந்து ஒரு குறிப்பு இணைக்கப்பட்டிருந்தது: ''அப்பாவுக்கு முன்பாக மகன் (தமிழில் எழுத) ஆரம்பித்தாகிவிட்டது. இப்படித்தான் இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு கொள்கிறீர்கள் என்ற கண்டுபிடிப்பு என் மனத்தை எவ்வளவு தூரம் அரித்தெடுத்தது என்பதை இப்போது உங்களால் உணர முடியும்.''3

மொழி வெறியை மகாத்மா ஊக்குவித்து வந்தாரா என்ன? இல்லவே இல்லை! உண்மை என்னவெனில் ஸி. ஆரும் அவருடைய புதல்வர்களும் பொதுஜனங்களை ஆகர்ஷித்துக்கொள்வார்கள் என்று காந்தி நம்பினார். அதற்குச் சாமானியனின் மொழி அவசியமானது என்று கருதினார்.

இந்தக் கண்டனம் ஸி. ஆரிடம் ஏற்படுத்திய உணர்ச்சி, அளப்பரிய மகிழ்ச்சியிலிருந்து மாறுபட்டதாக இல்லை. இதனை ஸி. ஆர்., தேவதாஸுக்குத் தாம் எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்தார். மகாத்மா தம்மிடம் வைத்திருந்த நம்பிக்கைக்கு மற்றுமொரு புதிய நிரூபணம் கிடைத்து விட்டதாகக் கருதினார்:

''பாபு என்னிடமுள்ள ஒரு குறையைத்தான் பார்த்தார் என்று அவருக்கு நான் எழுதியுள்ளேன். என்னிடமுள்ள வேறு நூறு குறைகளைப் பற்றி நானோ அல்லது அவரோ என்ன செய்யப் போகிறோம்? எனது அன்புக்குரிய தலைவருக்கு எனது காணிக்கையாகக் கொடுக்க நூறு குறைபாடுகளைத் தவிர என்னிடம் வேறு என்ன இருக்கிறது'' 4

---

1. டெண்டுல்கர், மகாத்மா, பம்பாய், 1951 பாகம் II பக்கம் 166.
2. காந்தி ஸி. ஆருக்கு எழுதியது. மார்ச் 1924 SN 8566 A சபர்மதி சங்கிரஹாலயம்.
3. காந்தி ஸி. ஆருக்கு எழுதியது. மார்ச் 1924 SN 8571 சபர்மதி சங்கிரஹாலயம்.
4. ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதியது. 29-3-24 SN 8629 சபர்மதி சங்கிரஹாலயம்.

நாளாவட்டத்தில் ஸி. ஆர். தமிழில் பிரபலமானதும் இலக்கியத் தரமானதுமான பல நூல்களைப் படைக்கவிருந்தார்.

காந்தி, ஸி. ஆரின் ஆரோக்கியம் பற்றிய விஷயத்திலும் தலையிட்டார். ஆஸ்பத்திரியில் காந்தியை ஸி. ஆர். காண வந்தபோது ஸி. ஆருடைய ஆரோக்கியம் மிகவும்பாதிக்கப் பட்டிருப்பதைக் காந்தி கண்டு கொண்டிருந்தார். ''ஆஸ்துமாவும் அதன் விளைவான உறக்கமற்ற இரவுகளும் நிரந்தரமான பாதிப்புக்களாக உள்ளன. வீட்டைக் காலி செய்ய மாட்டேன் என்று பிடிவாதம் செய்யும் ஒண்டுக்குடித்தனக்காரர்கள் மாதிரி அவை என் உடலை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன'' என்று ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதினார்.[5]

சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்த இருவரை ஒருவர் பின் ஒருவராக மகாத்மா சேலத்துக்கு ஸி. ஆருக்குப் பணிவிடை செய்ய அனுப்பி வைத்தார். அறிவாளியும் துறவியும் ஆன வினோபா பாவேயின் சகோதரர் சிவாஜி பாவே இவர்களில் ஒருவர். மற்றொருவர் சுரேந்திர குப்தா. நல்ல இளம் உள்ளங்களைத் தமது சரீரத்துக்குப் பணியாற்ற வைத்துக் கொள்ள நேர்ந்ததில் ஸி. ஆர். சங்கடத்துக்கு உள்ளானார்.[6] சிவாஜியும் சுரேந்திராவும் உடம்பைப் பிடித்துவிட்டும் வேலைக்காரர்களாகச் செயல்பட்டும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நோயாளியின் உடம்பை ஆரோக்கியமுள்ளதாக்கினார்கள்.

**கா**ங்கிரஸின் ஆரோக்கியம்பற்றி மகாத்மா, ஸி. ஆர். இருவருமே கவலை கொண்டனர். வெறும் பேச்சுடன் நின்ற காங்கிரஸ் 1920லிருந்து போராட்ட சக்தியாக மாறியிருந்தது. ஆனால் இப்போது அது மீண்டும் பழைய நிலைமைக்கே திரும்பி விட்டதுபோல் தோன்றியது. அது போராட்டத்துக்கு லாயக்குள்ளதாக விளங்க வேண்டுமெனில் அதனிடம் கண்டிப்புக் காட்டியாக வேண்டும்.

இந்தக் கண்டிப்பினை உருவாக்க மகாத்மா ஓர் உபாயம் கண்டார். இதில் ஸி. ஆருக்கும் பங்கிருந்ததாகத் தெரிய வருகிறது. இந்த உபாயத்தை அமுல் படுத்தியபோது அது குறித்துச் சர்ச்சைகள் இருந்தன. இருப்பினும் பகுதி அளவில் வெற்றி கண்டார் மகாத்மா. இந்த உபாயம், நூல் நூற்றுத் தந்து காங்கிரஸ் அங்கத்தினராகலாம் என்பதுதான். இது போன்ற ஓர் உபாயம் உலகில் வேறு எங்கும் எந்த அரசியல் கட்சியிலும் கையாளப் படவில்லை. அங்கத்தினராவதற்கு நாலணா செலுத்துவதற்குப் பதில் சுயமாக நூற்ற நூலைத் தரலாம் என்ற இந்த யோசனை விசித்திரமானது. ஜனநாயகப் பண்புக்கு ஒவ்வாதது என்று தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இருப்பினும் காந்தி இந்த யோசனையை 1924 ஜூனில் வெளியிட்டார். டிசம்பரில் சில மாறுதல்களுடன் இது ஏற்கப்பட்டது. மறுபடியும் செப்டம்பர் 1925ல் இது கட்டாயமில்லை என்று அவரவரது விருப்பத்துக்கு விடப்பட்டது.

காந்தி இந்தக் கருத்தைக் கூறுவதற்கு முன்பாகவே மார்ச் மாத யங் இந்தியாவில் ஸி. ஆர்., ''காங்கிரஸ் அங்கத்தினராக ஒரு நிபந்தனை'' என்ற தலைப்பில் இந்த யோசனையை வெளியிட்டிருந்தார். ஒரு சிப்பாய்க்குத் தேகப்பயிற்சி எவ்வளவு முக்கியமோ, கிறிஸ்துவனுக்குச் சர்ச்சுக்குப் போவது எவ்வளவு இன்றியமையாததோ அப்படிக் காங்கிரஸ் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் நூல் நூற்பது அமைய வேண்டும் என்று ஸி. ஆர்., மகாத்மா இருவருமே கருதினர்.

**ம**காத்மாவின் விடுதலைக்குப் பிறகு அனைவரது கவனமும் அவர்பால் திரும்பியிருந்தது. அவரது கருத்து என்ன என்று அறிய மோதிலால் நேருவும் தாஸும் அவருடன் ஜூஹூவில் பேசினார்கள். மாறுதல் வேண்டாதார், சுயராஜ்ய கட்சிக்காரர்களின் புரட்சி மனப்பான்மையை மகாத்மா அடக்கி விடுவார் என எதிர்பார்த்தனர். ஆனால் சட்டசபைப் பிரவேசத்தில் தமக்கிருந்த ஆட்சேபணைகளை மகாத்மா தாஸிடமும் மோதிலால் நேருவிடமும் வெளியிட்டபோதிலும் சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் சட்டசபையில் இருக்க வேண்டியவர்கள்தாம் என்றும் கூறி மாறுதல் வேண்டாதாரை வியப்பில் ஆழ்த்தினர்.

(தொடரும்)

தமிழாக்கம்: இ. ராஜேந்திரன்

(Copyright Reserved)

5. ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதியது. 29-3-24 SN 8629 சபர்மதி சங்கிரஹாலயம்.
6. ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதியது. 12-5-24 தேவதாஸ் காந்தி தாள்கள்.

விற்பனையாகிக்கொண்டிருக்கிறது

**ராஜாஜி வாழ்க்கை வரலாறு**

(ஆங்கிலம்)

ராஜ்மோகன் காந்தி எழுதியது

தனிப்பிரதி விலை ரூ. 45/- ரிஜிஸ்தர் தபால் செலவு ரூ. 5/-

விவரங்களுக்கு:

கல்கி காரியாலயம்

ரேஸ் கோர்ஸ் ரோட், கிண்டி, சென்னை-600032

# துளசி மாடம்

நா. பார்த்தசாரதி

## 31

பொழுது விடிந்தால் முகூர்த்தம். கலியாண வீடு அரவம் அடங்கி உறங்க இரவு இரண்டு மணி வரை ஆயிற்று. இரண்டரை மணிக்குச் சமையற்காரர்கள், கூடத் துண்டை விரித்து அடுப்படியிலேயே தலைசாய்த்து விட்டார்கள்.

நடுஇரவு இரண்டே முக்கால் மணிசுமாருக்கு வாசலில் சுமார் ஆயிரம் பேர்வரை உட்காருகிறமாதிரி போட்டு அலங்கரித்திருந்த கலியாணப் பந்தலில் தீப்பிடித்து விட்டது. ஒரே கூச்சலும் கூப்பாடுமாகத் தூக்கக் கிறக்கத்தில் இருந்து விழித்து என்ன நடந்திருக்கிறது என்று புரிந்து சுதாரித்துக் கொள்ளவே எல்லோருக்கும் சில விநாடிகள் பிடித்தன. தீயை அணைக்க அந்தக் காற்று வீசிய காலை வேளையில் யாவரும் மிகவும் சிரமப்பட்டனர். காலை எட்டரையிலிருந்து ஒன்பது மணிக்குள் முகூர்த்தம். ஏறக்குறைய முகூர்த்தத்துக்கு மேடை போட்டிருந்த இடம் உட்பட எரிந்து சாம்பலாகி விட்டது.

சிறிதும் கலங்காமல் வேணுமாமா சாரங்கபாணி நாயுடுவைக் கூப்பிட்டு, ''நீர் என்ன பண்ணுவீரோ தெரியாது நாயுடு! எவனோ கொலைகாரப்பாவி — கிராதகன் இங்கே இந்த அக்கிரமம் பண்ணியிருக்கான். காலம்பர ஆறு மணிக்குள்ளே மறுபடியும் பந்தலை நீர் போட்டாகணும். லட்ச ரூபாய் செலவானாலும் பரவாயில்லே. காரியம் நடக்கட்டும்'' — என்று உணர்ச்சிமயமாகி உரிமையோடு நாயுடுவுக்கு உத்தரவு போட்டார்.

''ஆகட்டுங்க!... நானுச்சு'' — என்றார் நாயுடு. காலை ஐந்தரை மணிக்குத் தீப் பிடித்த சுவடே தெரியாதபடி ஜிலுஜிலுவென்று பழைய அலங்காரத்தோடு மறுபடியும் புதுப் பொலிவுடன், விளங்கிற்று அந்த மணப்பந்தல்.

கமலியின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் கொண்டுபோய்க் காண்பிப்பதற்காக மூவி காமிராவில் மாப்பிள்ளை அழைப்பு முதல் அந்தக் கலியாண நிகழ்ச்சிகள் எல்லாம் ஒன்றுவிடாமல் கலர் பிலிமில் படமாக்கப்பட்டது. அதிகாலையிலிருந்து வைதிகச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. வசந்தி கடைசி முயற்சியாக ஒருமுறை காமாட்சி யம்மாளை அழைத்துப் பார்க்கலாம் என்று புறப்பட்டுச் சென்று முயன்று பார்த்தாள். ஆனால், காமாட்சியம்மாள் எழுந்து நடமாடக் கூடமுடியாத நிலைக்குத் தளர்ந்திருந்தாலும், ''மாமீ! மனசிலே ஒண்ணும் வச்சக்காமே வந்து சந்தோஷமாக் கல்யாணத்தை நடத்திக் குடுங்கோ! இது உங்காத்துக் கல்யாணம்'' — என்று வசந்தி வேண்டியபோது அதற்கு உற்சாகமாகவோ எதிராகவோ இசைவாகவோ பதில் சொல்லாததாலும் வசந்தியே மேற்கொண்டு அதை வற்புறுத்தவில்லை.

''எல்லாம் ரொம்ப லட்சணமாகத்தான் இருக்குடி உங்க காரியம்! பிள்ளைக்கு அம்மா இங்கே இப்பிடிக் கிழிச்ச நாராக் கெடக்கறா. நீங்க பாட்டுக்கு அங்கே ஜாம் ஜாம்னு மேளதாளத்தோட கல்யாணத்தை நடத்திண்டிருக்கேளே?'' என்று முத்துமீனாட்சிப் பாட்டியும், கிராமத்திலிருந்து வந்திருந்த காமாட்சியம்மாளின் பெரியம்மாவும் வசந்தியிடம் குறைப்பட்டு அலுத்துக் கொண்டார்கள். ஆனால் காமாட்சியம்மாள் உற்சாகமாக இல்லையென்றாலும் அப்போது வசந்தியைச் சினந்தோ கடிந்தோ எதுவும் பதில் சொல்லவில்லை. அதேசமயம் காமாட்சியம்மாளின் அந்தப் பதிலில் எந்த இசைவும் தெரியவில்லை.

''நான் இப்படிக் கெடக்கிறேனே? எங்கே வரது? எதுக்குப் போறது?'' — என்று கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோல வார்த்தைகள் தளர்ந்து நலிந்து வெளி வந்தன அவளிடமிருந்து.

''தொடங்கறச்சேயே அச்சான்யம் மாதிரி அபசகுனமாக் கல்யாணப் பந்தல்லே நேத்து ராத்திரி தீப்பிடிச்சுடுத்தாமே?'' — என்று முத்துமீனாட்சிப் பாட்டி நீட்டி முழக்கிக்கொண்டு ஆரம்பித்தாள். வசந்தி அதற்குப் பதில் சொல்லவில்லை. மனிதர்களின் சூழ்ச்சியால் நடைபெறும் காரியங்களுக்கு எல்லாம் அச்சான்யம், அபசகுனம் என்று பெயர் சூட்டிவிடும் பழங்கால மனப்பான்மையை எண்ணி வியந்தாள் வசந்தி. முன்பு சர்மா விட்டு வைக்கோற் படைப்பில் தீப்பற்றியபோதும் இதே போலத்தான் கமலியின் தலையில் அந்தப் பழிபோடப்பட்டது என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. காமாட்சியம்மாள் கல்யாணத்துக்கு வருகிற நிலையில் இல்லை என்று தெரிந்ததுமே அவள் அங்கே அதிகநேரம் தங்கவில்லை. ஊர் முறைப்படி மீண்டும் காலையில் வீடுவீடாக நேரில் சென்று அழைக்க வேண்டியவர்களை அழைத்து விட்டுத் திரும்பினாள். கமலி—ரவி மேலிருந்த சீற்றம் இயற்கையாகவே காமாட்சியம்மாளிடம் இப்போது தணிந்திருக்கிறதா அல்லது உடல் நிலையின் தளர்ச்சி காரணமாகக் குறைந்திருக்கிறதா என்பதை வசந்தியால் கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. எனினும் கல்யாணத்துக்கு அழைக்கப்போன தன்னிடம் சீறி விழுந்து வசைமாரி பொழியக்கூடும் என்று தான் எதிர்பார்த்ததற்கு மாறாகக் காமாட்சியம்மாள் நிதானமாகவே நடந்து கொண்டது வசந்திக்கு ஆச்சரியத்தை அளித்திருந்தது.

திருமணத்தில் எந்தச் சடங்கும் எந்த மந்திரமும் விட்டுப்போகக் கூடாது என்பதில் கமலி அக்கறை காட்டினாள். சர்மாவும், வேணுமாமாவும் கூட அதைப் புரோகிதரிடம் வற்புறுத்தியிருந்தார்கள். ''சீக்கிரமா முடியுங்கோ. நாழியாறது'' — என்று உள்ளூர் வைதீகக் குடும்பங்களிலேயே சடங்குகளையும் மந்திரங்களையும் தட்டிக் கழித்து விட்டுவிரைவாக முடித்துக் கொண்டுபோக விரும்பும் இந்தக் காலத்தில் எங்கிருந்தோ வந்த ஒரு பிரெஞ்சு யுவதி அதில் இத்தனை அக்கறை



காட்டுவது புரோகிதருக்கு வியப்பை அளித்தது.

முரண்டும், பொறுமையும் நிறைந்த உள்ளூர் மனிதர்கள் சிலர்தான் வரவில்லையே ஒழியக் கல்யாணம் ஜேஜே என்றிருந்தது. கூட்டத்துக்கோ, ஆர்வத்துக்கும், கலகலப்புக்குமோ குறைவில்லை. இறைமுடிமணிமேல் சீமாவையர் போட்டிருந்த பொய் வழக்கு கோர்ட்டில் முடிவாகாமல் இன்னும் இழுபட்டுக் கொண்டிருந்ததனால் — அவர் திருமணத்துக்கு வர முடிந்திருந்தது. நிறையத் தொழிலதிபர்களும், வர்த்தகர்களும், பிரமுகர்களும்கூட வந்திருந்தார்கள்.

''உம்மை சாட்சாத் ஆஞ்சநேயர்னுதான் சொல்லணும் நாயுடு! அனுமார் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்த மாதிரி — ராத்திரியோட ராத்திரியா எல்லாச் சாமானையும் கொண்டு வந்து எப்படியோ கல்யாணப் பந்தலைப் பழையபடி போட்டு முடிச்சுட்டீர்...'' — என்று நாயுடுவைப் பாராட்டினார் வேணுமாமா. பெண்மணிகளின் கூட்டத்தைப் பொறுத்த வரை உள்ளூர் வைதீகக் குடும்பத்துப் பெண்களும், உறவுக் காரர்களின் வீட்டுப் பெண்களும் அதிகம் தென்படவில்லை என்றாலும், சற்றே நாகரிகமடைந்த குடும்பத்துப் பெண்களும், உத்தியோக நிமித்தம் வெளியூர் சென்றிருந்தவர்களும் வேணுமாமா, சர்மா ஆகியோரின் உறவு வகையினருமான பெண்களும், வித்தியாசம் பாராட்டாமல் அந்தத் திருமணத்துக்கு வந்திருந்தார்கள்.

பாணிக்ரஹணம், ஸப்தபதி, அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் முதலிய திருமணச் சடங்குகளைப்பற்றி ஏற்கெனவே புத்தகங்களில் படித்தும், ரவியிடம் கேட்டும் அறிந்திருந்த கமலி இப்போது ஒவ்வொன்றையும் தன் சொந்த அநுபவமாகவே இரசித்து மகிழ்ந்தாள். அவற்றை இப்போது அவள் அந்தரங்கமாக விரும்பினாள் என்றே சொல்லலாம்.

''ஏழு அடிகள் என்னோடு உடன் நடந்து வந்துவிட்ட நீ இனி என் தோழியாகிறாய்! நாம் இருவரும் உயிர் நண்பர்களாகி விட்டோம்! உன்னோடு இன்று நான் அடையும் சிநேகிதத்திலிருந்து இனி என்றும் பிரிக்கப் பட்டவனாக மாட்டேன். என்னுடைய சிநேகிதத்திலிருந்து நீயும் பிரிக்கப்பட்டவளாக மாட்டாய். நாம் இருவரும் ஒன்றுபட்டவர்களாவோம். நாம் இனி செய்ய வேண்டிய அனைத்திற்கும் இன்னின்னவற்றை இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று ஒன்றாகச் சங்கல்பம் பண்ணிக்கொண்டு நாம் செயற்படுவோம். ஒத்த மனத்தோடு பிரியமுள்ளவர்களாகவும் ஒருவர்க்கொருவர் பிரகாசிப்பவர்களாகவும், நல்லெண்ணம் உடையவர்களாகவும், உணவையும், பலத்தையும் சேர்ந்தே அநுபவிக்கிறவர்களாகவும் வாழ்வோம். எண்ணங்களால் நாம் ஒத்த கருத்துடையவர்களாவோம். விரதங்களையும் நோன்புகளையும், சேர்ந்தே அநுஷ்டிப்போம். நம்முடைய விருப்பங்கள் ஒத்தவையாக இருக்கட்டும். நீ 'ரிக்' வேதம் ஆகவும் நான் 'ஸாம' வேதம் ஆகவும் இருப்போம். நான் விண்ணுலகமாக இருக்கிறேன். நீ பூமியாக இருக்கிறாய். நான் வித்துக்களாகவும் நீ விதைக்கப்படும் நிலமாகவும் இருக்கிறோம்! நான் சிந்தனை! நீ சொல்! என்னுடையவளாக என்னை அநுசரித்தவளாக நீ ஆவாய்! பிள்ளைப் பேற்றுக்காக, வற்றாத செல்வத்துக்காக இன்சொல்லுக்கு உரியவளே, நீ என்னுடன் வருக!'' —

என்ற பொருளுள்ள 'ஸப்தபதி'யைக் கேட்டுக் கமலி ரவியை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள். நான்கு நாள் மாலையும், ஊஞ்சல் நலங்கு, வைத்துப்பாடுதல் முதலிய பெண்களின் சடங்குகள் எல்லாம் குறைவில்லாமல் அந்தக் கலியாணத்தில் இருந்தன. ஒவ்வொரு சடங்கிலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், கமலி பெருமகிழ்ச்சி அடைந்தாள். ஒரு கிராமாந்தரத்துக் கலியாணத்தில் உள்ள சின்னச் சின்ன மகிழ்ச்சிகளும் சுவாரஸ்யங்களும், உல்லாஸங்களும் சந்தோஷங்களும், சிலிர்ப்புகளும், சிரிப்புகளும் அந்தத் திருமணத்திலும் இருந்தன. கண்ணுக்கு மையிட்டுக் கைகளுக்கும், கால்களுக்கும் செம் பஞ்சுக் குழம்பு தீட்டிக் கூந்தலைச் சவுரி வைத்து நீளப் பின்னிப் பட்டுக் குஞ்சலங்கள் கட்டித் தமிழ்நாட்டு மணப்பெண்ணாகவே கமலியைத் தோன்றச் செய்திருந்தாள் வசந்தி. நிறமும், இதழ்களின் வெளுத்த ரோஸ் வண்ணமும்தான் வித்தியாசமாகத் தெரிந்தன. மையிட்டிருந்த காரணத்தால் கமலியின் விழிகளில் கூட அதிக வேறுபாடு தெரியவில்லை.


திருமண நாளன்றும், அடுத்த சில நாட்களிலும் குமார், பார்வதி, இருவரும்கூடக் கலியாண வீட்டிலேயே செலவழித்து விட்டதால் காமாட்சியம்மாள் பெரியம்மாவுடனும், முத்துமீனாட்சிப் பாட்டியுடனும் வீட்டில் தனித்து விடப்பட்டாள். அந்த வீடும் கல்யாணத்துடன் சம்பந்தப்பட்டது என்பதைக் காட்டுவதைப்போல வாசலில் குலை தள்ளிய வாழை மரங்களும், மாவிலைத் தோரணமும் கட்டப்பட்டிருந்தன. சுவரில் வெள்ளைச் சுண்ணாம்புப் பட்டைகளும், புதிய செம்மண் பட்டைகளும் அடிக்கப்பட்டிருந்தன. வாசலில் செம்மண் கோலம் பெரிதாகப் போடப்பட்டிருந்தது. ஆனால் வீட்டின் உள்ளே மட்டும் நிசப்தம் நிலவியது. சிலசமயங்களில் காமாட்சியம்மாளின் இருமல், முனகல் ஒலிகள் மட்டும் கேட்டன. பாட்டிகளின் பேச்சுக்குரல் இடையிடையே கேட்டது. மற்றப்படி வீட்டை ஒருமுறைக்காக மங்கல அடையாளங்களோடு அலங்கரித்துவிட்டு வெளியூரில் நடைபெறும் கலியாணத்துக்குப் புறப்பட்டுப் போயிருந்தவர்களின் இல்லத்தைப் போலவே அரவமற்றிருந்தது அந்த வீடு. ''நலங்கு மஞ்சத் தேங்காய் எல்லாம் ஒரே தடபுடல் படறதாண்டீ காமூ! இந்த அக்கம்பக்கத்து ஊர்களிலேயே நலங்கு பாடறதுலே கெட்டிக்காரின்னு பேரெடுத்தவள் நீ! ஆனா உங்காத்துப்பிள்ளை கல்யாணம் நீ போகாமலேயே நடக்கறது'' — என்று முத்து மீனாட்சிப்பாட்டி காமாட்சியம்மாளிடம் ஆரம்பித்தாள். காமாட்சியம்மாள் முதலில் இதற்குப் பதில் எதுவுமே சொல்லவில்லை. ஆயிரம் அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் வீட்டுத் தகராறுகள் பாட்டிமூலம் ஊர் வம்பாகப் பரவுவதைக் காமாட்சியம்மாள் விரும்பவில்லை என்று தெரிந்தது. சிறிது நேரம்கழித்து ஆவலை அடக்க முடியாமல் காமாட்சியம்மாளே கலியாணத்தைப் பற்றிப் பாட்டியிடம் ஏதோ விசாரித்தாள்.

''உங்காத்திலே தங்கியிருந்துதே அந்த வெள்ளைக்காரப் பொண்தானா இதுன்னு நம்பவே முடியலேடீ காமூ! அப்பிடி அலங்கரிச்சு நம்ம கல்யாணப்பொண்களைமாதிரி மணையிலே கொண்டு வந்து உட்கார்த்தியிருக்கா'' — என்று பாட்டி கூறியதைக் கேட்டுக் காமாட்சியம்மாளுக்கு உள்ளூறப் போய்ப் பார்க்க வேண்டும்போல ஆசையாயிருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. முத்து மீனாட்சிப்பாட்டியும், பெரியம்மாவும் என்ன நினைப்பார்களோ என்று பயந்து தயங்கிப் பேசாமல் இருந்தாள் காமாட்சியம்மாள். ஆனால் பாட்டி பேச்சை நிறுத்தாமல் ஏதாவது சொல்லிக் கொண்டே இருந்தாள்:

''உள்ளூர் வாத்தியார் ஜம்புநாத சாஸ்திரி இந்தக் கலியாணத்துக்குப் புரோகிதரா இருக்க மாட்டேன்னுட்டாராம். இன்னிக்கு நெறையப் பணம் கெடைக்கும்னு இதுக்கெல்லாம் வந்து நின்னுட்டேன்னா நாளைக்கு ஊர்லே நாலு பெரிய மனுஷா நல்லது கெட்டதுக்கு என்னை மதிச்சுக் கூப்பிடமாட்டான்னு ஒதுங்கிட்டாராம். அப்புறம் வேணுகோபாலன் நெறையப் பணம் செலவழிச்சு மெட்ராஸ்லேயிருந்து யாரோ புது வாத்யாருக்கு ஏற்பாடு பண்ணினானாம். அவர்தான் இப்ப எல்லாம் பண்ணி வைக்கிறாராம். தானங்கள், தட்சிணைகள் வாங்கக் கூட உள்ளூர் வைதீகர்கள் யாரும் போகலையாம். என்னதான் கோர்ட்டிலே அந்தப் பிரெஞ்சுப் பொண்ணு நம்ம மனுஷாளை விடச் சுத்தமானவள்னு ஜட்ஜ் தீர்ப்புச் சொல்லிட்டாலும், உள்ளூர் வைதிகாள் தயங்கறா. ஆனா வெளியூர்லேருந்து நெறைய வைதீகாள் வந்திருக்காளாம்...''

''பொண்ணை யார் தாரைவார்த்துக் குடுத்தாளாம்?''

''இதுவரை நோக்கு அது தெரியாதாடீ காமூ? வேறே யாரு! அந்த வேணுகோபாலனும் அவர் ஆத்துக்காரியும்தான் தாரை வார்த்துக் குடுத்தாளாம். அதான் இந்தக்



கல்யாணத்துக்காக அவாத்துலே சுமங்கலிப் பிரார்த்தனை கூட நடந்ததுன்னேளே?''

இதற்குமேல் காமாட்சியம்மாளாக யாரிடமும் எதுவும் விசாரிக்கவில்லை.

முகூர்த்தம் முடிந்த மறுநாள் பிற்பகல் பெரியம்மா அப்போதுதான் தூங்கி விழித்திருந்த காமாட்சியம்மாளிடம் சொன்னாள்:

''உன்னைப் பார்த்துட்டுப் போறதுக்காக உங்காத்துக்காரரும் அந்த வேணுகோபாலனும் வந்துட்டுப் போனாடீ காமூ! நீ நன்னா அசந்து தூங்கிண்டிருந்ததை அவாளே பார்த்தா. 'எழுப்பட்டுமா'ன்னு கேட்டேன். 'எழுப்ப வேண்டாம். தூங்கட்டும்! அப்புறமா வந்து பார்த்துக்கறோம்'னு உன் உடம்பைப் பத்தி விசாரிச்சுட்டுப் போறப் பட்டுப் போயிட்டா''—

''இவா வந்து பார்க்கல்லேன்னுதான் இப்போ குறையா? வரலேன்னு இங்கே யார் அழுதாளாம்?''

''இவாள்ளாம் வரா — வரலேங்கறது ஒருபக்கம் இருக்கட்டும்டீ! நீ பத்து மாசம் சொமந்து பெத்த பிள்ளை கலியாணத்தைப் பண்ணிண்டு, ''ஆசிர்வாதம் பண்ணும்மா''ன்னு வந்து நமஸ்காரம் பண்ணினானோடீ? அவனுக்கு எங்கே போச்சுடீ புத்தி?'' என்றாள் முத்துமீனாட்சிப் பாட்டி.

''வந்தா வரா, வராட்டாப் போறா. யார் வரலேன்னும் இங்கே நான் ஒண்ணும் தவிக்கலே பாட்டீ?'' —

''அப்பிடிச் சொல்லாதே! நீ விரும்பலே விரும்பறேங்கறது ஒருபக்கம் இருக்கட்டும். மொறைன்னு ஒண்ணு இருக்கோல்லியோ? அவாளாத் தேடிண்டு வந்து உன்னை நமஸ்காரம் பண்ண வேண்டாமோ?'' இதைக் கேட்டுக் காமாட்சியம்மாளுக்குக் கண்களில் நீர்முட்டிக் கொண்டு வந்தது. அழுகையை அடக்க முடியவில்லை. அந்தக் கலியாணத்தைப் பொருட்படுத்தாதவள் போலவும், புறக்கணித்தாற்போலவும் அவள் பாசாங்கு பண்ணினாளேயொழிய, மனம் என்னவோ அங்கேதான் இருந்தது. ஒவ்வொரு விநாடியும் அங்கே அந்தக்கலியாண வீட்டில் என்னென்ன நடக்கும் என்பதைப் பற்றித்தான் அவள் மனம் சதா கற்பனை செய்து கொண்டிருந்தது. ரவியையும், கமலியையும், வசந்தியையும் சர்மாவையும், கல்யாண வீட்டையும் பற்றியே அவள் உள்மனம் நினைந்து உருகிக் கொண்டிருந்தது. கல்யாண வீட்டைப்பற்றி முத்துமீனாட்சிப் பாட்டியும், பெரியம்மாவும் எதையாவது கூறிய போதெல்லாம் சிரத்தையின்றிக் கேட்பதுபோல் மேலுக்குக் காட்டிக் கொண்டாளேதவிர அவற்றை உண்மையில் அவள் மிகவும் சிரத்தையோடு கூர்ந்து விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நான்கு நாளும் ஔபாசனம், ஊஞ்சல், நலங்கு நிறைவு நாளன்று மாப்பிள்ளை பெண்ணுடன், கல்யாண வீட்டார் ஊர்வலமாகப் போய் அகஸ்திய நதியில் 'பாலிகை' கரைக்கப் போகிறார்கள் — என்று ஒவ்வொன்றாகக் கலியாண வீட்டுத் தகவல்களை அறிந்து வந்து காமாட்சியம்மாளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள் முத்து மீனாட்சிப்பாட்டி. ஒரு விஷயம் பற்றிக் காமாட்சியம்மாளே ஞாபகமாகப் பாட்டியை விசாரித்தாள்:

''கிருஹப் பிரவேசம்னு ஒண்ணு உண்டே, அதை என்னிக்கு வச்சுக்கப் போறாளாம் பாட்டீ?''

''நான் அதை ஒண்ணும் விசாரிக்கல்லேடீ காமூ!''

''விசாரியுங்கோ. அன்னிக்கி எல்லாரும் இங்கேதானே வருவா... நாம தடுக்க முடியாதே... அவா வீடு, அவா வாசல். நாம என்ன பண்ண முடியும்?''

''அதுவும் அப்படியா சமாசாரம்? எனக்கு அது தெரியவே இல்லையேடீ?'' — என்றாள் பெரியம்மா. அன்று மாலையிலேயே முத்து மீனாட்சிப் பாட்டி அந்தத் தகவலை விசாரித்துக் கொண்டு வந்து சொன்னாள்:

''பாலிகை கரைச்ச மத்தா நாள் கிருஹப் பிரவேசத்துக்கு ஏத்ததா இருக்காம்டீ காமூ! அதுனாலே அன்னிக்கிக் காலம்பர ஆறுமணியிலேருந்து ஏழரை மணிக்குள்ள ஒருமுகூர்த்தத்திலே இங்கே கிருஹப் பிரவேசத்துக்காக வராளாம். நீ உடம்பு சௌகரியமில்லாமப் படுத்துண்டுட்டதாலே சமையல் மத்ததுக்கு எல்லாம் அவாளே மனுஷாளை இங்கே முன் கூட்டியே அனுப்பிச்சுடுவான்னு நினைக்கிறேன்'' என்று காமாட்சியம்மாள் மனத்தில் வெறுப்பை வளர்க்க நினைத்துப் பேசினாள்.

(தொடரும்)

## குடிமக்கள் வேண்டாமா?


**44** **60**

சவூதி அரேபியா நாட்டை நிறுவியவர் அப்துல் அஜீஸ் இப்னு ஸவூத் என்னும் மன்னராவார். இவருக்கு 44 ஆண் மக்களும் 60 பெண் மக்களும் பிறந்தனர்.

இந்த எண்ணிக்கைப் பெருக்கத்தைப் பற்றிக் கேட்ட போது, ''நான் ஒரு நாட்டைத் தோற்றுவித்தேன்; அதற்கான பிரஜைகளையும் தோற்றுவிக்க வேண்டாமா?'' என்று பதில் சொன்னாராம் இப்னு ஸவூத்.

காரை - சாயபு மரைக்காயர்

# மஹா புருஷர் தரும் மஹா காவியம்



லக்ஷ்மணனும் சத்ருக்னனும் ஸுமித்ரையின் இரட்டைக் குழந்தைகள். இவ்வாறிருந்தும் இவர்கள் பரஸ்பரம் ஒட்டிக்கொண்டிராமல், லக்ஷ்மணன் மாற்றுத்தாய் மகனான ஸ்ரீராமனுடனும், சத்ருக்னன் மற்றொரு தாயின் பிள்ளையான பரதனுடனும் மிகுந்த நெருக்கம் கொண்டிருந்தது ஏன்?

இதோ ஒரு பொருத்தமான விளக்கம்: தசரதனின் தேவியர் மூவரும் புத்ரோத்பத்திக்கான திவ்ய பாயஸத்தை அருந்துமுன் ஸுமித்ரையின் பாயஸக் கிண்ணத்தை ஒரு கழுகு தூக்கிச் சென்று விடுகிறது. விஷயம் தசரதன் முதலியோருக்கு எட்டுமுன் கௌஸல்யையும், கைகேயியும் காதும் காதும் வைத்தாற்போல் தத்தமது பாயஸத்திலிருந்து சிறிதை ஸுமித்திரைக்கு அளிக்கின்றனர். கௌஸல்யை தந்த பாயஸப் பகுதியிலிருந்து உண்டானவனே லக்ஷ்மணன்; கைகேயியின் பாயஸத்திலிருந்து பிறந்தவனே சத்ருக்னன். எனவேதான் இவ்விருவரும் முறையே ஸ்ரீராமசந்திரனுடனும், பரதனுடனும் இணைபிரியாமல் சேர்ந்திருந்தனர்.

திருப்தி தரும் விளக்கம்தானே?

இப்படி அநேக அரிய விஷயங்களை ''ராம கதா ரஸ வாஹினி'' நூல் அறிவிக்கிறது. பெரும்பாலும் வன்மீகத்தை ஒட்டியும், அத்புத – ஆனந்த – துளஸி ராமாயணங்களிலும் ரகு வம்சத்திலும் கர்ண பரம்பரைக் கதைகளிலும் உள்ள சில மாறான விஷயங்களை உள்ளடக்கியும், முற்றிலும் புதிதான சில சுவைமிகுந்த தகவல்களையும் தத்வங்களையும் கொண்டதாகவும் உருவான விரிவான ராம காதையே ''ராம கதா ரஸ வாஹினி.'' இதனை அருளியிருப்பவர் பல்லோரால் ''ஸாயிராம்'' என்றே ஜபித்துப் போற்றப்பெறும் ஸ்ரீஸத்ய ஸாயி பாபா. அவரது 'மிராகின்' சிருஷ்டிகளில் இதையும் சேர்க்க வேண்டியதே என்னும்படியாக, அவரது படைப்பிலே ஆதி காவியமே அதி நூதனமாகி ஜ்வலிக்கிறது. இலக்கியம், தர்மசாஸ்திரம், தத்வநூல் என்ற மூவகைகளிலும் உன்னதமாக நிற்கிறது இப்புனித கிரந்தம்.

அழகொழுகும் ஸுந்தரத் தெலுங்கில் ஸ்வாமி எழுதிய மூலத்தின் ஆங்கில ஆக்கத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். நல்ல பக்தர்களும் பண்டிதர்களுமான ஸ்ரீ வி. ஜகந்நாதாசார்யரும், ஸ்ரீ கே. ஜி. மாணிக்கவாசகமும் பயந்து பயந்து வெகு கவனமாகத் தமிழாக்கம் செய்திருக்கிறார்கள். அதனாலேயே கருத்தை மட்டுமின்றி எழுத்தையும் அப்படியப்படியே பெயர்த்திருப்பதால் ரஸிப்பதற்குச் சற்று ஊறு ஏற்பட்டுத் தான் உள்ளது. நடை தெளிவாயும் இலக்கணமாயும் இருந்த போதிலும் அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட முறையில் இருக்கிறது. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்திருப்பதால் விதேஹம், திலீபன், குகன், பாணன் பிரயாகை போன்ற பெயர்கள் விதேஹா, திலீபா, குஹா, பாணா, பிரயாக் என்றெல்லாம் காண்பதும், ''மாருத'' போன்ற வடமொழிச் சொற்றொடர்கள் ''மாருதா'' என்பதுபோல் காண்பதும் விசித்திரமாயுள்ளது. இந்தச் சில்லறைக் குறைகளை மறந்து படித்தால் வாசகர்கள் நிச்சயமாகக் கலாரீதியிலும் ஆத்மீகமாகவும் மாபெரும் பயனடைவர்.

சுமார் 1000 பக்கங்கள் கொண்ட இந்த ரத்தினச் சுரங்கத்திலிருந்து மாதிரிக்குச் சில நுட்பமான வண்ணமணிகளைப் பார்ப்போம்:

ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னர் குழந்தைகளாக இருந்தபோது அவர்களுக்கு அணிவித்திருந்த நகைகள் உடலில் உறுத்தாதிருப்பதற்காக அவை மெத்தென்ற பட்டு நாடாக்களில் தைக்கப் பட்டிருந்தனவாம். (பக்கம் 56.)



ஸ்ரீராமனைப் போருக்கழைப்பதால் அவன் பெருமை மேலும் பிரகாசிக்கவே தாம் உதவுவதாகக் கூறும் பரசுராமர், ''என் செயலைக் கொடியது என எண்ணுவது கத்திக்குச் சாணை பிடிப்பதால் அதற்குக் கொடுமை செய்வதாக நினைப்பது போன்றதே'' என்கிறார். (211)

பின் எவ்வாறு சப்தமின்றி நீருள் முழுகுகிறதோ அப்படி ஸுமந்திரர் அரண்மனைக் கூடங்களுக்குள் வேகமாகச் சென்றார். (290)

வனவாஸம் பெற்றதைக் கௌஸல்யையிடம் சொல்ல ஸ்ரீராமன் வந்தவுடன் அந்தத் தாய் முதல் நாள் முழுதும் மகன் உபவாஸமிருந்ததையே நினைத்துப் பாலன்னத்தை வாயிலே ஊட்டுகிறாள். விபரீதச் செய்தியை அவன் வெளியிட, ''இது உண்மையா? அல்லது மகனோடு தானும் உபவாஸமிருந்ததால் தனக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டு விட்டதா?'' என்று கலங்குகிறாள். (307–9)

பிறகு ஸீதாதேவியிடம் செல்லும் பிரான், தான் வனம் புகுந்த பின் அவள் மிதிலை சென்று விடாமல் அயோத்தியிலேயே இருக்க வேண்டும் என்னும்போது சாஸ்திர போதகனாக ஒளிர்கிறான். உடன் அவனது லௌகிக மனோதத்வ ஞானமும் சுடர்விட, ''இனி நீ என்னைப் புகழவும் கூடாது, பரதனை இகழவும் கூடாது'' என்கிறான்! (337). இங்கே ராம குணசித்ரம் துல்லியமாகத் தீற்றப்படுகிறதென்றால், பிற்பாடு (368) தசரதன் ஸுமந்திரனிடம் எப்படியாவது ஸீதையை வனத்திலிருந்து திருப்பி அவளது தாயகமான மிதிலையில் கொண்டு சேர்க்க வேண்டும் என்னும்போது தசரதனது அபிமான, அனுதாபப் பண்புகள் அழுத்தமாக வெளியாகின்றன.

இதுபோல் ஓரிரு மின்வெட்டுக்களில் பாத்திரப் பண்பை வெளிக்கொண்டு வருவதில் ஸ்ரீராமபிரான் குறித்தே நுண்ணியதாக இன்னொன்று: முடிவில் ஸீதையை வனவாஸத்துக்குத் தயாராகுமாறு ஐயன் சொல்ல, அவள், ''இதோ, இப்போதே தயார்தானே?'' என்கிறாள். பிரபுவோ, ''அல்ல. முதலில் நீ கூண்டுகளில் வளர்க்கும் பக்ஷிகளையெல்லாம் விடுதலை செய். பிறகு உன் பசுக்களை பிராம்மணர்களுக்கும், ஏனைய செல்வங்களை எல்லா மக்களுக்கும் வழங்கி விட்டுப் புறப்படு'' என்கிறான். (354–5).

ஸீதையை உடனிட்டுச் செல்ல ஐயன் எப்படி இணங்கினான்? அவள் வார்த்தையாலேயே அவள் அவனை ஒரு மடக்கு மடக்கியதால்தான். ''இத்தனை நேரம் கௌஸல்யா தேவியிடம் கணவனை விட்டுப் பத்தினியானவள் ஒருபோதும் பிரிந்திருக்கக் கூடாதாகையால் தாங்கள் அவரை உடனிட்டுச் செல்வதற்கில்லை என்று கூறிவிட்டு என்னிடம் அந்த சாஸ்திரத்தை அடியோடு மாற்றுகிறீர்களே, இது என்ன நியாயம்?'' என்று நாயகனுக்குக் கொக்கி போட்டு விடுகிறாள் பிராட்டி. (346)

தேவியின் இந்தச் சாதுரியம் இன்னோரிடத்திலும் (720) மிளிர்கிறது. அசோகவனத்தில் அன்னை படும் அல்லல் கண்ட அநுமன் அவளைத் தான் தூக்கிச் சென்று அண்ணலிடம் சேர்க்க அநுமதி கோருகிறான். மாறாக அவள் கூறும் பல வாதத்துக்கும் படியாத அவனது பிடிவாதத்தைக் கண்ட பிராட்டி, முடிவாக, ''நீ ராமதாஸன். அவரது கட்டளை என்ன? என் இருப்பிடம் தெரிந்துவரச் சொன்னாரா, அல்லது என்னை மீட்டுவரச் சொன்னாரா?'' என்று 'பிரம்மாஸ்திரம்' போட்டு வாதாத்மஜன் வாயைக் கட்டுகிறாள்.

குன்றுகளை எளிதே கொய்து வந்து ஸேது பந்தம் அமைத்த வானரசூரர்கள் அன்னையின் அக்னிப் பிரவேசத்துக்காகச் சுள்ளிகள் தூக்கிவர மாட்டாமல் சோர்ந்தனராம்! (869).

ஸேது பந்தத்துக்காகப் பறிக்கப்பட்ட ஒரு குன்றின் ரஸமான கதையைப் பாருங்கள். இமாலயத்திலிருந்து எடுத்துவரப்பட்ட இக்குன்று அணைக்குத் தேவையில்லை என்று தெரிந்ததும், இடை வழியிலேயே அதனை ஆஞ்ஜநேயன் தள்ளிவிடுகிறான். ''ராம காரியத்துக்கு உதவாமல் போனேனே!'' என்று குன்று ஆராத் துயருற்றதாம். அடுத்த அவதாரத்தில் அதன் துயர் நீக்கி அதற்குப் புகழூட்டுவதாக ஸ்ரீராமன் செய்தி அனுப்புகிறான். கண்ணன் ஏழு தினங்கள் தன் விரல்மீதே தாங்கிய கோவர்த்தனகிரி இதே குன்று தானும்! (767–8)

நவரஸமும் செறிந்த இந்நூலில் காணும் ஒரு ஹாஸ்யக் குத்தல்: அச்வமேதப் புரவியையும் ராம சைனியம் முழுவதையும் அடக்கிய லவ குசர்களைக் கண்டு வியந்த ஸ்ரீராமன், ''உங்கள் பெயர் என்ன? பெற்றோர் யார்? ஊர் எது?'' என்று விசாரிக்க, லவன் மிடுக்காகவும் துடுக்காகவும், ''இதென்ன விசாரணை? நீர் போரிட வந்தீரா? கல்யாணம் பேச வந்தீரா?'' என்கிறான்! (943).

நூல் நெடுக விரவி வரும் அமர வாசகங்களுக்கு இரண்டு சான்றுகள் பார்ப்போம்:

உள்ளத்தில் அன்புப் பெருக்கற்றவன் நீரற்ற முகிலுக்கும், பழமற்ற மரத்துக்கும், பாலற்ற பசுவுக்கும் சமமானவன். (637).

மனிதர்கள் மூன்று வகையினர். ஒருவகை பாடல மரம் போன்றவர். அம்மரம் பூக்குமே யன்றிக் காய்க்காது. அது போன்றவர் பேசுவரேயன்றிக் காரியம் செய்யார். இரண்டாம் வகை மாமரம் போன்றவர். மா நிறையப் பூக்கிறது. அதில் பல காய்க்கின்றன. இப்படிப்பட்டவர் பேசவும் செய்வர், அதில் ஓரளவு காரியமும் செய்வர். மூன்றும் வகை பலா மரம் போன்றவர். பலா பூக்காமலே காய்ப்பதுபோல் இவர்கள் பேசாமலே காரியம் மட்டும் முடிப்பர். (855).

தலை சிறந்த காதையைத் தலைசிறந்த வியக்தியொருவர் தருகிறார். விலை குறைத்துத் தருகிறார். சுமார் ஆயிரம் பக்கமுள்ள அருமையான நூலைப் பதினான்கே ரூபாய்க்கு வழங்க ஸ்வாமி ஏற்பாடு செய்திருப்பது தர்மப் பிரசாரத்தில் அவருக்குள்ள அந்தரங்க ஆர்வத்துக்கோர் அத்தாட்சிதான். இவ்வரிய கொடையை ஆஸ்திகருலகு பயன்படுத்திக் கொள்ளுமாக!

— ரா. கணபதி

[வெளியீடு: ஸ்ரீ ஸத்ய ஸாயி எஜுகேஷன் அண்ட் பப்ளிகேஷன் கமிட்டி, 61, ஆர்தான் சாலை, சென்னை 600013.]

கண்களில் மை, மங்கையாய் நெற்றிக்
குங்குமம், மின்னிய கூந்தலில் செவ்வந்தி;
பேறுதரு மேனிக்கோ பெர்க்கினி சிற்றுடை ,
விமல் சீர்வரிசை...
பெருமை தரும் வருகுதே பொங்கல்!

# பொங்கலுக்கு விமல் படைப்பு:

## பெர்க்கினி
### கோவார்டினேட்ஸ்




எல்லா விமல் சில்லறை விற்பனைக் கடைகளிலும், பிரபலமான
இதர ஜவுளிக் கடைகளிலும் கிடைக்கிறது.

# என்ன பரிசு கொடுப்பது?

பொங்கல் வருகிறது. கல்யாண மாதங்கள் வருகின்றன. நீங்கள் பரிசுகள் தரவேண்டி வரும், எனவே யோசனையில் ஆழும் சந்தர்ப்பங்கள்: என்ன கொடுப்பது?

ஒரு யோசனை: **புத்தகங்களைப் பரிசளியுங்கள்** பரிசளிக்க ஏற்ற புத்தகங்களை வெளியிடுபவர்கள் யாரென்றும் தெரிந்து கொள்ளுங்கள்: **நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா.**

பலதரப்பட்டவர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய புத்தகங்களை நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டிருக்கிறது. **பறவை உலகம்** (பக். 128; ரூ. 18-75) நூற்றுக்கு மேற்பட்ட பறவைகளைப் பற்றிப் படங்களுடன் விவரிக்கிறது: **இந்திய ஓவியம்** பிரதான இந்திய ஓவிய மரபுகளை எளிய முறையில் விளக்குகிறது: **நாணயங்கள்** (பக். 362; ரூ. 20) இந்திய நாணயங்களின் கதையை வரலாற்றுப் பின்னணியுடன் கூறுகிறது: **உங்கள் உணவும் நீங்களும்** (பக். 128; ரூ. 6-75) குறைந்த செலவில் யாவரும் சத்தான உணவு உண்ணும் வழிகளைக் கூறுகிறது: **சுதந்திரப் போராட்டமும் மத்தியச் சட்டசபையும்** (பக். 406; ரூ. 10-50) நம் விடுதலைக் காகச் சட்ட சபைக்குள் போராடிய சத்தியமூர்த்தி, சாஸ்திரியார், போன்றோரின் சாதனைகளை விவரிக்கிறது.

பிற இந்திய மொழிகளிலிருந்து தேர்ந்தெடுத்த சிறந்த நாவல்கள், சிறுகதைகளின் மொழி பெயர்ப்புகளையும் நாங்கள் வெளியிட்டிருக் கிறோம். மலிவான, ஆனால் தரமான பல குழந்தைகள் நூல்களையும் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். வெவ்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்துள்ள இந்தியர்களின் சுருக்கமான சரிதைகளையும் வெளி யிட்டிருக்கிறோம்.

பத்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களை டில்லி விலாசத்துக்கு எழுதினால் எங்கள் செலவில் புத்தகங்களை அனுப்புவதுடன், புத்தகங்களை அனுப்புவதுடன், ''வரும் புத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தக வெளியீடு'' என்ற புத்தகத்தை இலவசமாய் அனுப்புவோம்.

**நேஷனல் புக் டிரஸ்ட்,** ஏ-5, கிரீன் பார்க், புது டில்லி-110016 அல்லது **பாரி நிலையம்,** 59, பிராட்வே, சென்னை-600001 ஆகிய விலாசங்களிலும், **ஹிக்கின்பாதம்ஸ்** கடைகளிலும் எமது நூல்கள் கிடைக்கும்.



# இலவு காக்கும் கிளிகளோ!

**ஜெயரதன்**

**பி**ளாட்பாரத்தை ஒருவித எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தான் நவநீதன்.

கான்கிரீட் பலகைகளைப் பெயர்த்து எடுத்து விட்டுப் பள்ளந்தோண்டி ஏதோ வேலை செய்து விட்டிருந்த தொழிலாளர்கள், வேலை முடிந்ததும் சரியாகவே அந்தப் பள்ளத்தை மூட வில்லை. ஏனோதானோவென்று மேடும்பள்ளமுமாய் மண்ணைக் கொட்டியிருந்தார்கள். சில இடங்களில் கான்கிரீட் பலகைகளைப்போடவே இல்லை. மண் சரிந்தும் பள்ளம் விழுந்தும் நடக்கவே முடியாமல் இருந்தது.

ஒருவித மனக்கொதிப்போடு பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருந்தான் நவநீதன்.

காலை நேரத்தின் 'பீக்அவர்' துரிதமாகச் செலவாகிக் கொண்டிருந்தது.

'எதன் மீதும் யாருக்கும் அக்கறையில்லாத ஒரு கலைமுறையாக மாறிக்கொண்டு வருகிறேமோ' என்று எண்ணிக் கொண்டிருக்கையிலேயே பஸ் வந்தது. முண்டியடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறினன்.

படிக்கட்டில் அவன் தொற்றிக் கொள்கிற போதே கண்டக்டர் சீட்டியுடன் பஸ் புறப்பட்டது.

''சார்!... கொஞ்சம் உள்ளே போங்க சார்...''

இவன் சொல்வது காதிலேயே விழாதது மாதிரி அவர்கள் இவனது கோரிக்கையை லட்சியம் செய்யாமல் நின்று கொண்டிருந்தார்கள்.

''உள்ளே போங்களேம்பா எல்லாரும்!... கத்திக்கத்தித் தொண்டைத் தண்ணிதான் வத்துது!... நான் மனுசபாசைதானேய்யா பேசறேன்!...''

கண்டக்டரின் கோபம் கொஞ்சம் சலனத்தை உண்டாக்கியது மாதிரி இருந்ததே தவிர, நிலைமை ஒன்றும் அபிவிருத்தி அடைய வில்லை.

ஏதோ ஓர் ஆவேச உந்துதலில் இடித்துக் கொண்டு உள்ளே போக முயன்றான் நவநீதன். 'ச்சு... ச்சு' என்று சற்று ஒதுங்கினார் கையில்

சூட்கேஸ் வைத்திருந்தவர். முகத்தைச் சுளித்துக் கொண்டு அவனைப் பார்த்தார் இன்னொருவர்.

தன்னைத் திணித்து முறுக்கிக் கொண்டு சட்டை, பேண்ட் கசங்க பஸ்ஸுக்குள் போய் நடுவில் நின்று கொண்டான் நவநீதன். இன்னும் சிலருக்குக் கூட இடம் இருந்தது அங்கே.

'அவரவர்கள் டிக்கட் வாங்கியதும் இருக்கிற இடத்தில் உள்ளே சென்று நின்றால் என்ன? நம்மைப் போல் எத்தனையோ பேர் ஏறவேண்டும் என்று எண்ணினால் என்ன? 'இந்த அடிப்படை நாகரீகங்கள் கூட ஏன் பலருக்குத் தெரிவதில்லை?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான் நவநீதன்.


பளாரென்று பிடரியில் அறைந்து 'உள்ளே போகாவிட்டால் பல்லை உடைப்பேன்' என்று உறுமவேண்டும்போல் இருந்தது நவநீதனுக்கு. பல்லைக் கடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தான். இவன் கோபத்தை யார் லட்சியம் செய்யப் போகிறார்கள்?

சிந்தித்துக் கொண்டே அலுவலகத்துக்குள் நுழைந்தான் நவநீதன். ஜில்லென்று படர்ந்த ஏர்கண்டிஷன் குளுமை அவனது மனஎரிச்சலுக்குச் சாந்தமாய் இருந்தது மாதிரித் தோன்றியது அவனுக்கு.

வேலையில் ஆழ்ந்து போனான் நவநீதன். மணிபோனதே தெரியவில்லை. ஒரு ஸ்டேட்மெண்ட் வரவில்லை என்பதற்காக ஸ்டோர்ஸ் செக்ஷன் கல்யாண ராமனை டெலிபோனில் கூப்பிட்டான். நாற்காலியில் இல்லை என்று தகவல் வந்தது. மறுபடியும் அரைமணி கழித்து டெலிபோன் செய்தான். 'டீக்குப் போயிருக்கிறார்' என்று சொன்னார்கள்.

'தரித்திரப்பயல். இவன் எப்போ ஸ்டேட்மெண்டைக் கொடுக்கிறது... நான் எப்போ என் வேலையை முடிக்கிறது?... கொடுக்கிறதைக் கொடுத்துவிட்டு டீகுடிக்கப்போனா என்ன?...' என்று மனத்துக்குள் சபித்தான்.

ஆபீஸுக்கே டீகுடிக்கவும் சாப்பிடவும் வருகிற மாதிரி எப்பொழுது கூப்பிட்டாலும் இதே பதில். வேலையை ஒழுங்காகச் செய்யாமல் இது என்ன இண்டிஃப்பரன்ஸ்?




—கொ.கை.தூரிகை

மாலை மூன்றரை மணிக்கு அட்டகாசமாய்ப் பேசிக்கொண்டு வந்தான் கல்யாணராமன்.

''என்னடா.. கூப்பிட்டியாமே?...''

அவனை நிமிர்ந்து தீர்க்கமாய்ப் பார்த்தான் நவநீதன்.

''எவ்வளவு நாழி டீகுடிப்பே, சாப்பிடுவே?...''

பெரிதாய்ச் சிரித்தான் கல்யாணராமன்.

''அத்தெயெல்லாம் கண்டுக்காதே... ஸ்கூல் அட்மிஷன் விஷயமா வெளியே போயிருந்தேன்... இப்பத்தான் முடிஞ்சுது... டொனேஷன் ஐந்நூறு ரூபா கேட்டான்... ஆளெ ஆளைப் புடிச்சு முந்நூறு ரூபாய்க்கு முடிச்சிட்டு வர்றேன்... இருநூறு ரூபாய் லாபம்...''

''இப்பிடி சுத்துறியே, ஒங்க ஆபீஸர் எப்பிடி ஒன்னை டாலரேட் பண்றான்?...''

''அவன் என்ன டாலரேட் பண்றது?... ஏதுனச்சம் கேட்டான்னு அவன் மானத்தை வாங்கிட மாட்டேன்?... அவன் நேத்து டி.வி. ரிப்பேர் பண்ண வெளிலே போனானே, அது மட்டும் நியாயமா?... இவன் நேரா இருந்தாத்தானே என்னைக் கேட்க?... ஒரு பயலும் நேர்இல்லே... அதுவரைக்கும் நமக்கும் சவுகரியந்தான்... நமக்கென்ன போச்சு,... நம்ம தலையிலேயா ஓடுது?...''

ஏதோ கொஞ்சநேரம் பேசிவிட்டுப் போனான் கல்யாணராமன். போகிறபோது ''ஸ்டேட்மெண்ட் காலையிலே தர்ரேன்.... போன மாசத்தைப் பார்த்து எழுதிக் கொடுத்திடுறேன்... தப்பு இருந்தா அட்ஜஸ்ட் பண்ணிக்கோ...'' என்று சொல்லிக் கொண்டே போனான்.

அவன் சொல்வதும் வாஸ்தவம்தான். கல்யாணராமனை ஒன்றும் செய்ய முடியாது. கேட்கிறவன் நேராக இருந்தாத்தானே, பதில் சொல்கிறவனும் ஒழுங்காய் இருப்பான்? இப்படி எத்தனை கல்யாணராமன்கள்? ஆபீசர்கள்?

ஒருவித மனக்கொதிப்போடு மாலை அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான்.

பிளாட்பாரத்தில் இரட்டை வரிசையாகக் கடைகள். செருப்பிலிருந்து புத்தகங்கள் வரை எல்லாமே விற்றுக் கொண்டிருந்தனர். புத்தகக் கடையில் சற்று நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். சொல்லி வைத்தது மாதிரி அட்டைப்படமெல்லாம் பெண்கள் படங்கள். வளைந்தும், நெளிந்தும், உடம்பைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். சில வெள்ளைக்காரப் பெண்கள் துணிகளைத் துறந்துவிட்டுப் பல கேமராக் கோணங்களில் நின்று கொண்டும் படுத்துக் கொண்டும் இருந்தார்கள். நல்ல பிஸினஸ்!

''ரூபாய்க்கு நாலு பேனா... நாலு பேனா ஒர்ரூபா'' என்று ராகமாலிகையில் கூவிக் கொண்டிருந்தார்கள். 'பேனாக்கள் மலிந்து விட்டதனால், எழுத்தும் மலிந்து விட்டது போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டே நடந்தான் நவநீதன்.

ஒய். எம். சி. ஏ. வாசலில் 'பட்டிமன்றம், என்று அறிவிப்புப் பலகை காட்சியளித்தது. அரசியல்வாதிகளும், இலக்கிய ஆசாமிகளும்

மற்றவர்கள்
தன்மீது எறியும் கற்களைய
அஸ்திவாரமாக அமைத்துக்
கொள்பவனே
வெற்றிகரமான மனிதன்!
— மெக்காலே
— சம்பத்குமாரி

பங்கு பெறுவதாக அறிவிப்புக் காணப்பட்டது: உற்சாகமாய் உள்ளே போனான் நவநீதன்.

'காமவில்லையில் சிறந்தது கண்ணனா, அர்ஜுனனா?' என்ற தலைப்புப்பற்றிக் காரசாரமாய் விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஹாலில் கூட்டம் பொங்கி வழிந்தது.

''எங்கள் அர்ஜுனன் தாங்குகிற பெண்ணுக்குத் தாலி கட்டியவன்'' என்று முழங்கினார் அர்ஜுனனை ஆதரித்துப் பேசியவர். கைதட்டல் கூரையைப் பிளந்தது.

''எங்கள் கண்ணன் கோபிகைகளுக்குத் தாலியே கட்டியதில்லை தெரியுமா?'' என்றார் கண்ணனுக்கு வக்காலத்து வாங்கியவர். இப்போது கைதட்டல் வானைப் பிளந்தது.

நடுவராய் வீற்றிருந்த தலைவர், அட்டகாசமாய்ச் சிரித்து ரசித்துக் கொண்டிருந்தார். ஐந்து நிமிடங்கள் நின்று வாதப் பிரதிவாதங்களைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுச் சகிக்க முடியாதவனாய்த் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான் நவநீதன். பேசுகிறவர் ஏதோ சொல்லியிருப்பார் போலிருக்கிறது. கரகோஷம் தெருவெல்லாம் முழங்கியது.

இந்தத் தலைவர்களும், இலக்கியச் செம்மல்களும் எந்தவிதமான ரசனையை ஜனங்களிடம் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்?' இந்த ரசனை எந்த அளவுக்கு இந்த ஜனங்களைப் பாதிக்கும் என்பதையும் அவர்களது மனோ வளர்ச்சியை எவ்வளவு தூரம் சிதைக்கும் என்பதையும் உணர்ந்திருக்கிறார்களோ? ரசனைகளை இப்படிக் கொச்சைப் படுத்தினால், சமுதாய முன்னேற்றம் பெரும்அளவில் தாமதப்படும் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்களோ? இந்த அற்பச் செல்வாக்கு என்னும் பல்லக்கில் எத்தனை நாட்கள் இவர்கள் சவாரி செய்து கொண்டு இருக்க முடியும்?

ஒரு தார்மீக அவஸ்தை மனத்தைப் புழுவாய்க் குடைய நடந்து கொண்டிருந்தான் நவநீதன். சோடா குடித்தால் தேவலாம் போலிருந்தது. பக்கத்திலிருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்குப் போனான். மாலைப் பத்திரிகைத் தலைப்புக்கள் தோரணம் கட்டித் தொங்கிக் கொண்டிருந்தன.

யாரோ ஓர் அரசியல்வாதி செய்த அரசியல் மோசடிகள் பற்றிப் பத்திபத்தியாக எழுதியிருந்தார்கள்.

சோடாவுக்குக் காசைக் கொடுத்துவிட்டுப் பஸ்ஸ்டாப்பை நோக்கி நடந்தான். அவன் கோபம் நடை வேகத்தில் தெரிந்தது.

**சா**ப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்கையில், 'அப்பா' என்று அழைத்துக்கொண்டே கழுத்தைக் கட்டிக்கொண்டு அருகே படுத்துக் கொண்டான் அவன் பிள்ளை சரவணன். ஒரு வயதாகிறது அவனுக்கு.

தான் சிறுவனாயிருந்தபோது இதே மாதிரித்தான் அப்பாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவரருகே படுத்துக் கொண்டது நினைவுக்கு வந்தது நவநீதனுக்கு.

சமூகத்தில் காணப்படுகிற ஊழல்களையும் குறைபாடுகளையும், ஒழுங்கின்மைகளையும் பார்த்துப் பார்த்துக் குமுறியவர் அவர். தார்மீகக் கோபம் மிகுந்து மற்றவர்களைச் சாடுகிறபோது அவர் கண்கள் சிவந்து, உதடுகள் துடிக்க, வார்த்தைகள் நெருப்புத் துண்டங்களாய்க் கேட்பவர்களைப் பொசுக்கியதுண்டு. இந்த ஆவேசமே, அவர் வயிற்றில் அல்சராய் வந்து, அவரைக் கொண்டு போயிற்று என்று அம்மா அடிக்கடி சொல்வாள்.

இப்படிப் படுத்திருக்கும்போது அவன் முன்னுச்சிக் கேசத்தைக் கோதி விட்டுக் கொண்டே, அவர் அவனிடம் உணர்ச்சிவயப் பட்டுச் சொல்லுவார்.

''...இப்படியே காலம் போயிடாதுன்னு வச்சுக்கோ.... நிச்சயம், கண்ணியம், நாணயம் இதுக்கெல்லாம் மதிப்பும் மரியாதையும், வெற்றியும் கட்டாயம் கிடைக்கும்... சீரான தலைமுறை கட்டாயம் வரும்.... நீயெல்லாம் பெரியவனாகிறபோது இந்தச் சமுதாயம் மிகவும் சிறப்பாய் இருக்கும்...''

அர்த்தம் புரியா விட்டாலும் அப்பாவின் கண்களில் தெரிகிற பிரகாசத்தையே பார்த்துக் கொண்டிருப்பான் நவநீதன்.

'அப்பா சொன்னது மாதிரி காலம் இப்படியே போய் விடாது... நேர்மை நிறைஞ்ச எதிர்காலம் நிச்சயம் வரும்...'

''அநேகமாகச் சரவணன் பெரியவனாகிற போது சொஸைட்டி 'வில் சேஞ்ச்...' என்று உரக்க முணு முணுத்துக் கொண்டான் நவநீதன்.

''என்னப்பா சொல்றே?'' என்றான் சரவணன்.

'இப்போது இவனுக்கு இதெல்லாம் என்ன புரியும்?' என்று நினைத்த நவநீதன் ''உனக்கு ஒண்ணுமில்லே நீ தூங்கு'' என்று சொல்லிக் கொண்டே அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

'காலையில் அலுவலகம் போனதும் கல்யாண ராமனிடம் இருபது ரூபாய் கைமாற்று வாங்க வேண்டும். செலவுக்குப் பணம் இல்லை' என்று எண்ணிக் கொண்டே கண்ணை மூடிக் கொண்டான் நவநீதன்.

சற்று நேரத்தில் ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கிப் போனான்.

# கனவா, நிஜமா? 2

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




[redacted]

# ஞானோதயம்

பாசி. ராமச்சந்திரன்

எனக்கு இந்தக் காதல் போன்ற விவகாரங்கள் கட்டோடு பிடிக்காது. அப்படிப் பிடிக்காமல் போனதற்குச் சில காரணங்கள் உண்டு. நான் அறிந்த வரையில் சில காதல் விவகாரங்கள் கல்லறையிலோ அல்லது சிரச்சேதத்திலோதான் முடிவடைந்திருக்கின்றன. இன்னொரு காரணம் எனக்கும் கிட்டத்தட்ட முப்பத்தி ஆறுவயது ஆகிறது. புத்தனுக்குப் போதி மரத்தடியிலும், அசோகனுக்குக் கலிங்கத்துப் போரிலும் ஞானோதயம் பிறந்ததுபோல எனக்கு தேவி தியேட்டரின் இருட்டில் ஞானோதயம் பிறந்தது. வியப்பாயிருக்கிறதல்லவா?

சில வருடங்களுக்கு முன் – சுபத்ரா என்ற பெண் வலிய வந்து என்னை விரும்பினாள். சுபத்ரா பரிணயம் நடக்கப்போகிறது என்று நினைத்த வேளையில் அந்தக் காதலே அம்பேலாயிற்று. சுபத்ரா என்னைக் காதலித்த மாதிரியே – அதேமாதிரி இன்னொருத்தனையும் காதலித்த விவகாரம் தேவி தியேட்டரின் இருட்டில்தான் எனக்கு வெளிச்சமாயிற்று. அன்று எடுத்த சபதம்தான் எனக்கு ஞானோதயம் பிறக்கச் செய்தது. 'இனிமேல் காதல் என்பதெல்லாம் சுத்தப் பொய்: வேஷம்...!'

சொல்ல மறந்து விட்டேனே? அந்த சுபத்ரா என்னை ஒருமுறை அண்ணா சாலையில் சந்தித்துக் கண்ணீர் உகுத்தாள். தன்னோடு தேவி தியேட்டரில் வந்த இளைஞனைத் தன் அண்ணன் என்றும் சொல்லிக் கொண்டாள். ஆனால் அவன் ஓர் அண்ணனைப் போலவா அவளிடம் அந்த இருட்டில் நடந்து கொண்டான்? சரிபோகட்டும் – நான் அவளை மறந்து விட்டதாகச் சத்தியம் செய்தேன்.

இப்பொழுது என் மனம் வலிக்க என் வீட்டிலேயே ஒரு காதல் விவகாரம் நடந்து கொண்டிருக்கிறது? எப்படிச் சமாளிப்பது? அதுவும் அடாத காதல் – அநியாயக் காதல். நான் இப்பொழுது குடியிருக்கும் வீட்டிற்கு வந்து பத்து நாட்கள்தான் ஆயிற்று. நான், என் பெற்றோர் மூவர் மட்டுமே. நான் இன்னும் கட்டைப் பிரம்மச்சாரிதான். கீழ் போர்ஷனில் நாங்கள் இருந்தோம். மாடி போர்ஷனில் வீட்டுக்காரர்கள் இருந்தார்கள். வீட்டுக்காரருக்கு ஓர் அழகிய பெண் இருந்தாள். இருபது வயதிருக்கும். திருமணமானவள். அவளை நான் வர்ணிக்க ஆரம்பித்தால் எதிர்வீட்டு மாடிபோர்ஷன் பையன் என்னை அடிக்க வருவான். நமக்கெதற்கு வம்பு?

இவர்கள் விவகாரம் எனக்குப் பலநாளாய்த் தெரியாது. நானும் வந்து பத்து நாட்கள் தானே ஆகிறது?

திருவல்லிக் கேணியில் குடியிருந்தால் ஒரு சௌகரியம். பொழுது போகவில்லை என்றால் வாசலில் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டால் இரவு எட்டுமணி ஓடிவிடுவதே தெரியாது. ஒருநாள் அப்படித்தான் நான் ஆபீசிலிருந்து திரும்பிவந்து வாசற்படியில் உட்கார்ந்திருந்தேன்.

திடீரென்று ...ஸ்ஸ்ஸ்ஸ்... என்று ஒரு ஓசைகேட்டது. நான், பாம்பு... தேம்பு ஏதோ என்று பயந்து எழுந்தேன். சட்டென்று ஓசை நின்றது. மீண்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். மறுபடியும் அதே ஓசை. சட்டென்று எதிர் வீட்டைப் பார்த்தேன்.

ஓர் இளைஞன். அடர்ந்த தலை மயிர் இரு கண்களையும் அடைத்துக்கொண்டு கண்ணாடி; பளபளவென்றிருந்தான். ஆமாம் ஸார்... இப்படிப்பட்ட பையனுக்கெல்லாம் எப்படி பாங்கில் வேலை கொடுக்கிறார்கள்? தலை மயிரை வாரவும், மீசையைச் சரிசெய்து கொண்டும், இவர்கள் காலத்தைக் கழுவிவிடுவார்களோ?

ஸ்ஸ்ஸ்ஸ்...

நான் அவனை மறுபடியும் பார்த்தேன்.



அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். எனக்கு அவனோடு பேசிப்பழக்கமில்லை. பின்னே என்னைப் பார்த்து ஏன் சிரித்தான்? பிறகு தான் தெரிந்தது – அவன் என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை – மாடியில் இருக்கும் என் வீட்டுக்காரரின் அழகான பெண்ணைப் பார்த்துத்தான் என்று.

தூக்கிவாரிப்போட்டது எனக்கு? இந்த இரண்டுக்கும் காதலா? என்ன அநியாயம் இது? அதற்குச் சங்கேத பாஷைதான் ஸ்ஸ்ஸ்ஸா?... அடிப்பாவி! உனக்கா இந்த சிக்னல்? ஐயோ!

நான் என் வீட்டு மாடியைப் பார்த்த போது அவள் உள்ளே போய் விட்டாள். என்ன அக்கிரமம் ஐயா? இவளோ கலியாண மான ஒரு பெண். கழுத்தில் தாலி; காலில் மெட்டி எல்லாம் இருக்கின்றன. இப்படியிருக்க அந்தக் காலிப் பயலோடுதான் தொடர்பா? ஏதோ சினிமா பார்ப்பது மாதிரி இருந்தது எனக்கு.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. மாடி வீட்டுக்காரரிடம் உங்கள் பெண் செய்வது சரியில்லை என்று சொல்லி விடலாமென்று பார்த்தால், அந்தப்பையன் கராத்தே கற்றுக் கொண்டு வருகிறானுமே? இந்தப் பிரச்னை என்னை உறுத்தியது.

ஆபிசில் பாலுவிடம் இதைப்பற்றிப் பேசி னேன். அவன் சொன்னான்: ''இதெல்லாம் இப்போ சகஜம்டா. புருஷனுக்கு மிலிடரியில் வேலையாயிருக்கும்; இல்லே ஏதாவது மாசத்



தில் முப்பது நாள் களர் கற்றுகிற ரெப்ரசல் டேடிவ்வாக இருப்பான்... நல்ல பெண்ணு யிருந்தால் கோவில் குளம் என்று போவாள்; இவளோ கம்பானியனைத் தேடுகிறாள். டேக் இட் ஈஸி...!''

எப்படி இவ்வளவு ஈஸியாகச் சொல்லிவிட் டான்? ஆபிசிலிருந்து திரும்பித் தெருக்கோடி யில் பைகிராப்ட்ஸ் ரோடுவரை போனவன் திடுக்கிட்டேன். அந்தப்பயலும், அந்தப் பெண்ணும் அருகருகே வந்து கொண்டிருந்த வர்கள், என்னைப்பார்த்ததும் தனியே பிரிந்து சென்றார்கள்.

வீட்டிற்குள் நுழையும்போது ரேழியின் இருட்டில் அவள் நின்றிருந்தாள்.

''ஸார்... இப்படி வாருங்களேன்...''

என் மனம் திகுதிகுத்தது. அருகே போனேன்.

''எங்களை — பைகிராப்ட்ஸ் ரோடில் பார்த் ததை என் அப்பாவிடமோ அல்லது அம்மா விடமோ சொல்லிடாதீர்கள். ப்ளீஸ்... உங்க ளுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு...''

ஓடிவிட்டாள் அவள்.

நான் அவர்களைப் பார்த்துவிட்டது, அவர் களுக்குத் தெரிந்துவிட்டது. இனிமேல் அந்தப் பயல் என்மேல் ஒரு கண் வைத்திருப்பான். என்னை விரோதியாகவும் பாவிப்பான்.

ஆபிசில் பாலுவிடம் என் பயத்தைத் தெரி வித்தேன். அவன் விழுந்து விழுந்து சிரித் தான்.

''டேய்... சரியான ஃபூல்டா நீ. அவர் களோட ரகசியக் காதல் அம்பலமானதுக்கு நீ ஏன் பயப்படறே?... அவாதான் பயப் படணும். அந்தப்பொண்ணே உன்கிட்ட மொதல்லே பயந்துருக்கு. இனிமே அவனும் பயப்படுவான். இதே எடத்துலே நான் இருந்தா நடக்கறதே வேறே?...''

பாலு போய்விட்டான். மனத்தைக் குழப் பும் இந்த விவகாரத்தோடு வீட்டுக்குத்திரும்பி வந்து கொண்டிருந்தேன். ரோடு முனையில் இந்தப் பயல்; என்னைப் பார்த்தான்; சிரித் தான்.

''குட் ஈவினிங் ஸார்...''

நான் திரும்பினேன். ''உங்களைத்தான் சார்... குட் ஈவினிங்...''



"வேலைக்குப் போகிற பெண்ணே வேண்டாம்னு சொன்ன உங்க பையன் இப்போ வேலைக்குப் போகிற பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்கிறானே? ஏன்?"
"இப்போ அவன் வேலைக்குப் போகவில்லை!"

"என்... என்னப்பா சமாசாரம்?..." — ஒன்றும் தெரியாதவனைப் போல் விசாரித்தேன்.

"சார்... நேற்று என்னையும் அவளையும் இங்கே பார்த்தீர்கள் இல்லையா?..."

"எஸ்..."

"இதைத் தயவுசெய்து அவர்கள் வீட்டில் சொல்லிவிடாதீர்கள். சொன்னால் பெரிய ரகளையாகிவிடும்..."

எனக்குத் துணிச்சல் வந்தது. பாலு சொன்ன மாதிரி இவன் என்னிடம் பயப்பட ஆரம்பித்து விட்டான்.

"பின்னே என்னப்பா இது... நீ செய்யறது நல்லாயிருக்கா? தப்பு இல்லே..." — என் நடுக்கம் எனக்கே தெரிந்தது...

"தப்புதான் சார். என் மேல்தான் தப்பு சார்... மன்னிச்சுடுங்க..."

"சரி... சரி... இனிமே இப்படி நடக்காதே. ஒழுங்கா இரு..." மேற்கொண்டு நான் மிரட்டினால் ஏதாவது எனக்கு ஆபத்து வந்துவிட்டால் என்ன செய்வது என்று மிரட்டுவதை நிறுத்திக் கொண்டேன். வீரனைப் போல் நடந்தேன்.

ஒருவாரமாக எதுவுமே நடக்கவில்லை. அப்படி நடக்காதது எனக்கே கஷ்டமாக இருந்தது. பின்னே என்ன, காசு கொடுக்காமல் ஒரு 'ஏ' படம் பார்க்கிற சுகம் இருந்ததே? அது இப்போது போய்விட்டது. ஆனாலும் ஒரு நல்ல காரியத்தைச் செய்தோம் என்ற திருப்தியும் இருந்தது. ஆபீஸில் பாலுவிடம் சொன்னேன்.

"டேய் பாலு... பாத்தியா... அவன் என்கிட்டே ஒழுங்கா நடந்துக்கறதா பிராமிஸ் பண்ணிட்டான். திருந்திட்டான். நான் அதுகளை ஒரு நேர் வழிக்குக் கொண்டுவந்து திருத்திட்டேனு இல்லையா?..." — சவாலா, சவடாலா என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

"பெரிய மகான் இவன் திருத்தறதுக்கு... போடா மடையா? அதுகள் ரூம் கண்ட பூனைகள். இனிமே உனக்கு முன்னாடி இல்லாட்டாலும் ரகசியமா எல்லாம் நடக்கும்..."

என் மனம் தவித்தது. "அப்படியும் நடக்குமோ?..."

மேலும் ஒருசில நாட்கள் சென்றன.

ஆபீஸ் விஷயமாகக் காரை எடுத்துக் கொண்டு பாரீஸ் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தேன். மத்தியானம் இரண்டரை மணி இருக்கும். ஒரு ஐஸ் பார்லருக்குள் நான் நுழைந்தபோது, திடுக்கிட்டேன். அவனும் அவளும். அவர்களின் முதுகுப் புறமாய் நான் அமர்ந்து கொண்டேன். அவர்கள் பேச்சு காதில் விழுந்தது.

"அந்தக் கிராக் நம்மைப்பற்றித் தெரிந்து கொண்டுவிட்டது சுரேஷ். இனிமேல் இப்படி எங்கேயாவது மீட் பண்ணினால்தான் உண்டு. அன்னிக்கி பைகிராப்ட்ஸ் ரோடில் என்னையும், உங்களையும் பார்த்துவிட்டபோது நான் பயந்துவிட்டேன்..."

"அவன் கிடக்கறான் ஃபூல்... நீ ஐஸைச் சாப்பிடு அனு... இதுக்கெல்லாம் பயப்படாதே. அது ஏதாவது கேட்டால் பிராமிசா என்னைப் பார்க்கவேயில்லேன்னு தலையிலே அடி..."

"சுரேஷ்... நீங்களும் இனிமேல் வீட்டுக் கிட்டே எதுவும் பண்ணாதீர்கள்... நம் சந்திப்பு இப்படி எங்கேயாவது இருக்கட்டும். இன்னிக்கி வீட்டிலே பிக்சர் போறேன்னு சொல்லிட்டு ஓடிவந்து விட்டேன்... எப்படி என் ஐடியா சுரேஷ்?"

என் நெஞ்சு கொதித்தது.

என்னை 'ஃபூல், கிராக்' என்றெல்லாம் சொன்னதால் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே கொதித்தேன்.

மாலை வீடு திரும்பியதும் முதலில் சென்றது மாடி போர்ஷனுக்குத்தான்.

அவளுடைய தகப்பனாரிடம் ஆதியோடந்தமாகத் தெரிவித்தேன். விஷயம் கேள்விப்பட்டதும் ருத்ரதாண்டவம் ஆடினார் அவர். "இன்னிக்கி அந்தச் சிறுக்கி வரட்டும்; உண்டு இல்லேன்னு ஆக்கிடறேன். கோடாலிக் காம்பு... என் கௌரவமே போச்சு... அந்தக் காலிப்பயலோட இவளுக்கென்ன வேலை...?"

சிறுக்கி, சிரித்துக் கொண்டே ஆறு மணிக்கு மாடியேறினாள்.

"எங்கேடி போயிருந்தே சிறுக்கி?..."

அவள் மிரண்டாள். என்னைப் பார்த்தாள். நான் நகைத்தேன்.

"எங்கேடி போனே...? சொல்லு; வீட்டுக்குள்ள வந்தா காலை ஒடச்சுப்பிடுவேன்..."

"என் பிரெண்டு சரசுவோட, ஆனந்த் தியேட்டர்லே படம் போனேன் டாடி... வேணும்னா அவாத்துக்குப் போன் பண்ணிக் கேட்டுப்பாருங்கோ..."

ஐயோ... ஐயோ... எப்படிப் புளுகுகிறாள் இவள்?

அவர் என்னை முறைத்தார்; நான் புளுகுவதாக நினைக்கிறாரோ?

''ஆனந்த் தியேட்டர் பாரீஸ் கார்னர்லயா இருக்கு?'' — நான் கேட்டதும் அவள் நிலை குலைந்தாள்.

''கேளுங்கோ நன்னாக கேளுங்கோ... சிறுக்கி வாயெத் திறக்கிறுளா பாருங்கோ...''

ஓங்கி அவளை அறையப் போனபோது நான் தடுத்தேன்.

''நீங்க சும்மா இருங்க சார்... இன்னிக்கி இவளோட எலும்பை எண்ணினுத்தான் என் மனசு குளிரும்; அந்தக் காலிப்பயல் பின்னுடி போகணும்னு இனிமே தோணக்கூடாது இவளுக்கு...''

என் மனம் துள்ளியது. இருப்பினும் வீர மாகப் பேசினேன்:

''நானே அவனை ரெண்டு அடி அடிச்சிருப் பேன் சார்... ரோடுல அசிங்கமாயிடக் கூடா தேன்னு மனசை அடக்கிண்டேன்...'' அவர் என்னை முறைத்தார்; உதடு துடிக்க என்னைக் கேட்டார்:

''என் ஸார் பெண்டாட்டியோட புருஷன் சேர்றதை இப்படி எல்லாருமே எதிர்க்க ணுமா?... சே... சே... நான் செஞ்ச பாவம்...'' நான் திடுக்கிட்டேன்; 'அந்தக் காலிப்பயல் இவர் மாப்பிள்ளையா?... எனக்குத் தலை சுற்றியது...'

''என் ஸார் அவன் உங்க...''

''மாப்பிள்ளைதான் சார் மாப்பிள்ளையே தான். அவனோட அப்பா — அதான் என் சம்பந்தி — கல்யாணத்தன்னிக்கி அழிச்சாட் டியம் பண்ணினுர். பொண்ணுக்கு வைரத் தோடு போட்டாத்தான் அவனை எங்காத்துப் பொண்ணு ஏத்துக்குவோம்னுர். உடனே இந்தக் காலிப்பயல் 'அப்பா இது தப்பு'ன்னு சொல்லப்படாது? அப்போ மௌனமாயிருந்துட்டு,இப்போ பெண்டாட்டி வேணும்னு ஆசையா அவளைத் திருட்டுத் தனமா சந்திக்கிறுன். ஊர்ல இருக்கற சம்பந்தி என்ன நெனைப்பார்? எங்களைத்தானே தப்பா எடுத்துப்பார்? என் பொண்ணு வாழா வெட்டியானுலும் பரவாயில்லை: இந்தச் சம்பந்தமே வேண்டாம்னு நான் முடிவு கட் டினேன். இவன் என்னடான்னு, நம்ப ஆத் துக்கு எதிர்லேயே குடிவந்து கலாட்டா பண்றுன்...''

''என் சார்.. பையனுக்குப் பொண்டாட்டி வேணும்; சம்பந்திக்கு வைரத்தோடு வேணும். பையனே இவ பின்னுடி அலையறுன். பேசாம ரெண்டு பேரையும் சேர்த்து வையுங்கோ... சம்பந்தியால முடிஞ்சா இவாளைப் பிரிக்க வைக்க டிரை பண்ணட்டும்... முடியுமானு பார்த்துடலாம். நீங்களும் வைரத்தோடு போடமாட்டேன்னு சவால் விட்டிருக்கேன். யாா ஜெயிக்கிறுன்னு பார்க்கலாமே?''

அவருக்கும் ஞானேதயம் பிறந்திருக்க வேண்டும்!


பரபரப்பாக விற்பனையாகிறது

மாங்காடு ஸ்ரீகாமாட்சி மகிமை




ஸ்ரீமுகத்தில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் அருளாசி வழங்கியுள்ளார்கள் :

''ஆஸ்திகர்கள் இந்த நூலின் மூலம் மாங்காடு ஸ்ரீ காமாக்ஷியின் மகிமையை உணர்ந்து வழிபட்டுக் கொண்டு, இந்த தேவியின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.''

விலை ரூ.2

சென்னை நகருக்கு தனி ஏஜெண்ட் இல்லை. அநுராகம் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளவும். (பாண்டி பஜார், கீதா கேப் எதிர் மாடியில்.)

பத்திரிகை ஏஜெண்டுகள் விண்ணப்பிக்கவும்



அநுராகம்

54, பாண்டிபஜார், சென்னை-600 017

தொலைபேசி : 445641

## மினி மர்மத் தொடர்கதை

# நரிக்கொம்பு

## கிருஷ்ணவேணி 2

ஹரியின் அனுபவமிக்க விரல்கள் வரைபடத்தின் மீது 'ஸ்லைடுரூல்'களை நகர்த்திக் கொண்டிருந்தன. புகழ்பெற்ற 'ஆர்க்கிடெக்ட்' அவன். நவீன பாணியில் அவன் உருவாக்கிய கட்டிடங்கள், சினிமா அரங்குகள், அலுவலகங்கள் ஏராளம். சென்னை, பம்பாய், பெங்களூர், டெல்லி இப்படிப் பல நகரங்களிலுள்ள நவீன சினிமா அரங்குகள் ஹரியின் கற்பனையில் உருவாக்கப்பட்டவைதான். புகழ்பெற்ற ஆர்க்கிடெக்ட்டான ஹரி எப்போதும் பிஸி. இதோ இப்போது இரவுமணி ஒன்று. இந்த நேரத்திலும் டிராயிங் போர்டின் முன்னால் கட்டிட நிர்மாண வரைபடங்களும் உபகரணங்களும் சூழ அமர்ந்து வேலைசெய்து கொண்டிருக்கிறான்.

'வாக்வம் ஜக்'கிலிருந்து ஆவிபறக்கும் காப்பியைக் கோப்பையில் சரித்தான். அது குடிக்கும் பதத்துக்குக் குளிர்வதற்காகச் சற்றே ஒதுக்கி வைத்தான். கோடுகளால் கோலம் போட்டிருந்த விஸ்தாரமான காகிதத்தில், அவன் விரல்களுக்கிடையே மந்திரக் கோலாகத் துலங்கிய 'ஸ்கெட்ச்பென்' விளையாடிக் கொண்டிருந்தது. 'ரிம்லெஸ் கிளாஸ்' வழியே துருதுருத்த கருவிழிகள் பளபளத்தன. அவனது கற்பனை வளமும் விரல்களின் வேகமும்தான் 'ஹரி ஆர்க்கிடெக்ட் அண்ட் என்ஜினீரிங் கன்ஸர்'வின் உயிர்நாடி.

ஒன்றில் மூன்று – என்ற ஒருபுதிய தியேட்டர் காம்ப்ளெக்ஸுக்கு வடிவமைத்துக் கொண்டிருந்த போதுதான் அந்த ஃபோன் கால் வந்தது. அசிரத்தையாக, வேண்டா வெறுப்பாகச் சிலவிநாடிகள் அதன் கிணுகிணுப்பை லட்சியம் செய்யாமல் – போனை எடுக்காமல் ஸ்கெட்ச் பேனாவின் ஓட்டத்திலேயே லயிப்பாக இருந்தான். ஆனால் அடம் பிடித்து அழும் குழந்தையைப் போல டெலிபோன் தொடர்ந்து, முணுமுணுக்கவே ரிஸீவரை எடுத்துத் தோளுக்கும் காதுக்குமிடையே இடுக்கிக் கொண்டான். 'ஹலோ' என்றழைத்த குரலை முதலில் சட்டென்று இனம் கண்டு கொள்ளவில்லை ஹரி. அது ரமேஷின் குரல். தன் உயிர்த்தோழன் பிரபல எழுத்தாளன் புகழ்பெற்ற பல படைப்புக்களை உருவாக்கிய நூலாசிரியன் ரமேஷின் குரல் அது என்பதை அறிந்துகொள்ளச் சில விநாடிகளாயின ஹரிக்கு. காரணம் ரமேஷின் குரல் மிக மெதுவாகவும் கம்மியது போயிருந்ததும் ஒரு காரணம். அகவாரசியமாகக் கேட்டுப் பதில் கூறிக் கொண்டிருந்த ஹரி தன்னோடு பேசியது ரமேஷ் என்பதை உணர்ந்த வேளையில் மறுபக்கத்தில் 'டக்' என்று டெலிபோன் வைக்கப்பட்டுத் தொடர்பு துண்டிக்கப்பட்டது..

அதிர்ச்சியடைந்த தவிப்போடு தோளில் தொத்திக் கொண்டு நழுவவிருந்த போனை இடக்கையில் எடுத்துக் கொண்டு, ''ஹலோ.. ஹலோ..!'' என்று பரபரப்புடன் அழைத்தான். பதிலில்லை. ஸ்கெட்ச் பேனாவை போர்டில் வீசிவிட்டு போன் பட்டனைக் 'கடகட'வென்று அழுத்தினான். அரவமேயில்லை.

போனில் அழைத்துப் பேசியது ரமேஷ் என்ற உணர்வு உறைத்தபோது ஹரியின் மனம் தவித்தது. அவன் கூறிய – அந்தச்சில வார்த்தைகளை நினைவுக்கு அசை போடக் கொடுத்தபோது இனம் புரியாததொரு திகில் நெஞ்சில் வலியாக ஓடியது. 'இந்த வேளையில் ரமேஷ் எதற்காக டெலிபோன் செய்தான்...? எதையோ பாதுகாக்கச் சொன்னானே, என்னவாக இருக்கும்? தன் அசிரத்தையின்மீது இப்போது அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

நாலைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ரமேஷினுடைய இம்மாதிரியான அகாலவேளை டெலிபோன் கால்களை அவன் அவ்வளவாக லட்சியம் செய்திருக்க மாட்டான். காலேஜ் நாட்களில் இப்படி ரமேஷ் எவ்வளவோ தடவை அர்த்தராத்திரியில் டெலிபோன் செய்து விளையாடி இருக்கிறான். ஹரிக்கு எரிச்சலை உண்டாக்குவதில் ஒரு குஷி ரமேஷுக்கு. அந்தக் குழந்தைத் தனங்களெல்லாம் மாறி இப்போது ரமேஷ் பண்பட்ட பத்திரிகாசிரியனாக – பிரபல எழுத்தாளனாக – சந்தியாவின் காதலனாக மாறியபிறகு இப்படியெல்லாம் காரணமின்றி அவனிடமிருந்து போன்கால்களை எதிர்பார்க்க முடியாது. அவனது ஒவ்வொரு எழுத்தும் பேச்சும் விலைமதிப்பற்றவையாகி விட்டன. தன் எழுத்தையும் பேச்சையும் வீணாக்குபவனல்ல ரமேஷ்.

குழம்பிப்போன ஹரி டிராயிங் போர்டிலிருந்து நிமிர்ந்து கால்களைத் தூக்கி எதிரிலிருந்த நாற்காலியில் நீட்டிச் சரிந்து உட்கார்ந்தான். நண்பனின் நினைவு அவன் இறுகிய முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்தியது. 'இருபத்தெட்டு வயதில் ரமேஷ் எவ்வளவு இளமையாக இருக்கிறான்? என்ன கம்பீரம், என்ன அழகு, எவ்வளவு சுறுசுறுப்பு? டிராயிங் போர்டில் குனிந்து குனிந்து என் முதுகே வளைந்து விட்டது. நான் உருவாக்கும் கட்டிடங்கள்தான் இளமையும் புதுமையுமாக இருக்கின்றன. ஆனால் என்தோற்றமோ கிழடு தட்டிப்போய்விட்டது. ரமேஷ் ஐம்பதிலும் இதே மிடுக்கோடு தானிருக்கப் போகிறான்.

சிந்தனையை உதறிக்கொண்டு எழுந்தான் ஹரி. போன்குரல் காதுகளில் ரீங்கரித்துக் கொண்டிருந்தது. 'ஏதோ விஷயமிருக்கிறது எதையோ, அனுப்புவதாகச் சொன்னானே,... என்னவாக இருக்கும்?' மேஜை விளக்கொளியில் ஆடை படிந்திருந்த ஆறிப்போன காப்

பியை — அது ரொம்பவும் ஆறிப் போய்விட்டது என்பதை அறியாமலேயே மடக்கென்று குடித்துவிட்டு அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினான். அந்த அர்த்தராத்திரியில், அகால வேளையில் நண்பனின் நினைவு நெஞ்சைக் குடைய ரமேஷின் டெலிபோன் பேச்சுத்தான் அவன் சிந்தனையைத் திருகிக் கொண்டிருந்தது...

''ஜாக்கிரதையாக அதைக் காப்பாற்று ஹரி... அவர்களிடம் சிக்கி விடாமல் பாதுகாக்க வேண்டும்...''

வேகமாகத் தான் அமர்ந்திருந்த இடத்தில் போய் உட்கார்ந்தான். மௌனமாக இருந்த டெலிபோனையே சிலவிநாடிகள் முறைத்துப் பார்த்தான். பிறகு சட்டென்று அதைக் கையிலெடுத்து எண்களைச் சுழற்றினான்.

''ஆபரேடர்... சற்றுமுன்பு எனக்குக் கல்கத்தாவிலிருந்து ஒருகால் வந்தது — ரமேஷ் என்பவர் பேசினார்... அவர் எங்கோ ஏதோ ஒரு ஹோட்டலிலிருந்து தான்பேசி இருக்கவேண்டும். எந்த ஹோட்டல் என்பது எனக்குத் தெரியாது. தயவுசெய்து அந்தக் கால் எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடித்து மறுபடி எனக்கு அவருடன் தொடர்பு ஏற்படுத்தித் தர முடியுமா? ரொம்ப தாங்க்ஸ்!''

டெலிபோனை வைத்துவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான் ஹரி. அறையில் நிசப்தம்... விரல் இடுக்கில் சிகரெட்டின் சூடு கரிவிட்டபோது டெலிபோன் கிர்ரிட்டு அமைதியைக் குலைத்தது. ஆங்கிலோ இந்தியப் பெண்ணின் இனிய குரல் ''மன்னிக்கணும் சார். உங்களுக்கு வந்த காலை டிரேஸ் செய்து கண்டுபிடித்து விட்டேன். ஹோட்டல் அமர் பாலி, ரூம் நெம்பர் 89லிருந்து. ஆனால் அந்த அறையை எடுத்திருப்பவர் பெயர் ரமேஷ் அல்ல, மதன். அவர் சற்றுமுன்தான் தமது அறைக்கு வந்ததாகவும், தான் யாருக்கும் டிஸ்டண்ட் கால் போடவில்லை என்றும் கூறுகிறார். ரமேஷ் என்று தனக்கு யாரையும் தெரியாதென்கிறார்.''

'மதன்... ரொம்பப் பரிச்சயமான பெயராக இருக்கிறதே... ரமேஷ் எப்போதாவது கூறி இருப்பானோ?' — ஹரியின் சிந்தனை ஓடியது. அதைத் தாவிப் பிடித்து நிறுத்தி விட்டு ஆபரேடருடன் பேசினான். ''மதனுக்கு நிச்சயம் ரமேஷைத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் அறையிலிருந்து ரமேஷ் பேசுவானேன்?'

''அந்த ஹோட்டல் டெலிபோன் ஆபரேட்டர் ஒரு சங்கதி கூறினார். 89ம் நம்பர் அறைக்கு நேர் கீழேயுள்ள அறைக்காரர் தன் ரூமின் விதானத்தில் 'டொக் டொக்' என்று யாரோ தரையில் தட்டுவது போன்ற சத்தம் கேட்டதாகப் புகார் செய்தாராம். அப்போது மிஸ்டர் மதன் அவர் அறையில் இருக்கவில்லை. ஆகவே யாரோ கள்ளத்தனமாக அவர் அறைக்குள் புகுந்திருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள்...'' அவன் போனை வைத்து விட்டான்.

ஹரி மேலும் குழம்பினான். 'போலீஸுக்குத் தெரிவிக்கலாமா?' பளிச்சிட்ட அந்த எண்ணத்தை ஒதுக்கி விரட்டினான். ரமேஷ் விரும்பாத செயல் அது.

'ஆனால் போனில் கேட்ட அவன் குரல் ஏதோ போலிருந்ததே?' — ஹரியை அது உறுத்தி எடுத்தது.

'ஆல் ரைட், எப்படியும் இரண்டு நாளில் திரும்பி வருவான். அவனைச் சந்திக்கும்போது விசாரித்துக் கொள்ளலாம்' — என்று அலைபாயும் நெஞ்சைச் சமாதானப் படுத்திக்கொண்டு அறை விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் விழுந்தான். சூழ்ந்து கொண்ட இருளை, வீதியிலுள்ள விளம்பர விளக்குகளின் மங்கலான ஒளிவிரட்ட, அந்தப் போராட்டத்தில் ஏற்பட்ட இருள் மயக்கத்தில் ஹரியை அயர்வு அழுத்த, தூக்கம் தழுவிக் கொண்டது.

(தொடரும்)



# சிரிக்க நினைத்தால் சிரிக்கலாம்!

மனோரமா—

''கொலை! கொலை! கொலை!''

என்னைப் பார்த்ததும் இப்படிக் கத்தினார் நடிகை மனோரமா. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தேன். என் அருகிலோ அல்லது கண்ணுக்கு எட்டிய தூரத்திலோ எதுவுமே நடக்கவில்லை. பின் ஏன் இந்தக் கூச்சல்? பார்வையிலேயே கேள்வியைத் தேக்கி நின்றேன்.

''நேற்றே சினிமாவில் நகைச்சுவை பற்றிச் சொல்ல வேண்டுமென்று என்னிடம் கூறிவிட்டுச் சென்றீர்கள் இல்லையா? உங்களைப்பார்த்ததும் ஒருசம்பவம் நினைவுக்கு வந்தது. அதனால்தான் அப்படிக் கத்தினேன்'' என்றார் மனோரமா. அந்தச் சம்பவத்தை மட்டுமல்ல, வேறு சில சம்பவங்களையும் உங்களுக்காகக் கூறுகிறார், இதோ:

''அன்று ஒரு தமிழ்ப்படத்தின் படப்பிடிப்பு. ஆடம்பரமான மாடிவீடு போன்ற செட் போடப் பட்டிருந்தது. நான், நடிகர் அசோகன், நடிகை கருமாரி மற்றும் சில கலைஞர்கள் அக்காட்சியில் பங்கு கொண்டோம். காட்சியின்படி கருமாரி மாடியில் ஒரு கொலையைப் பார்த்து விடுகிறார்.

பார்த்த அதிர்ச்சி தாங்காமல் 'கொலை; கொலை! கொலை!' என்று கத்திக் கொண்டே மேலேயிருந்து கீழே இறங்கி வருகிறார். என்னுடனிருந்த அசோகன் சும்மாவிராமல் அவர் கத்தி முடித்து அருகே வந்ததும் நாயைப் போல் ''லொள்! லொள்! லொள்!'' என்று குரைக்க ஆரம்பித்து விட்டார். நாங்களும் அது காட்சி என்ற நினைப்பே இல்லாமல் சிரித்து விட்டோம்.

நான் பல படங்களில் நடித்திருக்கிறேன். ஆனால் நான் நடித்த படங்களிலேயே எனக்குப் பிடித்தமான நகைச்சுவை சமீபத்தில் வெளிவந்த ''வாழ நினைத்தால் வாழலாம்''என்ற படத்தில் வரும் நகைச்சுவைக் காட்சிதான். ஏனென்றால் ஒரு படம் தயாரிக்கப்படும் இடம் ஸ்டுடியோ. அந்த ஸ்டுடியோவில் பணி புரியும் பலர் ஒவ்வொரு நாளும் பல்வேறு விதமான நடிகர், நடிகைகளின் நகைச்சுவைக் காட்சிகள், சோகக்காட்சிகள், ஆகியவைகளைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள். பார்த்துப் பார்த்துப் பழகி விட்டதாலோ என்னவோ அவர்கள் எந்த ஓர் உணர்ச்சிக்கும் அடிமையாக மாட்டார்கள். ஆனால் இந்த ''வாழ நினைத்தால் வாழலாம்'' படத்தின் நகைச்சுவைக் காட்சியை எடுத்து முடித்த அடுத்த நாள் ஒரு தொழில் நுட்பக் கலைஞர் என்னிடம் வந்து, ''உங்களால் நான் பைத்தியம் என்ற பட்டத்தை இன்று வாங்கிக் கொண்டேன்!'' என்றார். என்ன என்று விசாரித்தேன்.

முதல்நாள் எடுத்த காட்சியைப்பற்றி நினைத்துக்கொண்டே இவர் நடந்து வந்து கொண்டிருந்தாராம். நகைச்சுவைக் காட்சியானதால் தம்மை மறந்து தமக்குத்தாமே சிரித்தபடி நடுரோட்டுக்கே வந்துவிட்டாராம். ''ஏ பைத்தியம்! தனக்குத்தானே சிரிச்சுண்டு நடு ரோட்டுக்கு வந்து விட்டாயே ஓரமாப்போ'' என்று ஒரு லாரிக்காரன் கத்திவிட்டுச் சென்றபிறகுதான் அவருக்குச் சுயநினைவே வந்ததாம். இது மட்டுமல்ல, அந்தப் படத்தில் ஊமை வேடத்தில் வந்து



கூட நான் சிரிக்க வைத்திருக்கிறேனென்றால் அதைப்பற்றி என்னவென்று சொல்ல?

''வீட்டுக்கு வீடு'' படம்தான் ''இக்குத் தெரியாத வீட்டில்'' என்ற நாடகம். படத்தில் லட்சுமி ஏற்ற வேடத்தை நான் நாடகத்தில் செய்தேன். ஒரு காட்சியில் வெண்ணிற ஆடை மூர்த்தி, கையில் ஸ்னோ பாட்டில் வைத்துக்கொண்டு, வசனம் பேசிக் கொண்டே அந்த ஸ்னோவை முகர்ந்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது அவரது மூக்கின் மேல் கொஞ்சம்



✕ கண்மணி ராஜாவில் எம்.என். ராஜத்துடன்

ஸ்னோ
ஒட்டிக் கொள்ளும்.

அந்தக் காட்சி முடியும் வரை அது இருக்கும். இந்தக் காட்சிக்காகவே அவரிடம் பாதிக்குமேல் உபயோகித்த ஒரு ஸ்னோ பாட்டில் ஒவ்வொரு நாடகத்தின் போதும் கொடுக்கப்படும். ஆனால் அன்று ஒரு புதிய ஸ்னோ பாட்டில் அவரிடம் கொடுக்கப்பட்டது. முழுமையான ஸ்னோ பாட்டில் என்பது அவரிடம் யாரும் கூறவில்லை. காட்சியின் போது வழக்கம் போல் அவரது நீளமான மூக்கு வேகமாக ஸ்னோ பாட்டிலின் உள்ளே சென்றது. வசனம் பேசவேண்டிய நாங்கள் சிரிக்க ஆரம்பித்து விட்டோம். அவர் தொடர்ந்து வசனம் பேசிக் கொண்டிருந்தார். ரசிகர்களும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் காட்சியை முடித்தோம். அப்பொழுது நான் சொன்னேன், 'நீளமான மூக்கினால் ஆபத்தும் தான்' என்று. 'ஆமாம்!' என்று மூக்கை மட்டுமே ஆட்டிப் பதில் கூறினார் மூர்த்தி.

ஒரு வகுப்பறைக் காட்சி. ஒரு மாணவனைத் தவிர, மற்ற எல்லாருமே ஆசிரியர் சொல்லித் தரும் பாடத்திலேயே கவனமாக இருந்தார்கள். தன் கவனத்தைத் திருப்பியிருக்கும் மாணவன், தான் அமர்ந்திருக்கும் இடத்துக்கு நேர் எதிரே உள்ள ஓர் எலி வளையைக் கவாசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர், அந்த மாணவனிடம் ''நான் சொல்லிக் கொடுத்தது காதில் நுழைந்ததா?'' என்றார். எலி வளையிலேயே கவனமாயிருந்த மாணவன் ''எல்லாம் நுழைந்து விட்டது. வால்மட்டும் நுழையவில்லை'' என்றான். இந்த நகைச்சுவைச் சம்பவம் இடம்பெறும் படம் ''சிவகவி''. மாணவனாக நடித்தவர் கலைவாணர் கிருஷ்ணன். இவ்வளவு நாட்கள் கழித்து இன்னும் இந்த நகைச்சுவையைப் பலர் பரிமாறிக் கொள்கிறார்கள்.

அந்தந்த இடத்துக்குத் தக்கவாறு நகைச்சுவையுடன் பேசும்திறமை, மறைந்த நடிகர்

✕ காரோட்டி கண்ணனில் தேங்காய் சீனிவாசனுடன்





திரு டி. எஸ். பாலையா அவர்களுக்கு இருந்தது. ஒருமுறை என்னிடம் அவர் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். ஒருவர் வெளிநாட்டுக்குப் போகிறேன் என்றவுடன் அவரது நண்பர், ''நீங்கள் திரும்பும்போது எனக்கு ஒரு ஜபமாலை வாங்கி வாருங்கள்'' என்றாராம். சரி என்று வெளிநாடு சென்றவர் ஆசையுடன் தம் நண்பர் கேட்டதை வாங்கி வந்தார். ஊர் திரும்பியதும் நண்பரை அழைத்து ஜபமாலையைக் கொடுத்தார். வாங்கிக் கொண்ட நண்பர் ஜபம் செய்ய ஆரம்பித்தார். வாங்கி வந்த நண்பருக்குக் கோபம் வந்துவிட்டது. இனிய நண்பர் கேட்கிறார் என்பதனால் மறக்காமல் வாங்கி வந்தேன். என்னை நம்பாமல் நான் வாங்கிவந்த மாலையில் உள்ள மணிகளை எண்ணிப் பார்க்கிறானே என்று மனத்தாங்கலுற்றுக் கத்தினார். எப்படி இருக்கிறது கதை?

நடிகர் வி. கே. ராமசாமி சதா ஜோக் அடித்துக் கொண்டிருப்பார். ஒருநாள் வீட்டில் உடம்பு சரியில்லாமல் ஜுரத்துடன் படுத்திருந்தார். வி. கே. ஆர். ஊசி போடுவதற்காக டாக்டர் வந்தார். தம் நர்சிடம் பஞ்சு எடு என்றார். அப்பொழுது வி. கே. ஆர். 'அவர் தனியா வரமாட்டாருங்க, கிருஷ்ணனுடன் சேர்ந்துதான் வருவார்' என்றாராம். ஜுர வேகத்தில் கூட அவருக்கு நகைச்சுவைதான்.

ருத்ர தாண்டவம் படத்தின் கதாசிரியர் வீரப்பன் தம் சொந்த ஊரான கிராமத்துக்குச் சென்றார். அந்தக் கிராமத்திலுள்ள ஒரு பெரியவர் வீரப்பனைப் பார்த்து, ''பட்டணத்திலே பொழுப்பெல்லாம் நல்லா நடக்குதுங்களா?'' என்று கேட்டார். ''எல்லாம் நல்லா நடக்குதுங்க'' என்றார் வீரப்பன். ''படம் புடிக்கிற வேலைதானுங்களே?''

''ஆமாங்க.''

''புடிச்ச படத்தை நீங்க பார்க்க மாட்டீங்களா?''

''கண்டிப்பா பார்ப்போமே! அப்புறம் தான் வெளியிடறோம்.''

''பார்த்துத்தானே வெளியிடறீங்க? பின்னே ஏன் தம்பி படம் நல்லாவே இருக்க மாட்டேங்குது?'' என்றாராம் பெரியவர்!

இப்படிப் பல சிரிப்பு வெடிகளை அடுத்தடுத்து வீசி என்னைச் சிரிக்கப் பண்ணிக் கொண்டிருந்தார், கிட்டத்தட்ட நானூறு படங்கள் நடித்து முடித்திருக்கும் மனோரமா.

இதற்குமேல் சிரித்து மாளாது என்று விடைபெற்றுப் புறப்பட்டு விட்டேன்.

பேட்டி : ''சலன்''

# வாரியாரும் நகைச்சுவையும்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 'மைக்' முன்வந்து அமர்ந்தாலே போதும். அரங்கத்தில் ஒருவித தெய்வீக களை சேரும். ஒரு பரவசப் புன்னகையுடன் சொற்பொழிவை ஆரம்பித்தார் என்றால் ஒரு கலகலப்பு அவையில் தோன்றிவிடும்!

அண்மையில் ஆஸ்திக சமாஜத்தில் நடந்த அவரது கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவின்போது முதல்நாள் நிகழ்ச்சி கொஞ்சம் சாவகாசமாகவே தொடங்கியது.



இதை மத்தில் கொண்டு வாரியார் 'நகைச்சுவை' ததும்பக் கூறினார்:

''இப்போது வந்திருப்பவர்கள், வந்து கொண்டிருப்பவர்கள், ஏழரை மணி அளவிற்கு வர இருப்பவர்கள் எல்லாருக்குமே வருகை சொல்லுகிறேன். சிலர் சாவகாசமாக வரலாம். இதை நான் ஒன்றும் புதிதாகச் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். சுந்தர மூர்த்தி நாயனாரே அந்தக்காலத்தில், தமக்குப் பின்னால் வரும் மகான்களுக்கும் வணக்கம் சொல்லியிருக்கிறார். அவருடைய திருத்தொண்டத் தொகையைப் பார்த்தால் தெரியும் தமக்கு முந்தியவர்கள், சமகாலத்தவர்களோடு நின்று விடவில்லை. 'அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்று சொல்லியிருக்கிறார்'' என்று கூறிய போது கலகலப்பின் அலை அரங்கத்தில் அடித்து ஓய்ந்தது. தொடர்ந்து ராம அவதாரத்தைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார் வாரியார்.

திருக்குறுங்குடி அழகிய நம்பிராயர் திருக்கோவில் திருப்பணி நிமித்தம் நடைபெற்றது வாரியாரின் விரிவுரை. ஸ்ரீ டி. எஸ். ராஜம் விழாவினைத் தொடங்கி வைத்தார்.

— கோமதி ஸ்வாமிநாதன்




# பிறப்பதோ புத்தாண்டு!
# கிடைப்பதோ சிறப்புத் தள்ளுபடி!
# கொடுப்பதோ நரசூஸ் காபி!
# கிலோவுக்கு 1 ரூபாய்

'79 ஜனவரியில் வாங்கும் காபியோடு சிறப்புத் தள்ளுபடி கூப்பன்களைக் கேட்டு வாங்குங்கள், பெற்ற கூப்பன்கள் அத்தனையும் '79 பிப்ரவரி, மார்ச்சில் கொடுத்து, பலன் அனைத்தும் அடையுங்கள். விபரங்களுக்கு அருகில் உள்ள எமது கிளையை அணுகவும்.



**ஜீவனுள்ள ஒரே காபி**

# நரசூஸ்

**"தெர்மலோ" காபி**

**நரசூஸ் காபி கம்பெனி**
**சேலம் 636 007**

கிளைகள் : பாண்டிச்சேரி & தமிழகமெங்கும்

ADWAVE/NCC/967



# குடிக்காத போதை

• சு. சமுத்திரம் •

ஊருக்குச் சற்றுத் தொலைவில், ஹிப்பி மாதிரி ஒதுங்கிய இடம். சுற்றிலும் கருவேல மரங்கள் இரும்புக் கம்பிகள் மாதிரியும், அவற்றிற்கு இடையே இருந்த வேலிக்காத்தான் செடிகள், முட்கம்பி வலைகள் மாதிரியும் இருந்த இடம். மொத்தத்தில், அது ஒரு 'மாதிரி' இடமல்ல. 'ஒருமாதிரியான' இடம். இந்த இடத்தைச் சுற்றி, கரைவரை மணல் புரளும் ஓடை 'அகழி' மாதிரி மூன்று பக்கமும் சுற்றி இருந்தது. கிட்டத்தட்ட காடு. தலைகீழ் பரிணாமத்தால் தோப்பானது போலவும், தோப்பு காடாகப் பரிணாமமாகிக் கொண்டிருப்பது போன்றும் தோன்றும் பகுதி.

இந்தப் பகுதியில் ஓர் ஓரத்தில், பாழடைந்த கட்டிடம். அந்தச் செங்கல் கட்டிடத்தில், இன்னும் இடியாமலே விழுந்து கொண்டிருந்த ஒரு சுவருக்குப்பக்கத்தில், இரும்பு அடுப்பிற்கு மேலே, பத்து 'பிளாடர்' அளவுக்கு அதாவது ஐம்பது லிட்டர் கொள்ளளவு கொண்ட டிரம். டிரம்மிற்கு மேலே, பதினைந்து லிட்டர் 'சரக்கைப்' பிடிக்கும் 'தவலைப்'பாத்திரம். அதற்கு மேலே 'டேங்கா' — அதாவது ஒரு சின்னப் பாத்திரம். இந்த மூன்று உபகரணங்களும் காற்றுப் புகாதபடி, எதையோ வைத்துக் கட்டப்பட்டிருந்தன. உச்சியில் இருந்த பாத்திரம், அலுமினியத் தகட்டால் மூடப்பட்டு, பிரிக்க முடியாத பிராண சிநேகிதர்கள் போல், இறுக்கப்பட்டிருந்தது.

மேலே இருந்த 'டேங்கா'வில் முழுக்க முழுக்கத் தண்ணீர் இருக்கிறதாம். அதற்குக் கீழே இருந்த 'டிரம்மில்' ஊறப்போட்ட வெல்லமும், பட்டைகளும் கொட்டைகளும், கொஞ்சம் சல்போட்டா வகைகளும், இன்னும் பல 'கிக்' வகையறாக்களும் இருக்கின்றனவாம். இரும்படுப்பில் எரியும் செந்தீ அனலைக் கக்கியதால், டிரம்மிற்குள் இருப்பவை பொங்கி எழுந்து, 'ஆவியாகி' 'டேங்காவில்' பட்டுக் குளிர்ச்சியாகி, ஜீவாத்மாவான அந்த ஆவி, 'பரமாத்மாவாகி,' நடுவில் இருந்த தவலைப் பாத்திரத்திற்குள், சொட்டோ சொட்டென்று சொட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்வி.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், ஜில்லா கலெக்டரைவிட, பலமடங்கு சர்வ வல்லமையுள்ள, மாவட்ட காய்ச்சும் அதிகாரியிடம், தாலுகா சப்ளை அதிகாரியாக இருந்தவன் காளிமுத்து. அவருடைய பல கார்களில் ஒரு கார், இவனிடமே எப்போதும் இருக்கும். அந்த அளவுக்கு, மா. கா. அதிகாரியிடம், தா. ச. அதிகாரியாகப் பணி புரிந்தவன். சொந்தத்தில் 'தொழில்' செய்ய நினைத்து, கொஞ்ச காலத்திற்கு முன்புதான், இந்தக் காய்ச்சும் தொழிலில் இறங்கினான். சப்ளை அதிகாரியாக இருந்தபோது, தெரிந்து





கொண்ட, தொழில் நுட்ப விவரங்களை வைத்து, இந்தக் குடிசைத் தொழிலைத் துவக்கியபோது, பல கார்களையும், பல அரசியல் தலைவர்களையும், பல அதிகாரிகளையும் கைக்குள் போட்டுக்கொண்டிருந்த மாவட்ட காய்ச்சும் அதிகாரி, அவனைச் சொந்தத் தொழில் வேண்டாம் என்று கெஞ்சினார். அதற்கு அவன் மசியாததால், அடியாட்களை வைத்து மிஞ்சிப் பார்த்தார். 'மாமூல்' ஆட்களை வைத்து மடக்கப் பார்த்தார். ஆனால் எதற்கும் காளிமுத்து கலங்கவில்லை.


மாவட்ட காய்ச்சும் அதிகாரியும், புரொடெக்ஷன் மானேஜர், சப்ளை அதிகாரிகள் முதலிய முக்கியப் புள்ளிகளும், அவனை புள்ளி வைக்க முடியாது எனத் தெரிந்துகொண்டு, சமாதான – சாராய – சக வாழ்வுக் கொள்கையை, நேசக் கரத்தோடு நீட்டினார்கள். நீட்டிய கரத்தைப் பிடித்துக் கொண்ட காளிமுத்து, அவர்களிடமிருந்து 'ஏரியா எல்லையை' வரையறுத்துக் கொண்டதுடன், ஆக்கிரமிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தையும், பரஸ்பர ரகசிய பாதுகாப்பு உடன்பாட்டையும் செய்து கொண்டான்.

இப்படிப்பட்ட காளிமுத்துவை, அடியாளுக்கு அடியாளாக, அடியார்க்கும் அடியாளாக விளங்கும் இதோ இந்த காளிமுத்துவை – ஒரு பொடிப்பயல் மிரட்டுகிறான் என்றால், அதுவும் 'கிக்' கொடுக்கும் இவனையே 'கிக்' பண்ணப் பார்க்கிறான் என்றால்...

அதே ஊரைச் சேர்ந்த மூர்த்தி கொஞ்சம் வசதியான வாலிபன், கல்லூரியில் முழுதும் கால் வைத்துவிட்டு, மழை இல்லாத சமயத்தில்கூட, அங்கே ஒதுங்கிய திருப்தியில், அதற்கு அத்தாட்சியாக, ஒரு சர்ட்டிபிகேட்டையும் வாங்கிக்கொண்டு, சமீபத்தில் ஊருக்குள் நிரந்தரமாக இருக்கிறான். கல்லூரிப் பேச்சுப்போட்டிகளில் பல கோப்பைகளை வாங்கியிருக்கிறான். வாங்கட்டும். அதுக்காக, அந்த ஊரில் வழக்கமாக நடக்கும் மதுவிலக்குப் பொதுக்கூட்டம் ஒன்றில், பல தாலுகா அதிகாரிகளும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் கலந்து கொண்ட, பலர் குடித்துப் புரண்ட அந்தக் கூட்டத்தில், காளிமுத்துவை வாங்கு வாங்குன்னு வாங்க வேண்டுமா?

கூடாது தான். காளிமுத்து யோசித்தான். இவனை – இந்தக் கிறுக்குப் பயல் மூர்த்தியை, மாறுகால், மாறுகை வாங்கினால் என்ன?

வாங்க முடியாது. ஏனென்றால், மூர்த்தி வசதியானவன். பங்காளி பலங்கொண்டவன். பெரும்பாலும் குடிகாரர்களாக இருந்தாலும், அவனைத் திட்டுவதையே பொறுத்துக்கொள்ளாத ஊரார்கள், தீர்த்துக் கட்டுவதைப் பொறுப்பார்களா? மாட்டார்கள். ஊரில் முக்கால் வாசிப் பேர் எதிரியாவார்கள். சமயத்தை எதிர்நோக்கி நிற்கும் மாவட்ட காய்ச்சும் அதிகாரி, இவனைக் கொக்குபோல் கொத்தி விடுவார். 'தொழில்' லாபத்தால், மோட்டார் பைக்கிலிருந்து, மோட்டார் கார் வாங்கும் அளவுக்கு முன்னேறிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், இந்தப் பயலை எப்படி மடக்கலாம் என்று காளிமுத்து தீவிரமாகச் சிந்திக்கலானான். ஒரு குடிக்கு யோசனை கூறும் சிலர் ஒன்று கூடினார்கள். ஒரு பெரிய வியூகம் வகுக்கப்பட்டது. மூர்த்திப்பயல் எப்படியும் விழுந்துதான் ஆகவேண்டும்! தனக்கு எல்லா வகையிலும் பரிச்சயமான ஊர் இளம் பெண்ணை, மூர்த்திமேல் ஏவினான். அவன் சிரித்துப் பார்த்தான். கையை ஆட்டிப் பார்த்தான். வாய்வலித்ததும், கை ஓய்ந்ததும்தான் மிச்சம். இது போதாதென்று காளிமுத்து தன் ஒரே பெண்ணான மங்காத்தாளை, நகை நட்டோடு, கட்டிக்கொடுப்பதாக, மூர்த்தியின் அப்பாவுக்கு முறைப்படி சொல்லியனுப்பினான். அப்பாக்காரர் சம்மதித்தார். ஆனால் மகன்காரன், ''மங்காத்தா... தங்காத்தா! தாராளமாய்க் கட்டிக்கிறேன். ... அதுக்கு முன்னால்... அவனுக்கும் குடிப்பழக்கம் உண்டான்னு தெரிஞ்சாகணும்'' என்று சொல்லுறான். இதைக் கேள்விப்பட்ட, ஏற்கனவே



''நான் சின்ன வயசில் மூணு வேளை சாப்பாடுகூட இல்லாமே ரொம்பக் கஷ்டப் பட்டவன் சார்.''

இன்னொருவனைக் காதலிக்கும் மங்காத்தா இதைச் சாக்காக வைத்து, ''குடிகார அப்பனுக்கு... பிறந்தவனுல... என்னையும்... குடிகாரின்னு, மூர்த்தி தடியன் சொல்லிட்டான். எல்லாம் ஒங்களால... ஒங்களால...! கட்டினால்..: ராமதுரை மச்சானைத்தான் கட்டுவேன்... ஆம்... ஆமாம் கட்டுவேன்!'' என்று காளிமுத்து வெட்டிய திட்டக்கிணற்றுக்குள், ராமதுரை என்கிற பூதத்தைக் கிளப்பிவிட்டாள். எல்லா விதத்திலும் தன்னைப்போல் விளங்கும் ராமதுரைக்கு, மகளைக் கொடுக்க முடியாமல், காளிமுத்து மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடினான்.

காளிமுத்துவுக்கு ஒன்றும் ஓடவில்லை. இந்தத் தொழிலைத் தவிர எந்தத் தொழிலையும் அவனால் செய்ய முடியாது. மாவட்டக் காய்ச்சும் 'அதிகாரியும்' அவனை, மீண்டும் தன் டிபார்ட்மெண்டுக்குள் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார். இனிப் பொறுப்பதில் நியாயமில்லை. என்ன வந்தாலுஞ்சரி... மூர்த்திப்பயலை, தீர்த்துக்கட்டியாக வேண்டும்... ஒரே வெட்டாக வெட்டியாக வேண்டும்... தலைவேறு... முண்டம் வேறாக ஆக்கியாக வேண்டும்.

'வேலையை' முடிக்க, ஆட்களை அமர்த்துவதற்கு முன்னதாகவே, போலீஸ் நிலையத்தில் இருந்து, காளிமுத்துவுக்கு அழைப்பு வந்தது. போனான். சப் இன்ஸ்பெக்டர் எரிந்து விழுந்தார். காளிமுத்து, தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், தனக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கும்படியும், கலெக்டரிடம் 'கிரீவன்ஸ் டேயில் (மனுநீதி திட்டநாள்) மூர்த்தி கொடுத்திருந்த விண்ணப்ப மனுவை, அவனிடம் காட்டினார். ''மூர்த்தி மேல,.., ஒரு சின்னக்காயம் ஏற்பட்டாலுஞ்சரி.., ஒன் முதுகிலே...பெரிய காயம் ஏற்படும்..., ஜாக்கிரதை'' என்று சப்-இன்ஸ்பெக்டர், அவனைத் திட்டினார். லேசாகத் தட்டிக்கூடப் பார்த்தார். ''அவனை..., எவன் தாக்கினாலும்... நீ தாக்கியதாய்க் கருதப்படும்'' என்று தாக்கீதும் கொடுத்தார்.

இப்போது, மூர்த்திக்கு, வேறு விரோதத்தில், வேறு எவனும் 'சின்னக்காயம்'கூட விளைவிக்காமல் இருப்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்புக் காளிமுத்துவுக்கு வந்துவிட்டது. ஏற்கெனவே, மூர்த்தி மீது, இன்னொரு 'ஏரியா' ஆசாமிகள் குறி வைத்திருப்பது தெரிந்ததும், அவர்களின் காலில் விழாக்குறையாக விழுந்து, அழாக்குறையாக அழுது, அவர்களைத் தடுப்பதற்குள் காளிமுத்துவிற்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

இதற்கிடையே போலீஸ்காரர்கள், 'ரெய்ட்' பண்ண வரப்போவதாக, காளிமுத்துவுக்குத் தகவல் வந்தது. இந்தத் தொழிலை எப்படிவிட முடியும்? இந்தச் சண்டாளனை... எப்படிச் சமாளிக்க முடியும்? என்ன பண்ணலாம்... ஒரே ஒரு வழிதான்... காளிமுத்து வெளியூருக்குப் போய்விட்டு வந்தான். அங்கே... தொழில்சகாவின் காதைக்கடித்துவிட்டு, ஊருக்குத் திரும்பினான். இதிலாவது வெற்றி கிடைக்குமா?

காதலியை, கடைசி முறையாகப் பார்ப்பவன்போல், காளிமுத்து சாராயப் பானையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, கையாட்கள் கிளாஸ்களை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். காளிமுத்துவின் பகுதிக்குள், தைரியமாக வரும் அந்த வாடிக்கைக்காரர்கள் இப்போது போலீஸ் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்கிற பயத்தில், அவசர அவசரமாகக் குடித்துக் கொண்டிருந்தார்கள். நாளையிலிருந்து தொழிலை நிறுத்தப் போகும் வேதனைச் செயலை நினைத்து, வெம்பிக்கொண்டே காளிமுத்து இருந்தபோது, ஒருவர் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு உள்ளே வந்தார் காளிமுத்து, அவரைக் கோபமாகப் பார்த்தான். அது, வெட்டிக் கோபமல்ல, வெற்றிக்கோபம்.

''என்ன ராமு மச்சான்! ஏது இந்தப் பக்கம்?''

''அத ஏண்டாக் கேக்குற... சட்டாம் பட்டிக்காரன்... கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டான்... கேட்டால் காரணமும் சொல்ல மாட்டாக்கான்... சரி... ஒன் கிட்டேயே... இனிமேல்... பத்து வச்சுக்கதா... தீர்மானம் பண்ணிட்டேன்... நாலு கிளாஸ் கொடு... சரக்கு நல்லா இருக்கணும்.''

காளிமுத்து கோபமாகப் பேசினான்.

''தொட்டிலையும் ஆட்டி... குழந்தையையும்... கிள்ளி விட்டால் என்ன மச்சான் அர்த்தம்?''

''என்னடா சொல்றே?''

''பின்ன என்ன மச்சான்? முளைச்சி... மூணு இல்லே விடல... இந்த மூர்த்திப் பயலோட அட்டகாசம் தாங்க முடியல... அவனை... கண்டிச்சப்பேச... முடியாத ஒங்க... வாய்க்கு... சாராயம் எதுக்கு... எதுக்குன்னேன்?...''

''அந்தக் கதையை... அப்புறமா பேசலாம்... இப்போ ... கிளாஸ் எடு''

''முடியாது... முடியவே முடியாது...? மூர்த்திய... அடக்க முடியாத ஒங்க கையால கிளாஸை... பிடிக்க முடியாது.''

# வளரும் பருவம் கால்ஷியம்-ஸாண்டோஸ்® பருவம்.







பிஞ்சுப் பருவம் முதல் வளர்ச்சிக் காலம் முழுவதும் குழந்தைக்குக் கால்ஷியம் இன்றியமையாதது. இந்த வளர்ச்சிக் காலத்தில் உங்கள் குழந்தை போதிய 'கால்ஷியம்' பெறத் தவறினால், பின்னர் அதை ஈடு செய்ய-இயலாது. இன்றே அவனுக்கு 'கால்ஷியம் ஸாண்டோஸ்' கொடுக்க ஆரம்பியுங்கள். உறுதியான பற்களுக்கும், ஆரோக்கியமான எலும்பு வளர்ச்சிக்கும் தேவை.

தினசரி நான்கு கால்ஷியம் ஸாண்டோஸ் வில்லைகளே! குழந்தைகள் ஆவலுடன் விரும்பும் வனில்லா மணம் கூட்டி, வைட்டமின்கள் C, D மற்றும் $B_{12}$ சேர்த்து உரம் ஊட்டப்பட்டவை, கால்ஷியம் ஸாண்டோஸ் வில்லைகள்.

கால்ஷியம் ஸாண்டோஸ்- உலகிலேயே உன்னதமான கால்ஷியம் ஸ்விட்ஸர்லாந்தில் ஸாண்டோஸால் உருவாக்கப்பட்டது.



**கால்ஷியம்-ஸாண்டோஸ்®**

**வலுவுள்ள பற்களுக்கும் உறுதியான எலும்புகளுக்கும்**

SANDOZ

daCunha CS 27 TAM

# கிரிக்கெட் கற்கலாம்!

18


கதை : கே. சந்திரசேகர்

படம் : ராஜு.. தயாரிப்பு : குண்டுமணி

## ஹூக் ஷாட்


ஹூக் ஷாட்டுக்கு, சரியான பாத அசைவு தேவை. பந்தின் அழுத்தத்தைத் தாக்குவதால் பந்து மேலே பறந்து செல்ல நேரிடும். விக்கெட்டின் வேகத்தையும், பந்து எம்பும் விதத்தையும் நன்கு 'எடை' போட்டு அறிந்து பிறகே ஹூக் ஷாட் முயல வேண்டும்.

வலது பாதம் நன்கு பின்னால் சென்று, உடலை 'ஆப்சைட்' பக்கம் நகர்த்தி, பந்து பறந்து வரும் கோணத்துக்கேற்ப அசைந்து ஆட வேண்டும்.





தலை நேராக ஆடாமல், அசையாமல் இருக்க வேண்டும். தோளும் கைகளும் இந்த 'ஷாட்' அடிக்க இயங்க வேண்டும். வேகப்பந்தை அதன் விரைவுக்கொப்பத் திசை மாற்றித் திருப்ப வேண்டும். இந்த ஹூக் ஷாட் அடிப்பதில் பந்து 'டீப் பைன் லெக்' திசையில் 'காட்ச்' ஆகும் படியும் நேரலாம்.



சரியான கண்ணோட்டமே இந்த ஹூக் ஷாட்டுக்கு மிக அவசியம். வலது பாதத்தை அசைத்து, உடலை வளைத்து, பந்து முகத்தில் தாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

''அவனை... அடக்குறதுக்கு நாலுசுக... கிளாஸ்ல ... ஊத்துடா...''

''முடியாது... அடக்கிட்டு வாரும்... அப்புறமா... இந்தப் பாலையையே ஒங்ககிட்டத் தந்துடுறேன்...''

''ஒரே ஒரு கிளாஸாவது ஊத்துடா...''

''முடியாது...''

''சரி... ஒரு அரை கிளாஸாவது ஊத்துடா...''

''இந்த ஊர்ல மூர்த்தி இருக்கற வரைக்கும், ஒரு சொட்டுக்கூட கிடையாது... மாரியாத்தா சத்தியமா... கிடையாது... ஆமாம் ராமு மச்சான்... நீங்க... இங்க இருக்கறதுல.. அர்த்தமில்லை...''

ராமு மச்சான், வாசலை விகம் பாலையைப் பார்த்தார். வாடிக்கைக்காரர்களைப்பார்த்தார். ஒரு பயலாவது... குடிக்கச் சொல்லல... இருக்கட்டும்... இருக்கட்டும்... கவனிக்கிறவிதமா... கவனிச்சுக்கறேன்.

ராமுவுக்கு, குடித்தால்கூட, அவ்வளவு போதை இருந்திருக்காது. குடிக்காத போதை, முகத்தை, சிவப்பாக்க, குடிக்க முடியாததிலே, அவரை நிலை குலையச் செய்ய, ''டேய் மூர்த்தி... ஒன்னை... என்ன பண்றேன் பாருடா'' என்று உளறிக்கொண்டே வெளியேறினார்.

இரண்டே இரண்டு நாட்கள்தான்.

காளிமுத்து வெற்றிக் களிப்புடன், மாமூலான வாடிக்கைக்காரர்கள் வயிறார வாழ்த்த, தக்காரும் மிக்காருமின்றி, தொழிலை 'ஓஹோ'ன்னு செய்து வருகிறான். விரைவில் காரும் வாங்கப் போகிறான்.

குடிக்க முடியாமல் போன கோபத்தில், வீட்டுக்குத் திரும்பிய, மூர்த்தியின் தந்தையான ராமுவும், இதேபோல் திட்டமிட்டபடி வெளியூரில் குடிக்கக் கொடுக்காமல் திருப்பி அனுப்பப்பட்ட அவன் அண்ணனும், ''ஊர்ல... ஆயிரம் நடக்கும்... ஒனக்கென்னடா வந்தது? பெட்டிஷன் எழுதினியாக்கும்... பெட்டிஷன்... நம்ம குடும்ப கௌரவத்தைக் காத்துல விட்டுட்டியேடா... காவாலிப்பயலே'' என்று சொல்லிக்கொண்டு ஒருவர், பெட்டிஷன் எழுதிய மூர்த்தியின் கைகளைச் சாராயக் கிளாஸைப் பிடிப்பது போல் பிடித்துக்கொள்ள, இன்னொருவர் அவனை அடிஅடியென்று அடித்து நொறுக்கினார். இதுநாள் வரைக்கும், தன்னை 'ஏடா' என்றுகூடக் கூப்பிடாத தந்தையும், தமையனும், இப்போது அடித்ததால் ஏற்பட்ட நெஞ்சுவலி பொறுக்க முடியாமல், மூர்த்தி எங்கேயோ ஓடிப்போய் விட்டான். அநேகமாக, சென்னையில் வசிக்கும் அக்காள் வீட்டில் தங்கி வேலை தேடிக்கொண்டிருப்பதாகக் கேள்வி.

எப்படியோ, பல்லோர் அறிய, பகிரங்க ரகசியமாகக் காளிமுத்துவின் பாலைக்குள், இப்போதும் 'சொர்க்க' மழை பெய்து கொண்டிருக்கிறது!


RUBY DUST
மேலும் பல கோப்பைகள்
சிறந்த ஸ்ட்ராங்கான டீ
என் குடும்பத்திற்கு
மேலும் பல
கோப்பைகள் சிறந்த
ஸ்ட்ராங்கான டீ
கிடைக்கின்றன--
ரூபிக்கு நன்றி.
RUBY DUST
லிப்டன்
ரூபி
டஸ்ட்




வஞ்சி நகரப் பெண்கள் மூவேந்தர் மீதும் மேலும் பல வாழ்த்துப் பாடல்களைப் பாடிய பின் அந்த இசை நிகழ்ச்சி முடிந்ததும் கண்ணகித் தெய்வம் சேரன் செங்குட்டுவனை வாழ்த்துகின்றது. அந்த வாழ்த்தொலியை இளங்கோவின் வாக்காலேயே கேட்போம்.

''ஆங்கு.....
நீணில மன்னர்,
நெடுவிற் பொறையன்நல்
தாள்தொழார், வாழ்த்தல்
தமக்கரிது; சூழ்ஒளிய
எம்கோ மடந்தையும்
வாழ்ஏத்தினள், 'நீடூழி,
செங்குட்டுவன் வாழ்க!'
என்று.

''நெடு நிலத்தையாள்கின்ற மன்னரெல்லாம் நெடிய வில் சின்னத்தையுடைய சேரனை வாழ்த்துவர்; அது வழக்கம். இப்போது அந்தச் சேர மன்னனால் படைக்கப்பட்ட பத்தினிக் கோட்டத்தின் கண்ணகியும் வாழ்த்துகின்றாள்: 'நீடூழி செங்குட்டுவன் வாழ்க' என்று. இத்துடன் வாழ்த்துக் காதை முடிகின்றது. செங்குட்டுவனை வாழ்த்திய கண்ணகி, பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவுக்கு வந்திருந்த அயல்நாட்டு மன்னர்களுக்கெல்லாம் வரம் தருகிறாள். அந்த நிகழ்ச்சியைக் கூறும் ''வரந்தரு காதையுள்'' புகுவோம்.

சிலப்பதிகாரத்தில் உள்ள இறுதிக் காதைக்கு ''வரந்தரு காதை'' என்று பெயர். இந்தக் காதையிலே பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவுக்கு வந்திருந்த தமிழினத்தாரல்லாத மன்னர்களெல்லாம் தங்கள் நாட்டுக்கும் வந்தருள வேண்டுமென்று கண்ணகித் தெய்வத்திற்கு அழைப்பு விடுக்கின்றனர்; இதனை,

''அருஞ்சிறை நீங்கிய
ஆரிய மன்னரும்,
பெருஞ்சிறைக் கோட்டம்
பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும்,
மாளுவ வேந்தரும்,
கடல்சூழ் இலங்கைக்
கயவாகு வேந்தனும்,
''எந்நாட்டு ஆங்கண்
இமய வரம்பினின்
நன்னாள் செய்த
நாளணி வேள்வியில்
வந்தீக' என்றே
வணங்கினர்.''

என்ற வரிகளில் இளங்கோ அறிவிக்கின்றார்.

''எங்கள் தாய் நாடுகளில் பெரு மன்னனை — இமய வரம்பன் என்னும் சிறப்புப் பெயருக்குரியவனை — செங்குட்டுவனின் பிறந்த நாளைக் கொண்டாடப் போகின்றோம். அந்த நாளணி விழாவிலேயும் வந்தருள வேண்டும்.''

இது, பத்தினி விழாவுக்கு வந்திருந்த வேந்தர்கள் விடுத்த வேண்டுகோள்.

இதனால் பத்தினிக் கோட்ட விழாவுக்கு வந்திருந்த மன்னர்களெல்லாம் சேரன் செங்குட்டுவனின் மேலாட்சியை ஏற்றுக் கொண்டவர்கள் என்பது புலனாகிறது. அதனாற்றான், தங்கள் பேரரசனின் பிறந்தநாளை அவர்கள் தத்தம் நாட்டில் கொண்டாடுகின்றனர்.

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran

# பாதுகாப்பு மிகுந்த ஓர் குடும்பம்

ஆம். பி. ஜ. கார்லிங் பிரேக் உறுப்புகளின் குடும்பம் — மறக்க முடியாத குடும்பம். உங்கள் பிரேக் சாதனத்திற்கு மாற்று உறுப்புகள் தேவைப்படும்போது இக்குடும்பத்தைத் தேடி வாருங்கள். ஒவ்வொரு தடவையும் நம்பகமான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பது பி. ஜ. கார்லிங்.

பிரேக் உறுப்புகளுக்கு மாற்று உண்டு — உங்கள் உயிருக்கு மாற்று உண்டோ? ஆகவே மட்டரக பிரேக் உறுப்புகளைத் தவிர்த்துவிடுங்கள்.


அசல் உறுப்புகளுக்கு இணையான சீரிய தரத்தினைப் பெற்றிருக்கும் மாற்று உறுப்புகள் தடையற்ற தொடர்ச்சியான பிரேக் பாதுகாப்பிற்கு இன்றியமையாதவை. உண்மையில் மலிவான அல்லது தரமற்ற உறுப்புகள் காலடைவில் உங்களை அதிகச் செலவினில் கொண்டு விட்டுவிடும் — உங்கள் உயிரினையே கூட குடித்துவிடும்.

உங்கள் பிரேக்குகள் பாதுகாப்புடன் இயங்க, அசல் பி. ஜ. கார்லிங் உறுப்புகளையே உரிமை பெற்ற விற்பனையாளர்களிடம் வாங்குங்கள்.

பிரேக் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான விலை மதிப்பற்ற பல குறிப்புகள் அடங்கிய ஆங்கிலப் புத்தகத்தை இலவசமாகப் பெறுவதற்கு உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

பிரேக்ஸ் இந்தியா லிமிடெட்
பாடி, சென்னை 600 050

SAA/BI/2665



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

# ஆறு வண்ணங்கள் இவரது நெஞ்சில் அலைமோதுகின்றன. ஆனாலும் ஒரு ஷர்ட்டுக்கு ரூ. 40 மட்டுமே இவர் செலவு செய்யத் தயார்.

## எந்த மில் இவருக்குத் தேவையான ஷர்ட்டிங்கை அளிக்கும்?

லக்ஷ்மி. ஏனெனில் பெண்களை மனத்தில் வைத்தே லக்ஷ்மி செயற்கை இழை கலந்த ஷர்ட்டிங்குகளைத் தயாரிக்கிறது. பெண்களைக் கவர வேண்டும் என்பதற்காகத்தானே ஆண்கள் கண் கவரும் ஆடைகளை அணிகிறார்கள்?

ஷர்ட்களைப் பொறுத்த மட்டிலும் மென்மையான நிறச் சேர்க்கைகள் கொண்ட ஷர்ட்களை அலுவலகத்துக்கும், டிசைன்கள் கொண்ட ஷர்ட்களை மாலை நேரத்தில் வெளியே செல்வதற்கும் ஆடவர் அணிய விரும்புகிறார்கள் என்பது லக்ஷ்மிக்குத் தெரியும். எனவேதான் விசேஷமான ஷர்ட் துணிகளைத் தயாரித்து வழங்குகிறது லக்ஷ்மி. அதுவே கோல்டு கிரௌன்.

கோல்டு கிரௌன் — பாலியெஸ்டர் இழை கலந்த ஷர்ட் துணி வகைகள் அணிவோருக்குக் கண்ணியம் சேர்ப்பவை. கண் கவரும் வண்ணங்களில் கிடைக்கின்றன.

அடுத்த முறை ஷர்ட் துணி வாங்கச் செல்லும் போது கோல்டு கிரௌன் ரகங்களைத் தவறாமல் கேட்டுப் பார்வையிடுங்கள். அல்லது லக்ஷ்மி விற்பனை நிலையத்துக்கு விஜயம் செய்யுங்கள். உங்களது விருப்பத்துக்கேற்ற துணி வகைகளை லக்ஷ்மி வழங்குகிறது.



லக்ஷ்மியின்
கோல்டு கிரௌன்®
ஷர்ட்டிங்குகள்

தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயமுத்தூர்

FDS LM 2605 TAM